www.tamilarangam.net


# தமிழ் உலகம்
## London

அனைத்துலக தமிழ் சஞ்சிகை

இல. 7 May 2004

ee Issue

International Tamil Magazine





## 'பலாலி விமான தளம்' தமிழர் நெஞ்சில் ஓர் முள்



## தமிழ்த்தேசியத்தின் தலைமைக்கு இருவர்





## ஜனாதிபதி பிரதமர் இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்குமா?

## ஈராக் புதை குழிக்குள் சிக்கி நிற்கும் அமெரிக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# futture homes
Mortgage Specialist



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

போதிய வருமானம் குறைவு!
நிரந்தர முகவரி இன்மை!!
நீதிமன்றப் பதிவுகள்!!!
வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!
அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.



வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவிடும்.

மேலதிக விபரங்களுக்கு:- முரளி

**Futture Homes Ltd**
**Imex House, Oxgate Lane, London, NW2 7HJ**
**Tel: 0845 126 0622 / 020 8438 0615**
**Fax: 020 8438 0651**

---

## EYE EXAMINATION ★ SPECTACLES ★ CONTACT LENSES

# Tel : 020 8471 2277

**EXPERIENCE....**

## ELITE VISION

*Designer Frames :*

Calvin Klein
DKNY
*and others*

*Contact Lenses*
*Daily-Monthly-Coloured-Disposable*

இலவச கண் பரிசோதனைக்கு நீங்கள் உரிமையுடையவரா?

- *Aged 60 or over / Under 16*
- *16-18 in Full time Education*
- *Receive*
  - *Income Support*
  - *Income Based JSA*
  - *Working Families Tax Credit*
  *NHS Exemption Certificate*
  - *Disabled Person's Tax Credit*
  *NHS Exemption Certificate*
  - *HC2 Certificate*
- *Suffer from Diabetes / Glaucoma*

*Other groups also apply*

—WHERE EYECARE IS ELITE






உயர்தர கண்சேவைக்கு !
தமிழில் உரையாடி கண்களை பரிசோதனை
செய்து கொள்ளவதற்கு !
மேலும் விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**230,High Street North**
**East Ham**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்உலகம்
London

தமிழ்உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
Global Lanka Publications Ltd.
The United Kingdom

நிர்வாக / பொறுப்பாசிரியர்
சுப்பிரமணியம் கிருஷ்ணதாசன்

பிரதம ஆசிரியர்
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

உதவி ஆசிரியர்
பிரதீபா சபாநடேசன்

இணை ஆசிரியர் & வடிவமைப்பு
ஷர்மிளா ரெட்ணசிங்கம்

Head Office:-
TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

Sri Lanka Office:-
TAMILULAGAM
Meewella Building, 7th Floor
329, Galle Road,
Colombo - 04, Sri Lanka

Tel: 0094 112 59 1000
Fax: 0094 112 59 1003
E.Mail: tugloballanka@sltnet.lk

Printed by
Professional Systems Integrated Ltd.

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |

May 2004

# சக பக்கங்களில்

**அரசியலும் தற்கால நிகழ்வுகளும்**
தாயகம் - சமஷ்டி வேண்டாம்! சமாதானம் வேண்டும் என்னும் தென்னிலங்கை ........ 2
தனிமனிதனாகி விட்ட தளபதி ........ 4
புலம்பெயர் மண் - புலம்பெயர் மண்ணில் தமிழ் பொங்கியது ........ 5
உலகநோக்கு - ஈராக் புதைகுழிக்குள் ........ 6

**பொருளாதாரமும் அதன் வலிமையும்**
தாயகம் - பலாலி விமான தளம் - நெஞ்சில் ஓர் முள் ........ 8
உலகம் - உலக பணக்காரர் பட்டியல் ........ 10

**கலையும் கலாசாரமும்**
நாட்டாரியல் - கலாபூஷணம் தேவதாசன் ........ 12

**நேர்முகம்**
நீ.மரியசேவியர் அடிகளார் (இயக்குநர் - திருமறைக்கலாமன்றம்) ........ 14
தமிழரின் பாராளுமன்றப்படையணி ........ 15

**மலையகம்**
உழைக்கும் பெண்கள் உரிமை முழக்கம் ........ 16

**சமூகமும் சூழலும்**
உள்மருந்துகளின்றி நோய்களை குணப்படுத்தலாம் ........ 17
மகளிர் பகுதி ........ 18

**காலமும் மாற்றமும்**
பிரம்மஸ்ரீ சோ. சிவகடாட்ச சர்மா ........ 20

**காட்சியும் கானமும்** ........ 22

**வாசகர் எண்ணங்கள்** ........ 24

**எண்ணும் எழுத்தும்**
மழலைகள் மன்றம் ........ 26
கவி வலம் ........ 28
குறுக்கெழுத்துப்போட்டி ........ 29
சிறுகதை ........ 30

**உழைப்புச்சுரண்டல்** ........ 33

**பொழுதும் ஓய்வும்**
விளையாட்டு ........ 34

**சிறப்பு நிகழ்வு**
தமிழ் எம்.பிக்கள் - தலைவர் சந்திப்பு ........ 35

**விளம்பரமும் வியாபாரமும்**
மணமக்கள் தேடல் ........ 36

www.tamilarangam.net



தமிழ்மக்களுக்கென்று தனியான பிரச்சினைகளே இல்லை. இலங்கையின் ஒற்றையாட்சியை எவ்விலை கொடுத்தும் பாதுகாப்போம். அதிகார பரவலாக்கமோ, அதிகார பகிர்வு பற்றிய பேச்சுக்களோ இருக்கக்கூடாது. இது சிங்கள பௌத்த நாடு என்று உறுதியாக கூறவும், அதற்காக போராடவும் தயாராகியுள்ள புதிய



தம்மாலோக தேரர் வெளிப்படுத்தியிருக்கின்றார். 'ஜே.வி.பியின் வடக்கு,கிழக்கு தொடர்பான கொள்கைகள் எமது கொள்கைகள் போன்றவையே .... சமஷ்டி போன்ற ஒரு நிலைப்பாட்டுடன் ஜே.வி.பி உடன் படும் என்று நாம் நம்ப வில்லை. அத்தகைய (சமஷ்டி

# சமஷ்டி வேண்டாம்! சமாதானம் வேண்டும்!!

**தென்னிலங்கை பதில் கூறி விட்டது.** தமிழினத்தின் தேசிய பிரச்சினைகள் தொடர்பான அடிப்படைக்கோரிக்கைகள் மீது பௌத்த, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் தென்பகுதி, வலிந்து பெறப்பட்ட ஒரு தேர்தல் மூலம் கருத்து தெரிவித்திருக்கின்றது. தமிழ் மக்களுக்கும், முழு உலகத்தின் ஆலோசனைக்குமென தமிழ் உலகம் பெரிதும் எதிர்பார்த்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளது. இதே வேளை, ஐக்கிய இலங்கைக்குள் கௌரவமான சுதந்திரத்துடன் வாழும் தமது விருப்பத்தை 1977 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து வலியுறுத்தி வந்த தமிழினம், இந்த பொதுத்தேர்தலிலும் மாறாத தனது முடிவை தெரிவித்துள்ளது. அதாவது ஐக்கியமாக வாழ்கின்றோம். நவம்பர் 1 ஆம் திகதி சமர்ப்பித்த வகையிலான குறைந்த பட்ச அதிகார பகிர்வை இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கையின் பாராளுமன்றத்தில் எமது பிரச்சினைகள் ஆராயப்படும்போது அவற்றில் பங்கு பற்றுவதற்காக 22 பிரதிநிதிகளை அனுப்பியிருக்கின்றோம். உலக மக்கள் சாட்சியாக தென்னிலங்கை சார்பாக சமஷ்டிக்கு வழங்கிய உறுதி மொழி முழுமையான சட்ட அந்தஸ்துடன் அமுலாகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம். சிங்கள மக்களே! நாம் சாமாதானத்தை விரும்புகின்றோம். என்று ஏப்ரல் 2 ஆம் திகதி அறிவித்திருக்கின்றார்கள்.

ஆயினும், தமிழினத்தின் கோரிக்கைகள் தொடர்பாக ஏப்ரல் 2 ஆம் திகதி தென்னிலங்கை அளித்த பதில் எதிர்மறையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவுகளை நிராகரிப்பதாகவும், சமாதானத்துடன் முரண்படுவதாகவும் தோற்றம் தருகின்றது.

தலைமையொன்றை தென்னிலங்கை இத்தேர்தலில் தோற்றுவித்துள்ளது. எடுத்த எடுப்பிலேயே ஒன்பது பௌத்த பிக்குகளை எம்.பிக்களாக தெரிவு செய்துள்ளதுடன் , அந்தத் தலைமையின் தீர்மானத்தில் தங்கியே எந்தவொரு கட்சியும் நாட்டை ஆளக்கூடியதான ஆசனங்களையே பிரதான கட்சிகளுக்கும் தென்னிலங்கை வழங்கி



வாக்குச்சாவடியில்

யுள்ளது. தென்னிலங்கையின் இத்தீர்மானத்திற்கு கைமேல் பலனும் கிடைத்து வருகின்றது. தர்மராஜ்ஜியம் அமைப்பதற்கு தானும் தயார் என்று பௌத்த பிக்குகளை சந்தித்து ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய எனப்படும் பிக்குகளின் கட்சிக்கொள்கைகளையே முற்று முழுதாக அமுல் செய்ய விரும்பும் ஜே.வி.பி. கட்சிக்கும் தென்னிலங்கை 40 பாராளுமன்ற ஆசனங்களை வழங்கியிருக்கின்றது. இக்கட்சியே சிறுபான்மை அரசாங்கமொன்றை அமைத்துள்ள சுதந்திர முன்னணி அரசின் பிரதான பங்காளியாக இருப்பதுடன் அமைச்சர்களின் சத்தியப்பிரமாண வைபவத்தில் வைத்தே தமது கடும்போக்கையும் இக்கட்சி காண்பித்துள்ளது. தேர்தலின்பின்னர் ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டின் பிரகாரம் நிபந்தனைகளின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவு தர முன்வந்துள்ள பிக்குகள் அணியினருடன் ஜே.வி.பியினர் பெரும் கொள்கை உடன்பாடு கொண்டவர்கள் என்பதை அணியின் பிரச்சார செயலாளர் உடுவே

போன்ற) ஒரு நிலை உருவாகுமாயின் அதனை எதிர்ப்பதற்கு ஜே.வி.பியையே நம்பியிருக்கின்றோம்'2001 டிசெம்பர் 5 ஆம்திகதியில் வழங்கப்பட்ட மக்களாணையையே செயற்படுத்தும் விதத்தில் பிரதமர் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட காலத்தில் இருந்து அந்த ஒப்பந்தமே கூட செல்லுபடியானதல்ல என்று விமர்சித்து வந்த சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி தவிர்ந்த தோழமைக் கட்சிகளுக்கும் தென்னிலங்கை 66 எம்.பி.க்களை கொடுத்துள்ளது.

மொத்தத்தில் ஐ.ம.சு.முன்னணிக்கு கிடைத்துள்ள 106 ஆசனங்கள் மிகப்பெரும்பான்மையாக பௌத்த சிங்களவர் வாழும் பகுதிகளிலிருந்தே கிடைத்துள்ளன. சிறுபான்மை இனங்கள் வாழும் பகுதிகளில் வெளிப்படையாக முழு சமாதான நடவடிக்கைகளை சிறுபான்மை இனங்கள் வாழும் பகுதிகளில் வெளிப்படையாக சமாதான நடவடிக்கைகளை முன்மொழிந்து நின்ற ஐ.தே.முன்னணிக்கே வாக்குகள் கிடைத்துள்ளன. தமிழர் தரப்பின் கோரிக்கைகளுக்கு தென்னிலங்கையின் பதில் என்ன என்னும் கேள்விக்கு பதில்களை மேற்படி நிலைமைக்குள்ளிருந்தே தேட வேண்டியிருக்கும். சமாதான சூழல் வேண்டும் என்றும் ஆனால் விட்டுக்கொடுப்புகள் எதனையும் தென்னிலங்கை செய்யத்தயாரில்லை என்னும் வைராக்கியத்தையே தேர்தலில் தென்னிலங்கை வலியுறுத்தி நிற்கின்றது. ஐ.தே.முன்னணியின் தோல்வியடைந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வேட்பாளர் ஒருவரான கெமுனு விஜயரத்ன என்பவர் இது யுத்தத்திற்கு வழங்கப்பட்ட வாக்கு என தெரிவித்துள்ளார்.

இது ஒரு புறமிருக்க குழப்பங்களும், குளறுபடிகளும் முன்னுக்கு பின் முரணான நிலைப்பாடுகளும் மிகவும் அதிகரித்து அரசியற்சூழலை மிக நன்றாகவே மாசுபடுத்தி வரும் அசிங்கம் தெரிகின்றது. பொதுவான கொள்கைகளில் ஒத்த போக்கைக் கொண்டவர்களே ஒன்றிணைந்து ஒரு இயக்கமாகவும், ஒரு கட்சியாகவும் ஒரு முன்னணியாகவும் இயங்குகிறார்கள் என்று நம்புவதே மடமை என்றாகி விட்டதை தேர்தல்கால, தேர்தலுக்கு பிந்திய சம்பவங்கள் உணர்த்துகின்றன.

பொதுத்தேர்தலுக்கான நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும், வாக்களிப்புத்திகதிக்குமிடையில் இரு பெரும் அரசியற்கட்சிகள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்கள் தொடர்பில் குழம்பி நின்றன. ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரமுன்னணி மார்ச்ச 11 இல் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின் மார்ச் 21 ஆம் திகதி அதிலிருந்து வேறுபட்டதான இன்னுமொரு விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. ஆறு ஆண்டுகள் அமுல் செய்வதற்கென வெளியிடப்பட்ட விஞ்ஞாபனம் பத்தே நாட்களில் மாற்றப்பட்டது. இது தொடர்பான சர்ச்சைகள் உருவாகவே இரண்டாவது விஞ்ஞாபனத்தை 'ஒரு நடவடிக்கைத் திட்டம்' எனவும் விமர்சித்தது. தமிழரசுக்கட்சியின் கிழக்கு மாகாண வேட்பாளர்கள் சிலரும் கூட பிரகடனப்படுத்தப்பட்ட தலைமையின் கொள்கைகளுக்கு முரணாக வேறு கொள்கைகளை மக்கள் முன் வைப்பதற்கு தலைப்பட்டனர். எந்தக்கொள்கைகளுக்காக தாம் போராடுகின்றோம் என்பதையே புரியாத நிலையில் 'வழித்தடுமாற்றம்' அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. எது எவ்வாறாயினும், மக்களை நீண்டதொரு கால கட்டத்திற்கு பாதிக்கப்போகும் தீர்மானங்களை திடீர்,திடீரெனவும், முன் பின் முரணானதாகவும் எடுப்பதில் ஏதோ தவறு எங்கோ இருக்கின்றது. இது இலங்கையின் எதிர்கால சுபீட்சத்தை பாதிக்கப்போகின்றது என்பதை மக்கள் காண இருக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.பிரதமருக்கான வேட்பாளரின் பெயரை அறிவிக்காமல் மௌனம் காத்து வந்த சுதந்திர முன்னணித்தலைமை சிறுபான்மை அரசாங்கம் அமைவது உறுதியான பின்னர் லக்ஸ்மன் கதிர்காமர் பிரதமராகவிருப்பதை அறிவித்தது. இது தொடர்பில் எதிர்கட்சித்தலைவராக விருந்த மஹிந்த ராஜபக்ஸ, ஜே.வி.பி தலைமை என்பவற்றுடன் ஆலோசனை கலந்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகின. கதிர்காமர் பதவி யேற்புக்கு பி.பகல் 3 மணியும் (4.4.4.அன்று) நியமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பத்திரிகைகள் தலைப்புச்செய்திகளையும் கதிர்காமரின் படத்தையும் வெளியிட்டிருந்தன. சிங்களவரும் அல்லாத பௌத்தரும் அல்லாத ஒருவர் பிரதமராக பதவியேற்பதில் ஒரு புரட்சி இருப்பதாக நினைத்து பலரும் உன்னிப்புடன் அவதானித்தனர். ஆனாலும் பதவிப்பிரமாணம் நடைபெறவில்லை. சகல மாவட்டங்களின் பெறுபேறுகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் வெளியிடவில்லை என்று தாமதத்திற்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. 24 மணித்தியாலங்கள் கடந்த நிலையில் மறு அறிவிப்பும், பதவியேற்பும் நடைபெற்றது. பிரதமராக பதவியேற்றவர் கதிர்காமரல்லர். மஹிந்த ராஜபக்ஸவே. இதுவே தான் புரட்சியாக இருந்தது. தேர்தல் ஆணையாளரின் வர்த்தமானி அறிவித்தலை எதிர் பார்த்துக் காத்திருந்த 24 மணி நேரத்துள் கதிர்காமர் ராஜபக்ஸவாக மாறிய அதிசயம் நடைபெற்றது.

35 ஆண்டுகளுக்கதிகமான காலம் அரிசியலில் புரட்சிகளையும், கிளர்ச்சிகளையும் நடத்தி வந்த ஜே.வி.பி கட்சியின் தலைவர்கள் ஆளும் கட்சியின் 40 சதவீதமான எம்.பிக்களையும் பெற்ற நிலையில் அமைச்சரவையின் சத்தியப்பிரமாண வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நான்கே நான்கு அமைச்சுக்களில் இருந்து உள்ளுடன் திருடப்பட்டிருந்ததாம். அதாவது, சில முக்கிய பொறுப்புக்களான மகாவலி அபி விருத்தி, கால்நடை வளர்ப்பு என்பன அகற்றப்பட்டிருந்தனவாம். பேச்சுக்கள் வேறு, நடைமுறை வேறு என்றாகி விட்டிருப்பதாக ஜே.வி.பி ஆத்திரம் வெளியிட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்வுகள் பற்றி எதிர்வு கூறும் முன்னோடி நிகழ்ச்சிகளாக இவற்றைக் கொள்ளலாம்.

தமிழர்களின் இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சிகள் தொடர்பிலும் ஆயிரமாயிரம் குளறுபடிகளும், குத்துக்கரணங்களும் ஏற்படலாமென்பதையே மேற்படி நிலைப்பாடுகள் சுட்டிக் காட்டுகின்றன.சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தேர்தலுக்குத் தேர்தல் தமிழினத்தின் உரிமை கோரிக்கைகளை ஒவ்வொரு கட்சியும் தனது ஆட்சிப்பசிக்கு சாதகமாக பயன்படுத்தி வந்தது.

பாராளுமன்றத்திற்கும், ஒற்றையாட்சிக்கும் அப்பால் சிறிதளவும் விலகிச்செல்ல விரும்பாமல் நின்றது தென்னிலங்கை. அஹிம்சைப் போராட்டங்களுக்கு அவசரகால சட்டத்தை மருந்தாக கொடுத்து வந்தது. இலங்கையின் பெரும்பான்மையினப் பாராளுமன்றத் தினதும், ஒற்றையாட்சிப்பிடியினதும் எல்லைகளுக்கு வெளியே தமிழர்களின் பிரச்சினைகளை இழுத்து எடுத்தால் மட்டுமே மீட்சி என்பதை அனுபவ வாயிலாக புரிந்து கொண்ட தமிழர் தரப்பு, விடுதலைப்போராட்டத்தை ஆயுதம் கொண்டு முன்னெடுத்தது. இந்த இரண்டு தசாப்தங்களின் இறுதியில் தான் தென்னிலங்கை தனக்கு ஏற்பட்ட சங்கட நிலையை உணர்ந்தது. பிரச்சினை சர்வதேசமயமாகிய நிலையிலும் தென்னிலங்கை தமிழர் பிரச்சினையை பழைய பாணியில் கையாள முடியாதென்பதை புரிந்துகொண்டது. வரட்டுப்பிடிவாதத்திலிருந்து இறங்கி வந்த நிலையிலேயே அனைத்துலகத்தின் முன்னிலையில் சமஷ்டித்தீர்வை ஏற்றுக்கொண்டது.



ரணில் விக்கிரமசிங்க

ஆனால் கடந்த இரண்டு வருட காலம் நிலவிய போரற்ற நிலையை தென்னிலங்கை தவறாக புரிந்து கொண்டிருப்பது போல் தெரிகின்றது. யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றதேயன்றி இதுவே நிரந்தர சமாதானமல்ல என்பதை ஜனாதிபதி உட்பட முக்கிய தலைவர்கள் சுட்டிக்காட்டிய நிலையிலும், தமிழர் விவகாரத்தில் தென்னிலங்கை மீண்டுமொருமுறை தனது பழைய நிலைப்பாட்டிற்கே திரும்பிச் செல்வதுடன், அதில் சற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீவிரமான போக்கைக் கடைப் பிடிக்கவும் தீர்மானித்திருக்கின்றது. யுத்தத்தில் தென்னிலங்கை இளை ஞர்கள் பலியாகி வந்தபோது, தனி ஈழம் தவிர்ந்த வேறு எதனைக்கொடுத் தாவது சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அது கொண்டிருந்த நிலைப்பாட்டை சற்றே மறந்துள்ளது. இரண்டு ஆண்டு சமாதான சூழல் தரும் நிழலை நிஜமெனக்கருதிய படியே தொழில்வாய்ப்பு, வாழ்க் கைச்செலவு உயர்வு போன்றவற்றை சமாதானத்திற்கும் முன்பாக உயர்த் திப்பிடிப்பது தெரிகின்றது. அந்தச்சிந்த னையின் அடிப்படையிலான அரசியல் மற்றும் இனப்பிரச்சினைத்தீர்வு களுக்கும் பின்னோக்கிச் செல்கின்றது. பெரும்பான்மை இனப்பெரும்பான்மை கொண்ட பாராளுமன்றத்தினதும், ஒற் றையாட்சியினதும் எல்லைகளுக் குட்பட்ட தீர்வை எப்படியாவது திணித்து விடுவதில் காலங்கடந்த நிலையிலும் முனைந்து நிற்கின்றது. இதில் புதிய உத்வேகமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைப்பாடு பொதுத்தேர்தலில் தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சமாதான நிலைப்பாட்டிற்கு நேர் எதி ரானதாகும். அதே வேளை, தமிழர் களுக்கும், சமாதான அனுசரணை யாளர்களுக்கும், முழு உலகத்திற்கும் தென்னிலங்கை தரும் பதிலுமாகும்.

உறுதியான அரசாங்கமொன்றை அமைக்கப் போவதாகக்கூறிய ஜனாதி பதி, கணிசமானஅளவு பெரும்பான்மை யையும் சிறுபான்மை மக்களின் நல்லா தரவையும் பெற்றிருந்த அரசாங் கத்தை கலைத்து விட்டு நடத்திய தேர்தலில் சாதாரண பெரும்பான்மை கூட இல்லாத சிறுபான்மை அரசாங்கமே தேறியுள்ளது. ஒரு சாதாரண சட்டத்தையேனும் நிறை வேற்றும் வல்லமையற்ற பெரும்பான் மையுடன் சமாதான திட்டங்க ளையோ, சட்ட நிர்ணய சபையாக தொழிற்பட்டு அரசியற் சட்ட மாற்றங் களையோ எவ்வாறு கையாளப் போகின்றது? ஆடி மாதத்தின் அகோரக்காற்றில் பறக்கும் அம் மியை சளகு கொண்டு தடுக்கும் அப்பாவித்தனமான முயற்சிகள் பற்றி வரவிருக்கும் ஒரு சில மாதங்களே விபரிக்கவுள்ளன.

**-கலைவாணன்**

# தனி மனிதனாகிய தளபதி

கருணா தனி மனிதன் என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு விட் டது. வன்னியிலும் வடபுலத்திலும் புலிகள் அடைந்த வெற்றிகளுக்கும் கூட தனது படையணியே முக்கிய காரணியாகத் தொழிற்பட்டதாகக்கூறி இவர் செய்த வாய் வீச்சுக்கள் அவர் கண்முன்னாலேயே பிசுபிசுத்துப் போயுள்ளன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தலை மையிலான புலிகளின் தாக்குதல் தொடங்கியதுமே கிழக்கில் பணியேற் றிருந்த ஆயிரக்கணக்கான புலிப்படை யினர் மறுபேச்சுக்கும் மறு சிந்தனைக் கும் இடமின்றி அன்னையை அரவ ணைப்பது போல ஓடோடி வந்து அண் ணாவின் அணியுடன் கலந்துகொண்டு நிம்மதிப்பெருமூச்சை விட்டனர்.

இறுதி நேரத்தில் கருணாவுடன் இருப்பதற்கு ஒரு சில நூறுகள் கூட கிடைக்காத நிலை ஏற்பட்டது.கருணா ஒரு தனி மனிதன் என்று ஒரு மாதம் முன்னதாகவே புலிகளின் தலைமை பிரகடனம் செய்த வார்த்தைகளில் பொதிந்திருந்த உண்மையை உலகம் தனது நிஜக் கண்ணால் இப்பொழுது பார்க்கின்றது. பிரபாகரன் விரலை நீட்டி சுட்டிக் காட்டிய இடத்தில் புலி கள் ஒன்று சேர்ந்தனர் என்று வரலாறு இந்நிகழ் வைக்குறித்துக் கொள்ளும்.

கருணா தனிமனிதனாகியது எப்படி? 5000, 6000 பேர்கள் கொண்ட ஆயுதப் படையை கட்டுப்படுத்தி, பராமரித்து 18 ஆண்டுகள் வரையில் பல பொறுப் புக்களை வகித்தவர் தளபதி கருணா. இவரது ஆற்றலும் அனுபவமும் தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த நிலைக்குரியது. ஆனாலும் மனிதப்பலவீனத்தால் தடுமாற்றமடைந்த நிலையில் அவர் தன்னை பிணைத்து வைத்திருந்த கொள்கை, கோட்பாட்டு சிந்தனைப் பிணைப்பை திடீரென ஒரு குறுகிய காலத்தில் கைவிட்டு செயற்படத் தொடங்கினார்.

இதுவே அவரை புலிகளிடமிருந்து வேறுபடுத்தி தனிமனிதனாக்கி விடடிருக் கின்றது. நேரெதிரே தோன்றி நிற்கும் பலமான எதிரியை நேராக மோதி வெற்றிபெற முடியாது என்று கண்டு கொண்டால் அந்த எதிரியை நேரில் மோதுவது புலிகளின் போர் முறை யல்ல என்பதை எவரும் அறிவர். உரிய வாய்ப்பு வரும் வரை காத்தி ருப்பதும், எதிரியின் பலவீனமான பகுதி யில் தாக்குவதும் தோல்வியடையச் செய்வதும் புலிகளின் கொரில்லா போர் முறையின் அம்சங்களாகும்.

இந்த அடிப்படையில் வளர்ந்து 20 வருடங்களாக வெற்றிகள் பலவற்றைக் கண்டு வந்த புலிகள் அதனையே கருணா விடயத்திலும் பிரயோகித்தனர்.

எதிரியின் பலத்தைக்குறைத்து மதிப்பிடுவது புலிகளின் வழக்கமல்ல. கருணா புலிகளின் கிழக்கு மாகாண தலைமையில் ஆயுத பாணியாக இருந்தார். கிழக்கின் புலிகள் வாய்ப்பு வரும்வரை பொறுமையுடன் இருந்தனர். இந்நிலையை கருணா தனது சாதுரியத்தினால் பெற்ற வெற்றி என்பது போல நம்பினார். பிரபாகரனின் படையணிகள் நுழைந்ததுமே இது வரை ஆர் வத்துடன் காத்திருந்த புலி அணி யினர் புள காங்கிதம டைந்தனர். தலைவனின் படைக்கு தலைசாய்த்து அதனுடன் இணைந்தனர். இக்கட்டான சூழ்நிலை யைத் தவிர்ப் பதற்காக ஒரு மாத காலமாக நடித்துக்காட்டிக் கொண் டிருந்த புலிகளை இனங் கண்டறிய முடியாமல் போனமை கருணா எவ்வாறு தனிமனிதனாகினார் என்ற கேள்விக்கான முக்கிய பதி லைத் தருவதாக உள்ளது. ஆயிர மாயிரம் புலிகளை ஒரு அணியாக கட்டுப்படுத்தி வைத்திருந்தது ஒரே யொரு சிந்தனையே. இந்தச்சிந்த னையை ஒரு புலி வீரன் விட்டு விலகி தனி வழியில் சிந்திக்கத் தொடங்கும் போது தான் அவன் தனி மனிதன் ஆகின்றான். கருணாவே அதற்கு உதாரணமாகும்.



**தாயகக்கோட்பாட்டிலிருந்து விலகி தனி வழியில் சிந்திக்கத் தொடங்கும் போது தான் அவன் தனி மனிதன் ஆகின்றான்.**

**-நீரன்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலம்பெயர் மண்ணில் தமிழ் பொங்கியது!

கடந்த 5/4/2004 இல் சுவிஸ்சலாந்து நாட்டின் ஜெனீவா மாநகரில் அமைந்துள்ள உலக அமைதிக்கான சமாதானவான் என்று சொல்லக்கூடிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை(ஐ.நா) (United Nation Organization ) நோக்கிய பொங்கு தமிழ் எழுச்சிப்பேரணியானது சர்வதேச மட்டத்தில் மேலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும், அவர்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட தலைமையையும் ஆணித்தரமாக வேர் பதிக்கவைத்துள்ளது. தமிழீழப்போராட்டத்திற்கு புலம்பெயர் மண்ணில் வாழுகின்ற தமிழ் மக்களின் ஏகோபித்த பரிந்துரையாக தமிழ் தேசிய போராட்டத்தின் பரிமாற்ற நிலையை



அங்கீகரிப்பதாகவும், தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் என்பதையும், விடுதலைப்புலிகளே ஈழத்தமிழரின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்றும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளனர். முன்பெல்லாம் ஐ.நா வளாகத்தில் நடந்த எழுச்சிப் பேரணிகளுடன் ஒப்பிடும்போது இப் பொங்கு தமிழ் எழுச்சியானது அங்கு வந்திருந்த ஒவ்வொருவரின் ஆர்வமான உறுதி கொண்ட உணர்ச்சிகள் பொங்கிய திட காத்திர வெளிப்பாட்டை காட்டிநின்றது. இப்பேரணியில் பதினையாயிரத்திற்கும்





மேற்பட்ட தமிழ்மக்கள் உட்பட பல வேறு நாட்டவரும் கலந்து கொண்டது பெரு மைக்குரியதே. ஏகோபித்த சுவிஸ் சலாந்து தமிழர்களுடன் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் மற்றும் அமெரிக்க, வடஅமெரிக்க நாடுகளில் இருந்து கூட தமிழ் மக்கள் கலந்துகொண்டதும் குறிப்பிட வேண்டியதே.ஈழத்தில் இருந்து பொங்குதமிழின் ஆரம்ப கர்த்தாவான யாழ் பல்கழக்கழகப்பேராசிரியர் திரு சிதம்பரநாதன் அவர்களுடன், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாக, முத்த உறுத்தினர் திரு.கரிகாலன் மற்றும் மட்டு -அம்பாறை அரசியல்துறை பணிப்பாளர் திரு.கௌசல்யன் அவர்களும் வருகைதந்து உரையாற்றி இருந்தார் கள். ஈழவரின் தேசியத் தலைவரின் பிரமாண்டமான உருவப்படம், பொங்கல் பானை என்பன



அங்கு வந்திருந்த மக்களின் உணர்வில் உற்சாகத்தை ஊட்டின.

புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் இன்று தமிழீழ மீட்புக்கு வழங்கி வரும் ஒத்தாசையும், உதவிகளும் இன்றியமையாதது. எதிர்காலத்தில் சர்வதேச மட்டத்தில் உள்ள அமைப்புக்கள், ஸ்தாபனங்கள் மற்றும் பீடங்களுக்கு இப்புலம்பெயர் மக்களின் போர் எழுச்சிகளும், அழுத்தங்களும் தமிழீழ மீட்புக்கு ஒரு உந்துகோலாக அமைவதும் திண்ணம். அத்துடன் மக்கள்



எழுச்சியான இப்பொங்கு தமிழ் மற்றும் விடுதலைப்புலிகளின் இன்றைய அரசியல் ஆயுதமான தமிழ்த்தேசிய அமைப்பு (Tamil National Alliance ) என்பன புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின்



எதிர்கால போராட்டங்களுக்கு வழி கொடுக்கும் அமைப்பாக அமையும் என்பதும் அக்கறையான எண்ணங்களே. ஆயுதபலமும், அரசியல் பலமும், மனோபலமும் இருக்கும் வேந்தனையும் அவன் குடிமக்களையும் எந்த சக்தியாலும் வென்றுவிட முடியாது.

"அரசறம் மீட்கும் வேந்தனுடன் குடி படை சேரின் பிரமாஸ்திரம் கொண்ட படையும் செயலிழக்கும்"

*-மாராட்சியான்*
*இலண்டனில் இருந்து*



www.tamilarangam.net


# ஈராக் புதை குழிக்குள் சிக்கி நிற்கும் அமெரிக்கா

Shock and awe என்னும் பெயரில் ஈராக் மீது அமெரிக்கா தொடங்கிய போர் ஒரு ஆண்டினைக்கடந்து ஒரு மாதமும் ஆகிவிட்டது. சதாம் ஹுசை னின் கொடுங்கோன்மையிலி ருந்து ஈராக்கியர்களை விடுவிக்கவும், மனிதப்



பேரழிவு ஆயுதங்களைக்கண்டறி வதற்கும் ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தி, உலகிலிருந்து பயங்கர வாதத்தை ஒழிப்பதற்கும் என இந்த இராணுவ நடவடிக்கை தொடக்கி வைக்கப்பட்டது. இதனால் சதாமின் ஆட்சி ஒழிக்கப்பட்டது. சதாம் கைது செய்யப்பட்டார். ஆனால் அங்கு ஜனநாயகம் தோன்றவுமில்லை. பேரழிவு ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படவுமில்லை. கைப்பொம்மை அரசொன்றின் கையில் விடப்பட்ட மக்கள் பாதுகாப்பற்றவர்களாக ஆக்கப்பட்டும், அடிப்படை வசதிகள் இல்லாமல் வதைக்கப்பட்டும் வேலையில்லாத்திண்டாட்டத்தினுள் தள்ளப்பட்டும் ஆக்கிரமிப்பு படைகளினால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் உள்ளதையே காணக்கூடியதாவுள்ளது.

ஆக்கிரமிப்பில் ஒன்பது மாதங்கள் ஈராக்கை வைத்திருந்த பின்னரே சதாம் ஹுசைனை கண்டுபிடித்து கைது செய்ய முடிந்தது. அது நத்தார் பரிசு என கூறி மேற்கு வல்லரசுகளால் கொண்டாடப்பட்டதுடன், ஈராக்கின் கிளர்ச்சிகள் அடங்கி விடும் எனவும் பெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. சதாம் சர்வதேச சட்டங்களின் கீழ் ஒரு போர் கைதியாக கணிக்கப்படுவாரென்றும், ஈராக்கின் நீதிமன்றமொன்றில் விசாரிக்கப்படுவாரென்றும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஆனால் இதுவரை அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

அவருக்கு இதுவரை சட்ட உதவிகள் எதுவும் வழங்கப்பட்டிருக்க வில்லை. உறவினர்கள், நண்பர்கள் விஜயம் செய்து அவரை பார்ப்பதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வில்லை. சட்டவாளர்கள் சந்திக்க அனுமதிக்கப்பட வுமில்லை. ஓய்வொழிச்சலின்றி விசாரணைகள் நடத்தப் பட்டாலும் அவை மக்களுக்கு தெரியப்படுத் தப்படவில்லை. நீதிமன்றத்தின் முன் சதாம் நிறுத்தப்பட்டு, விசாரணைகள் நடத்தப்படுமாயின் ஆக்கிர மிப்பாளர்கள் பெரும் சங்கடங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.

ஈராக்கில் மரணத்தை தழுவும் அமெ ரிக்கர்கள் எண்ணிக்கை 700 ஐ எட்டிக் கொண்டிருக்கின்றது. 50,000 வரையான ஈராக்கியர்கள் மாண்டிருக்கலாம் என் றும் 11,000 வரையான ஈராக்கியர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஒன்றேகால் இலட்சம் அமெரிக்கப்படைகளும், அமெரிக்காவின் நட்பு நாடுகளின் 30,000 படைகளும் ஈராக்கில் நிலை கொண்டுள்ளன. இப்படைகள் எக்காலம் வரை அங்கிருக்கப் போகின்றன என்பதை எதிர்கால நிகழ்வுகளே தீர்மானிப்பவையாக இருக்கும். ஜுன் 30 ஆம் திகதி ஈராக்கியர்களிடம் ஆட்சியைக்கை யளிக்கும் நாடகத் திற்கு மெருகூட்டும் வித்தில் ஒரு கபட நாடகமாக சில ஆயிரம் படையினர் மீளப்பெறப்படவும்கூடும்.

ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத் தும் நடவடிக்கை என்னும் பெயரில் அமெரிக்கர்களால் வரையப்பட்ட ஒரு தற்காலிக அரசியற்சட்டத்தை ஈராக்கிய தேசிய கவுன்சில் (INC) ஒப்பமிட்டு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த கவுன் சிலே ஈராக்கின் ஆட்சியை ஈராக்கிய நிர்வாகத்திடம் ஒப்படைக்கவுள்ளது. ஆனால் மக்களால் தெரிவுசெய்யப் பட்ட தேசிய பேரவை ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்படும் வரை இதற்கு ஆட்சியுரிமை இருக்க முடியாது என்று இஸ்லாமிய புரட்சி கவுன்சிலின் தலைவர்களும், ஷியா முஸ்லிம் தலைவர்களான அல் சிஸ்ரானி போன்றவர்களும் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட இடைக்கால ஆட்சிச்சபை (PCA) யின் 24 உறுப்பினர்களை கொண்ட ஈராக்கிய தேசியக்கவுன்சிலே, அத னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப் பிடம் ஜுன் 30 ஆம் திகதி அதிகா ரங்களை கையளிக்க விருக்கின்றது. இதன் பின்னர் ஈராக்கின் இறைமை ஈராக்கியர் வசம் விடப்பட்டுள்ளதாக அமெரிக்காவினால் கூறமுடியும். அந்த இறைமையை கையில் வைத்துக்கொள்ளும் அமைப்பே, அமெரிக்கப்படைகள் அங்கு தொடர்ந்தும் நிலை கொண்டிருக்க வேண்டும் என்று அமெரிக்கா வைப்பார்த்து கோரிக்கை விடுவதாக இருக்கும். இந்நிலையில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் ஜோர்ஜ் புஷ் ஈராக்கியர்களிடம் இறைமை கையளிக்கப்பட்டு விட்ட தென்றும், படையினர் சிறிது சிறிதாக அமெரிக்காவுக்கு திரும்பிக்கொண்டி ருக்கின்றனர் எனவும் தேர்தல் பிரச்சாரத்தை நடத்த முடியும்.

**சர்வன்**

திட்டங்கள் இத்திசையில் சென்று கொண்டிருப்பினும் கள நிலைமைகள் மோசமாகிக்கொண்டு செல்கின்றன. அமெ ரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்பு படைகளுக்கெதிரான மக்கள் போராட்டம் திவிரமாக வெடித்து வருகின்றது. ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்திலேயே பல நூற்றுக்கணக்கானவர்கள் படையின ரால் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். பாலுஜா நகரில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது ஏவுகணைத்தாக்கு தலும் லேசர் குண்டுத்தாக்குதலும் நடத்தப்பட்டது. குடிமக்கள் 40 பேர் அதில் பலியாகினர். ஒரு ஆண்டுக்கு முன்னர் போர் தொடங்கிய காலத் தில் சதாம் ஹுசைனின் பிரி வினரும், எண்ணிக் கையில் ஷியாபிரிவினரில் குறைந்த வர்களுமான ஸுன்னி முஸ்லிம்களே படைகளை எதிர்த் துப்போரிட்டனர்.

அப்போது ஷியா முஸ்லிம்கள் அமெரிக்கப்படை களை தமது இரட்சகர்களாக நினைத்து வரவேற்பு அளித்தனர். இந்த ஒரு ஆண்டிற்குள் நிலைமை முற்றிலுமாக மாறி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







விட்டது. தம்மை அடக்கியாளும் சக்தியாக அமெரிக் கர்கள் இருப்பதை ஷியாக்களும் விரும்பவில்லை. இந்நிலையிலேயே ஆக்கிரமிப்புப்ப டையினருக்கெதிரான போர் தீவிரம் பெற்றிருக்கின்றது.

ஷியா மதகுரு ஒருவர் நடத்தி வரும் பத்திரிகையொன்றில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கட்டுரையொன்று இடம் பெற்றதைத் தொடர்ந்து பத்திரிகை அமெரிக்க தலைமை நிர்வாகி போல் பிரிமரால் தடை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஷியா பிரிவினரும் போரில் தீவிரமாக ஈடுபட்டனர். ஸுன்னி பிரிவினருக்கும் ஷியா பிரிவினருக்குமிடையே பிளவை வலுப்படுத்தி அதனை ஒரு சிவில் யுத்தமாக காண்பித்து, படைகளின் நிலை கொள்ளலை நியாயப்படுத்தலாமென்று கனவு கண்ட ஆக்கிரமிப்பாளருக்கு இது ஒரு பேரிடியாகவும் ஆகியுள்ளது.

பாலுஜாவில் கடந்த மாத இறுதியில் அமெரிக்க சிவில் ஒப்பந்தகாரர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதான தாக்குதலில் 12 படையினர் படுகொலை செய்யப்பட்டமை ஒரு திருப்பமாகும். ஆக்கிரமிப்புப்படைகள் இந்த நடவடிக்கையில் அங்கு பெருந்தொகையில் கொல்லப்பட்டமை இது முதல் தடவையாகும்.

இதனைத் தொடர்ந்து படையினர் கனரக ஆயுதங்களையும் பயன்படுத்தினர். எதிர்காலத்திலும் இது ஒரு தொடர்கதையாகவே இருக்கப்போகின்றது. மேலதிக படைகளுக்கான தேவையே அங்கு உண்மையில் உருவாகி ,வருகின்றது. ஈரா்க்கை ஈராக்கியர் வசம் விட்டு விடும் ஜுன் 30 ஆம் திகதி நெருங்க நெருங்க இந்நிலை உருவாகி வருகின்றது. அமெரிக்க இராணுவம் அங்கு தொடர்ந்து இருப்பதற்கு தேவையான சூழ் நிலையும் இதுவே. அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவே ஈராக் தனது இறைமையை பிரயோகிக்கலாம் என்னும் இராஜாங்க செயலர் கொலின் பவலின் விருப்பக் களுக்கேற்ப தேசிய கவுன்சிலின் செயற்பாடுகளும் இருக்குமெனபதால் இரண்டுக்கும் எதிரான இரு பிரிவு முஸ்லிம்களினதும் ஒருங்கிணைந்த போராட்டம் தொடரவே போகின்றது என நம்பலாம்.

இதே வேளை, அங்குள்ள கிளர்ச்சிக்குழுக்கள் பல இணைந்து ஆக்கிரமிப்புக்கெதிரான ஒரு இயக்க மாக செயற்பட முன்வந்துள்ளன. இது வர விருக்கும் காலங்களில் நடைபெறக் கூடிய நடவடிக்கைகளின் தீவிரம் பற்றி ஊகிக்க வைப்பதாகவுள்ளது.

விரைவில் பிரகடனப்படுத்தப்படவுள்ள எதிர்ப்பியக்க முன்னணியின் கொள்கைகள் பற்றி அதன் தலைவர்களில் ஒருவரான ஜபார் அல் - குபாஸ்ஸி தெரிவிக்கின்றார். அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து ஈராக்கை விடுவிப்பது, ஐ.நா. தலைமையிலான அமைதிப் படைகள் உள்ளிட்ட அனைத்து அந்நியப்படைகளையும் முற்றாக வெளியேற்றுவது, அமெரிக்கரின் எந்தவொரு ஆட்சி அதிகார அமைப்பும் சட்டவிரோதமானது.

ஆக்கிரமிப்பாளர்களுடன் ஈராக்கியாகள் எந்தவகையிலும் கூட்டுச் சேர்வதை அனுமதிக்க முடியாது. ஆக்கிரமிப்பாளரின் சேவையில் இணைந்துள்ள ஈராக்கிய பொலிஸார், அதிகாரிகள் உடனடியாக தத்தமது பொறுப்புக்களிலிருந்து வெளியேற வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் செய்த கொடுங் குற்றங்களுக்காக ஈராக்கிற்கு இழப்பீடும் நிவாரணமும் வழங்க வேண்டும்.

போராளிக்குழுக்கள் ஒன்றிணைந்த செயற்பாட்டை முன்னெடுக்கும்போது வல்லரசுகள் கூட நட்ட ஈடு வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்கள் கடத்தப்படுவது ஆக்கிரமிப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகளை நிலை குலைய வைக்கும்.

ஜப்பானில் மக்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஜுன் 30 ஆம் திகதி ஈராக்கியர் வசம் இறைமை கைளிக்கப்படுவதுடன் தனது படையினரை திருப்பி அழைக்கத்திட்டமிட்டுள்ளதாக ஸ்பெயின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள லூயி ரொட்றிகஸ் சப்பட்டேரோ கூறியிருக்கின்றார்.

மொத்தத்தில், ஒரு ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலையை பார்க்கிலும் பலமடங்கு மோசமான எதிர்ப்பு சூழல் ஈராக்கில் இன்று உள்ளது. அமெரிக்கர்களும், பிரிட்டனும் போட்ட கணக்கெல்லாம் பொய்த்து விட்டது. ஷியா, ஸுன்னி பிரிவினர் தம்மை ஈராக்கியர்கள் என்று மட்டுமே வெளிக்காட்டத் தலைப்பட்டு விட்டனர்.

வல்லரசுகள் ஆபத்துக்குள் சிக்கி விடும் சூழல் நெருங்கி வருகின்றது என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தாக்குதல்களை நிறுத்துமாறு அனைத்துத்தரப்பினரையும் ஐ.நா.பொதுச்செயலாளர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

ஒவ்வொரு அமெரிக்கபடையினரும் கொலை செய்யப்பட்டதும் அவருக்கான சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்பட்டு எண்ணிக்கை பதிவு செய்யப்படுகின்றது. ஆயினும், எத்தனை ஈராக்கியர்கள் இறந்தார்கள் என்பதற்கு சரியான கணக்கு கூட இல்லை. 55,000 பேர் வரையாக இருக்கலாம் என்று ஊகிக்கப் படுகின்றது. அமெரிக்காவின் கண் மூடித்தனமான தாக்குதல்கள் அது கதி கலங்கிப்போயுள்ளதையே காட்டுகின்றது.

www.tamilarangam.net

# 'பலாலி விமான தளம்' தமிழீழ நெஞ்சில் ஓர் முள்

**'பலாலி' என்னும் சொல் என்ன மொழிச்சொல்லாயினும், என்ன அர்த்தத்தைக்கொண்டிருப்பதாயினும், கருத்தே இல்லாததாயினும் கூட இலங்கைத்தமிழர்களை, குறிப்பாக வடபகுதித் தமிழர்களை பொறுத்தவரை அதற்கு ஒரு அர்த்தம் இருக்கின்றது. அதாவது தமிழர்களின் பொருளாதார வலுக்கோட்டையாக தொன்று தொட்டு இருந்து வந்த இப்பகுதி இன்று தமிழர்களை நிரந்தரமாக ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரசுகளின் வலுக்கோட்டையாக கர்ச்சித்து நிற்கின்றது. வடபகுதியின் பிரதான படைத்தளமாக – வான்படைத்தளமாக அண்மைக்காலத்தில் பயன்பட்டு பல்லாயிரம் பேர்களின் உயிர்களைப்பலி கொண்டு ஏப்பம் விட்டு நிற்கின்றது. அவ்வளவு தான் அல்ல. பொருளதார வளங்களின் அழிவுக்குக்காரணமாகவும், விவசாயப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு நிற்பதும், இதனால் தேசிய பொருளதார வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக உள்ளதுமாகும்.**

**தமிழர்களின் ஞாபகத்தில் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் மக்களின் ஞாபகத்தில் பலாலி ஒரு இயமனாக நிலைத்து நிற்கும் ஒன்று. கடந்த 2 தசாப்தங்களில் வடபகுதியில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் அம்மா எனும் சொல்லை உச்சரித்த தடவைகளிலும் மிக அதிகமானதடவைகள் உச்சரித்த சொல் பலாலி என்பதாகவே இருக்கும்.**

**இன்று நரகத்து முள்ளாக – புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயமும் பலாலி விஸ்தரிப்பின் அம்சமே! இதனால் இன்னும் பல தசாப்தங்களுக்கு இச்சொல் வடக்கு மக்களின் உதடுகளில் பல்லாயிரம் தடவைகள் புரளப்போவதுமாகும்.**

**பலாலி தளமாகியது எப்படி எனும் ஆய்வை இப்பொழுது மத்திய கல்லூரி அதிபராக உள்ள க. இராசதுரை அவர்கள் 14 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'முரசொலி' பத் திரிகையில் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தார். அதனை நன்றியுடன் மீள் பிரசுரம் செய்கின்றோம்**




வானுயர்ந்து நீண்டு வளர்ந்த பனந்தோப்புக்கள் நிறைந்தது பலாலி. யாழ்ப்பாணத்தின் பயிர்ச்செய்கையில் உச்சப்பயனளிக்கும் செம்மண் அதன் சொத்து வைரித்த நெஞ்சம் கொண்ட தமிழர்களைப்போல் வைரச்சுண்ணக் கற்கள் செம்மண்களுக்கிடையே நிமிர்ந்து - பரந்து நிற்கும் வட திசையில் திரைகடல்ஓடி திரண்டு செம்மண்ணையும் வெண் மண்ணையும் இணைத்து அம்மண்ணுக்கு முத்தம் கொடுக்கும் கடல் வளமும் இங்கு நிறை உண்டு.

## பாப்பரசர் ஆசி

சைவர்களும், கிறிஸ்தவர்களும் இணைந்து வாழும் இப்பிரதேசம் 1960 ஆம் ஆண்டளவில் அப்போதைய பாப்பரசர் 23 ஆவது அருளப்பராலும் ஆசிர்வதிக்கப்பட்டதை கிறிஸ்தவர்கள் நினைவு கூர்ந்து மகிழ்வர். பலாலியைச்சேர்ந்த யோசேவ் புலேந்திரன் ஆபிரிக்க நாட்டில் புரிந்த சேவையைப்பாராட்டிய பாப்பரசர், "உம்மைப்பெற்ற பலாலி புகழ் பெறுவதாகுக!" என்று ஆசிர்வதித்தார்.

## கேந்திர நிலையம்

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை அது. பிரித்தானியரது அதிகாரத்தில் இலங்கை முழுவதும் அடிமைப் பட்டிருந்த காலம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்ட பிரித்தானிய அரசு தனது சகல வளங்களையும் பயன்படுத்தியது. இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக இலங்கை விளங்கியது. இதனால் இலங்கையில் குறைந்தது பதினைந்து விமானத்தளங்களை அமைக்க பிரித்தானிய அரசு அமைக்க பிரித்தானிய யுத்தக்காரியாலயம் (War Office) தீர்மானித்தது. பிரித்தானிய யுத்தக் காரியாலயம் கிழக்கில் நான்கு பிரிவாக பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

1. தென்கிழக்காசிய அணி (South East Asian Command)
2. அண்மைக்கிழக்கு நாடுகள் அணி (Near East Command)
3. மத்தியகிழக்கு நாடுகள் அணி (Middle East Command)
4. தூரகிழக்கு நாடுகள் அணி (Far East Command) என வகுக்கப்பட்டு தென்கிழக்காசிய அணி பிரபு லூயிஸ் மவுண் பேற்றன் (Lord Louis Mountbatten) தலைமையில் இயங்கியது.

## வடக்கில் ஒரு தளம்

இலங்கையில் அமையும் பதினைந்து விமான தளங்களில் ஒன்றை வடபகுதியில் நிறுவுவதென தீர்மானிக்கப்பட்டது. இந்தியாவுடன் தொடர்பு வைக்க இது தேவையாக இருந்தது. அப்போதைய இரண்டாம் உலக யுத்தத்திற்கு இலங்கையின் இறப்பரும் உலகப்புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலைத் துறைமுகமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியூகினி, பொஸ்கா, மாலைதீவு, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கான பாதுகாப்புக்காக இந்து சமுத்திரத்தின் முக்கியத் தளம் இலங்கையில் இருப்பதை பிரித்தானியா விரும்பியது. இதற்கான விமானத்தளத்தேவையும் உணரப்பட்டு வடபகுதியில் அமையும் விமானத்தளத்துக்கு உகந்த இடங்கள் தெரிவு செய்யும் பணி ஆரம்பமாகியது.

## பலாலி தெரிவாகியது

வடபகுதியில் விமானம் இறங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வதற்கு ஏற்ற நிலங்கள் பல பார்வை யிடப்பட்டன. விமானம் இறங்கும்போது அதன் அமுக்கத்தைத்தாங்கும் நிலங் கள் பல பரிசோதிக்கப்பட்டன. நீர் வேலி, கல்லுண்டாய் வெளி, வல்லை வெளி, கைதடி, புத்தூர், வளலாய் வெளி போன்ற இடங்களில் ஆரம்பத் தில் சிறிய விமானம் இறங்கும் பரீட் சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. இவ்விடங்கள் அதற்குகந்த தாக உணரப்படாமையினால் கைவிடப் பட்டன.

பலாலியின் தற்போதைய விமான நிலையத்தின் மேற்கில் பரீட்சார்த்த விமானம் இறக்கப்பட்டது. விமான நிலையத்திற்கு மிகப்பொருத்தமான இடமாக அது அமைந்தமை தென் கிழக்காசிய அணியினருக்கு மகிழ்ச் சியைத்தந்தது. அப்போது இலங்கை இராணுவத்திற்கு பொறுப்பாக இருந் தவர் ஜெனரல் கொப்பிறே லெயிற்றன் (Godfrey Layton) இவர் பலாலியை தெரிவு செய்தார்.

## காணிகள் சுவீகாரம்

பலாலியை விமானத்தளமாக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. விமானத்தளத்திற்குத் தேவை யான காணியினை அரசு கட்டாய மாக (Requistion) எடுத்துக் கொண் டது. விளாத்தியடி, அருகு, நொங்க சிட்டி, தேளான் வெளி, குளக்கரை, வாகுபனை, மல்லம்பாதி, வெள்ளு ருவை, வன்னியங்கா வெட்டி, சூடு கட்டுவன்,காட்டுக்குடியிருப்பு, சகுனியா கிணத்தடி, விளாங்கங்காடு, ஒல்லை என்ற பெயருடைய காணிகளே இவ் வாறு அரசால் எடுக்கப்பட்ட காணி களாகும். இக்காணிகளில் குடியிருந்த மக்கள் அகற்றப்பட்டனர். சாத்திரியார் என்றழைக்கப்பட்ட திரு. வன்னியர் கதிரிப்பிள்ளை என்பவர் மட்டும் தனது இடத்தை விட்டு அகல மறுத்து விட்டார்.

அவரைப்பலாத்காரமாக அகற்ற அரசு விரும்பவில்லை. ஏனைய காணி கள் சுத்திகரிக்கப்பட்டன. காலப்போக் கில் திரு. கதிரிப்பிள்ளை தாமாகவே காணியை விட்டு வெளியேறினார். விமான தளத்திற்கான காணிகள் விரைவாகத்திருத்தப்பட்டன. இதற்காக ஆரம்பத்தில் ஓடு பாதைக்கு (Run-way) மட்டும் ஏழு கிணறுகளும் அவற்றுக்கான தோட்டங்களும், குடி மனைகளும் நட்ட ஈட்டு அடிப்படை யில் அகற்றப்பட்டன.

## கேரளத்திலிருந்து தொழிலாளர்

தளம் அமைக்க உடயனடியாக ஐயாயிரம் தொழிலாளர்கள் தேவைப் பட்டனர். உள்ளூரில் இவ்வளவு பெருந்தொகையான தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. இந்திய கேரள மாநிலத்தைச்சேர்ந்த கொச்சி மாவட்டத் தில் இருந்து 800 தொழிலாளர்கள் 1942 ஆம் ஆண்டு மாசி மாதம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டனர். அவர் களைக்காங்கேசன் துறைமுகத்தில் கப்பல் கொண்டு வந்து இறக்கியது.

தொழிலாளர்கள் நடைபாதை வழியாக பலாலிக்குக் கொண்டு வரப் பட்டனர். இத்தொழிலாளர்கள் பாறாங் கற்களைப் பெயர்க்கும் தொழிலில் ஈடு படுத்தப்பட்டனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து தொழிலா ளர் கொண்டு வரப்பட்டமை சுதேசிய தமிழ் மக்களுக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்தியது. எனினும் பிரித்தானிய அரசின் ஆதிக்கத்துக்கு தமது எதிர்ப் பைக்காட்ட முடியாது மக்கள் தமது மனதுக்குள் புழுங்கினர். வெள்ளைக் கார ஆட்சியையே மனதார வெறுத் தனர். இவ்வெறுப்புணர்ச்சி கொச்சியார் மீதும் திரும்பியது. கொச்சியாரை எதிர்க்க சுதேசிகள் துணிந்தார்கள்.

## மொண்டிகள்

பலாலி, வசாவிளான், வளலாய்ப் பகுதிகளில் வேலைக்கமர்த்தப்பட்டனர். இவர்கள் கல்லுக்கிளறும் இடங்கள் 'மொண்டி' என அழைகப்பட்டது. பலாலி தெற்கு தெழுந்தை மொண்டி, வசாவிளானிலுள்ள போயிட்டி மொண்டி (தற்போதைய சுந்தரபுரம்) குப்பிளான் மொண்டி வளலாய் மொண்டி, நிலாவரை மொண்டி என்பவற்றில் பலாலி ஓடுபாதைக்குரிய கற்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

மாரிகாலத்தில் தெல்லிப்பளைக்குப் பயணம் செய்பவர்கள் குரும்பசிட்டியை சுற்றிச்செல்ல நேர்ந்தது. விமான ஓடு பாதைக்குத் திட்டமிடப்பட்ட தென்பகுதி மாரியில் இயல்பாகவே குளமாகுவது வழக்கம். சிலர் வாழைக்குற்றிகளை பிணைத்துக்கட்டியும், ஆமையோடு களையும் தெப்பமாகப்பாவித்து கட்டு வன் வரை சென்றனர். இப்பகுதிகள் பின்பு மொண்டிகளில் எஞ்சும் கல்லும் மண்ணும் கொண்டு நிரப்பப்பட்டன.

## சுதேசிகள் வியாபாரம்

கொச்சியாருக்கு சுதேசிகள் திட்ட மிட்டு தமது பொருட்களைக்கூடிய விலைக்கு விற்றார்கள். அக்காலத்தில் ஒரு பணம் என்று கூறப்பட்ட ஆறு சதத்திற்கு பெறப்பட்ட ஒரு றாத்தல் சூடை வகை மீன்கள் பொரித்தெடுக் கப்பட்டு ஒரு மீன் பத்துச்சதமாக அவர் களுக்கு விற்கப்பட்டது. தொழிலாளர் களுக்கு அவர்களது வேலைத்தளங் களில் வைத்து தேநீர், மதிய உணவு என்பன எடுத்துச்சென்று வழங்கப் பட்டன. குடிநீர் வளலாய் பிள்ளை யார்கோவிலில் இருந்து எடுக்கப்பட்டு பவுசர்கள் மூலம் விநியோகிக்கப் பட்டது. உள்ளூர்த்தொழிலாளர்கள் இரண்டு மொண்டிகளில் தமது பெயரைப்பதிந்து ஓரிடத்தில் மட்டும் வேலை செய்து இரண்டுக்குமேற்பட்ட சம்பளம் பெற்றுக்கொண்ட சம்பவங் களும், வேலைகளில் பரிச்சயமற்ற வர்களும் வேலைக்குச் சென்று சமா ளித்த சம்பவங்களும் இடம்பெற்றன.

## பலமான ஓடுபாதை

தொழிலாளர்களைக்கொண்டு 3600 அடி நீளமான ஓடு பாதை அமைக்கப்பட்டது. இலங்கையில் அமைக்கப்பட்ட பதினைந்து விமான தளங்களில் பலமான ஓடுபாதையாக பலாலி விமான தளமே இன்றும் கருதப்படுகின்றது. கட்டுநாயக்கா விமானதளம் கூட, செயற்கையாக நிலத்துக்கடியில் 8 அடி கொங்கிறீட் போடப்பட்டு பலமானதாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சர்வதேச விமான தளமொன்றிற்கு பதினேழாயிரம் அடி நீளமான ஓடுபாதை தேவையாகும்.

## கட்டிடங்கள் எழுந்தன

பலாலி விமானதளத்தில் கட்டி டங்கள் அமைக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. வைத்திய சாலை தோட்டங்கள், வீடுகள், ஓடு பாதைகளுக்குள்ளிருந்த ஏனைய கிணறுகள் அழிக்கப்பட்டாலும் எல் லைப்பகுதிகளில் இருந்த இந்துக் கோவில்கள் பாதுகாக்கப்பட்டன. அமையவிருக்கும் விமானப் படைக் குரிய வைத்தியசாலையும் சம காலத்தில் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டது. சுமார் ஒன்பது ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கப்பட் டது. இதுவே றோயல் விமானப்படை வைத்தியசாலை (Royal Air Forse Hospital). இது தற்போது பழைய ஆஸ்பத்திரி என அழைக்கப்படு கின்றது.

## சுதேசிகள் கொச்சியார் மோதல்

விமான நிலைய வேலைக்கென கொண்டு வரப்பட்ட கொச்சியாருக் கும், சுதேசிகளுக்குமிடையில் வளர்ந்து வந்த பகைமையுணர்வு பெண் விவகாரமொன்றினால் கலக மாக வெடித்தது.

கிராமத்துக்குள் வந்த கொச்சி யார் சுதேசிகளால் தாக்கப்பட்டனர். பிடித்துக்கட்டி வைக்கப்பட்டனர். கட்டி வைக்கப்பட்ட வர்களை மீட்க கொச்சியார் பாலாவி, வசாவிளான் கிராமங்களின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டனர். (தொடரும்)

# உலக பணக்காரர் பட்டியல் - RICH LIST 2004

**2004** ஆம் ஆண்டுக்கான பணக்காரர் பட்டியலைப் பார்ப்பதற்கு முதல் நான் உலகில் எத்தன்னையாவது பணக்காரன் என பார்ப்பதற்கு ஆவல்ப்பட்டேன். கணினி ஊடான இணையத்தளம் ஒன்றினுள் சென்று பார்த்தேன். மிக்க மகிழ்ச்சி காரணம் என்ன தெரியுமா என்னை விட குறைந்த பணக்காரர்கள் இவ்வுலகில் 5,835,652,173 பேர் இருக்கின்றார்கள் என்பதுதான். அத்துடன் கவலையான விடயம் எனக்கு மேல் 164,347,827 பேர் இருக்கிறார்கள் என்பதே? இலண்டனில் இருந்தபடியால் இப்படியாவது இலங்கையில் இருந்தால்,...? கடவுளே!

**இதைப்படியுங்கள் :-**

You are in the top **2.73%** richest people in the world.

There are **5,835,652,173** people poorer than you.

How do you feel about that? A bit richer we hope. Please consider donating just a small amount to help some of the poorest people in the world. Many of their lives could be improved dramatically or even saved if you donate just one hour's salary (approx **£17.36**)Oh, and in case you're interested you are the **164,347,827** richest person in the world.

நீங்கள் உலகில் எத்தனையாவது பணக்காரர்? இதோ இணையத்தள முகவரி: http://www.globalrichlist.com

உலக பணக்காரர் பட்டியலை ஆராந்து பார்த்தால் வியாபரரிகளே அதி கூடிய பணபலம் உடையராகவுள்ளார்கள். டாக்டர்களாகவும், எஞ்சினியராகவும் ஏக்கவுண்டனாகவும் இருந்தால் இப்பட்டியலில் வரலாமா...? மேலும் பார்ப்போம்.

பொருளாதாரம் ஒரு மனிதனின் நிலையை மட்டுமன்றி நாட்டையே மாற்றி அமைக்கும் என்பது இன்றைய உலக நடப்பு. பொருளாதாரத்தில் மேலோங்கி அபிவிருத்தியில் நிற்கின்ற நாடுகள் உலகில் எல்லாத்துறைகளிலும் பலம் வாய்ந்தனவாகவும் முன்னணியிலும் நிற்கின்றன. ஜநனாயக நாடுகளில் முதலாளித்துவ நிலைகளுக்கு பலமான பாதுகாப்புகள் இருப்பதால் முயற்சியின் வேகங்கள் சாதாரண மனிதனையும் பணக்காரனாக்கி விடும். இதன் அடிப்படையில் இங்கி லாந்தில் 1965ஆம் ஆண்டு பிறந்த ஜேன் றாவ்லிங் என்ற பெண்மணி தனது பெற்றோருடன் 9 வயதுவரை துச்சில் எனும் கிராமப் புறத்தில் அமைந்த சிறு வீட்டில் வாழ்ந்து வந்தார். சாதாரண குடும்பபெண்ணான இவர் தனது 6 வயதில் இருந்து சிறு புத்தகங்களை எழுதி வெளியிட்டுவந்திருந்தார். தனது 27 வயதில் திருமணம் செய்த இவர் துரதிஷ்டவசமாக விவாகரத்து பெறவேண்டியவரானார். ஒரு குழந்தைக்குத்தாயான இவர் அரச கொடுப்பனவிலே வாழ்ந்து வந்தார். சிறிய வயதில் இருந்து எழுத்துத்துறையில் அனுபவம் பெற்ற இவர் **Harry Potter** என்ற நாவலை எழுதியதால் இவரின் தலை எழுத்தும் மாற்றப்பட்டது. உலகில் பல நாடுகளில் போட்டிக்குப்போட்டியாக விற்பனையாகிய இந் நாவல் மூலம் சாதாரண பெண்மணியாகிய இவர் தற்போது பணக்காரப்பட்டியலில் வந்துள்ளார். 10 வருடங்களுக்கு முன் அரசாங்க உதவிப்பணத்தில் வாழ்ந்த இவரின் இன்றைய சொத்தின் பெறுமதி 438மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும். தான் மகாராணி எலிசபத் IIஐ விட பணக்காரி என கூறி பெருமிதமடைந்துள்ளார். உலகிலேயே எழுத்துத்துறையில் முதலாவது பணக்காரர் இவரே.



ஜேன் றாவ்லிங்

உலக பணக்காரப்பட்டியலில் முதல் 100 பேர்களுக்குள் அமெரிக்கர்கள் 20 பேர் அடங்கு கிறார்கள். இன்றைய உலகநடப்பில் அமெரிக் காவின் மிதமிஞ்சிய பணபலமானது உலக அரசியல்களை மாற்றியும் மாற்றிக்கொன்டும் இருக்கிறது.

*பார்த்தால் விளையாட்டு! உள்ளே மாபெரும் வர்த்தகம்!!*

ஓய்வும் பொழுதும் என்ன வென்றால்? பத்திரிகை வாசிப்பது பந்து விளையாடுவது என நாம் கதைகளை சொல்லிக்கொண்டு போனாலும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் விளையாட்டு என்பது (Sports) பெரும் வர்த்தகமாகவே நோக்கப்படுகின்றது. கோடிக் கணக்கான பணம் விளையாட்டுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்தியாவில் திரைப்பட ரசிகர்கள் எப்படி நடிகர்களுடன் இரசிகர் மன்றங்களில் அங்கத்தவர்களாக இருக்கிறார்களோ அப்படியே ஐரோப்பிய நாடுகளில் விளையாட்டு கழகங்களில் இம்மக்கள் அங்கத்துவர்களாக இருக்கிறார்கள். இங்கு வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே விளையாட்டுத்துறைக்கு இடங் கொடுக்கப்படுகிறது. உதை பந்தாட்ட கழகங்களை வைத்திருப்பவர்களும் உதைபந்தாட்ட வீரர்களும் கோடீஸ்வரர்களே. இங்கிலாந்தின் முதலாவது பணக்காரப்பட்டியலில் இடம்பெற்றிருப்பவர் யார் தெரியுமா? இங்கிலாந்தின் பிரபல உதைபந்தாட்டக்கழகங்களில் ஒன்றான சேல்ஸ்சி (Chelsea Football Club) விளையாட்டுக்கழகத்தின் சொந்தக்காரர். 37 வயதான இவர் ராசிய நாட்டு எண்ணெய் நிறுவனங்களின் சொந்தக்காரருமாவர். தற்போது பிரித்தானியாவில் நிரந்தரமாக இருக்கும் இவர் £7,500 Million ஸ்ரேலிங் பவுண்களுக்குச் சொந்தக்காரர். ஐரோப்பியப் பணக்காரப் பட்டியலில் இவர் 6ஆம் இடத்தை வகிக்கிறார்.



## The Football Millionaires

இங்கிலாந்தின் உதைபந்தாட்ட விளையாட்டின் மூலம் வந்த பணக்காரர்களும் அவர்களின் பெறுமதியும்

| இல. பெயர் | விளையாட்டுக்கழகம் | பெறுமதி |
|---|---|---|
| 1 Roman Abromovich | Chelsea Football Club | £7,5000m |
| 2 Joseph Lewis | Tottenham | £1,800m |
| 3 The Moores family | Liverpool | £1.162m |
| 4 Trevor Hemmings | Preston | £700m |
| 5 The Walker family | Blackburn Rovers | £650m |
| 6 David Sullivan | Birmingham | £550m |
| 7 David Gold | Birmingham | £495m |
| 8= Mohamed al-Fayed | Fulham | £470m |
| 8= Harry Dobson | Manchester United | £470m |
| 10 David Murray | Rangers | £450m |

அரசியல்வாதிகளும் சும்மாவா இருக்கிறார்கள் பணம் இல்லாவிட்டால் அரசியலும் இல்லையே!ஒரு காலத்தில் உலகை ஆண்ட பரம்பரையில் வந்த பிரித்தானிய மகாராணியாரே உலகில் முதலாவது பணக்காரியாய் இருந்தார். காலம் எப்போதும் ஒரேமாதிரி இருப்பதில்லை. இன்று மகாராணியாருக்கு முன் 177 கோடீஸ்வரர்கள் வந்து விட்டார்கள். இன்று இவரின் சொத்துகளின் பெறு மதி £250millions ஸ்ரேலிங் பவுண்களாகவுள்ளது. அரச பரம்பரை ஆட்சியும் இன்று நலிவுற்றே பயணிக்கிறது.

www.tamilarangam.net





பிரித்தானிய மகாராணி

அரசியல் கட்சிகளை நடாத்துவதற்கும் நிறைய பணம் தேவையே. அரசாங்கங்களை நிர்ணயிக்கும் நிலையை பெரும் நிறுவனங்களும், கோடீஸ்வரர்களுமே நிர்ணயிக்கிறார்கள். பிரித்தானியாவின் இரு பெரும் கட்சிகளான தொழிற்கட்சி (Labour Party), பழமைபாது காப்புக்கட்சி (Conservative party) இவற்றிற்கு நிதி அன்பளிப்பு வழங்கிய நிறுவனங்களும் தொகைகளும்.

| இல. | நிறுவனம் | தொகை | அரசியற்கட்சி |
|---|---|---|---|
| 1 | Loar Sainsbury | £2,500,000 | Labour |
| 2 | Sir Chritopher Ondaatje | £1,000,000 | Labour |
| 3 | Stuart Wheeler | £514,500 | Consetvative |
| 4 | Lord Hamlyn | £500,000 | Labour |
| 5 | Sri Anthony Bamford | £260,663 | Conservative |

இப்படி பல நிறுவனங்கள் அரசாங்கத்தை நடாத்துகின்றன. அரசாங்கங்கள் நிறுவனங்களுக்கும், நிறுவனம் அரசுக்கும் ஒத்தாசையாகவே இருப்பது பொதுவான விடயமே.



லாக்மி மிற்ரால்

இங்கிலாந்தில் 5ஆவது பெரும் பணக்காரர் யார் தெரியுமா? உலகிலேயே இரண்டாவது இரும்பு உற்பத்தி நிறுவனத்திற்குச் சொந்தக்காரராகிய 47 வயதுடைய இந்தியரான லாக்மி மிற்ரால் என்பவரே.

இவர் 1970 இல் வர்த்தகத்துறையில் உயர்கல்வி முடித்தபின், 1976இல் இந்தோனேசியாவில் Ispat Indo எனும் நிறுவனத்தை ஆரம்பித்து தொடங்கிய வியாபாரம் இன்று இவரை மாபெரும் கோடீஸ்வரர் ஆக்கியுள்ளது.

இவரின் சொத்து £3,500 மில்லியன் ஸ்ரேலிங்பவுண்களாகும். இன்று அவர் ஒரு பெரும் இரும்பு வியாபாரியாக உள்ளார்.

## Lakshmi Mittal : career profile

1970: Gained degree in commercial studies

1976: Establishes Ispat Indo, Indonesia

1989: Leases Iscott, Trinidad & Tobago

1992: Enters Mexican market

1994: Buys Sidbec-Dosco, Canada

1995: Buys Hamburger Stahlwerke, Germany

1995: Moves HQ to London

1995: Enters Kazahkstan market

1996: Buys Irish Steel

1997: Ispat International floated

2001: Irish Steel closed

2001: Buys Sidex plant, Romania

இங்கிலாந்தின் 11வது பணக்கராராக இருப்பவர்கள், 69வயதுடைய சிறி என்ற இந்தியரும் அவரின் சகோதரரான 64 வயதுடைய போபி ஆவர். இவர்களின் மொத்தச்சொத்து



சிறி என்ற இந்தியரும் அவரின் சகோதரரும்

£2,100 மில்லியன் ஸ்ரேலிங்பவுண்களாகும். இருவரும் வர்த்தக நிதி வியாபாரிகள்.

இவர்கள் கோடீஸ்வரர்களாக இருந்தாலும் 1986 இல் சுவீடன் நாட்டு ஆயுத நிறுவன வியாபாரத்தில் 6 மில்லியன் ஸ்ரேலிங்பவுண்களை லஞ்சமாக வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்கு எதிராக இந்தியாவில் வழக்குகள் நடந்து கொண்டு இருக்கிறது. தற்போது இந்தியாவில் இருக்கும் இவர்கள் இருவரையும் சேர்ந்து வெளிநாடுகள் செல்ல இந்திய மேல் நிதிமன்றம் தடைவிதித்துள்ளது.



மைக்ரோ சொப்ட் நிறுவன அதிபர் பில்கேட்ஸ்





இளவரசர் ALWALEED

## உலகின் இன்றைய முதல் 30 கோடீஸ்வரர்கள் பட்டியல் 2004
## The 30 Richest in the World

| இல. பெயர் | நாடு | தொழில் | பெறுமதி |
|---|---|---|---|
| 1. Robson Walton | அமெரிக்கா | சில்லறை வியாபாரம் | £54.2bn |
| 2. Bill Gates | அமெரிக்கா | கணினி (Microsof) | 25.3bn |
| 3. Warren Buffett | அமெரிக்கா | முதலீடு | £23.3bn |
| 4. Karl& Theo | ஜேர்மனி | விற்பனை(Supermarket) | 22.3bn |
| 5.Forest & John Mars | அமெரிக்கா | இனிப்புத்தொழிற்சாலை | £16.9bn |
| 6. King Fahd | சவூதி அரேபியா | எண்ணெய் | £13.5bn |
| 7. Barbara Cox | அமெரிக்கா | தொடர்பு சாதனம் | £12.1bn |
| 8. Prince Alwaleed | சவூதி அரேபியா | முதலீடு | £11.6bn |
| 9.Paul Allen | அமெரிக்கா | கணினி (Microsoft-ware) | £11.4bn |
| 10= Sheikh | அபுதாபி | எண்ணெய், முதலீடு | £10.8bn |
| 10= Jojanna Quandt | ஜேர்மனி | கார் BMW | £10.8bn |
| 12. Liliance Bettencourt | பிரான்ஸ் | அழகுசாதனப்பொருட்கள் | £10,2bn |
| 13. Larry Ellison | அமெரிக்கா | கணினி | £10.1bn |
| 14. Ingvar Kamprad | சுவீடன் | தளபாடவிற்பனை (IKEA) | £10bn |
| 15. Kenneth Thomson | கனடா | தொடர்புசாதனம்எண்ணெய் | £9.3bn |
| 16. Samuel &Dovald | அமெரிக்கா | வெளியீடு | £8.3bn |
| 17. Robert & Thomas | அமெரிக்கா | விடுதி, முதலீடு | £8.2bn |
| 18=Emir | குவைத் | எண்ணெய் | £8.1bn |
| 18=M. Khodorkovsky | ரஷ்யா | எண்ணெய் | £8.1bn |
| 20.Abigail & Edward | அமெரிக்கா | முதலீடு | £8bn |
| 21. Sultan | புறுனே நாட்டு | எண்ணெய் | £7.7bn |
| 22=Roman Abramovich | பிரித்தானியா | எண்ணெய், முதலீடு | £7.5bn |
| 22=Carlos Slim Helu | மெக்சிக்கோ | தொலைபேசி நிறுவனம் | £7.5bn |
| 24. Michael Dell | அமெரிக்கா | கணினி (Dell) | £7bn |
| 25=Steve Ballmer | அமெரிக்கா | கணினி(Microsoft-ware) | £6.7bn |
| 25=The Brenninkmeyer family | நெதர்லாந்து | வியாபாரம் | £6.7bn |
| 25=Li Ka Shing | ஹொங்கொங் | உற்பத்தி | £6.7bn |
| 28. Berrnard Aruault | பிரான்ஸ் | ஆடம்பரப்பொருட்கள் | £6.6bn |
| 29.The Kwok Brothers | ஹொங்கொங் | சொத்து (Property) | £6.2bn |
| 30. John Kluge | அமெரிக்கா | தொடர்புசாதனம் | £5.7bn |

இலண்டனிலிருந்து...

www.tamilarangam.net

# நாட்டாரியல் (FOLK LORE)

முத்தமிழின் தேசியக்கலை! பாரம் பரிய கலை என்று நாம் கூறினால் நாட்டுக்கூத்துத்தான். (Folk Lore Drama) கர்நாடக சங்கீதம்! பரத நாட்டியம்! இசை நாடகங்கள்! காத்தவராயன், கண்ணகி கோவலன் போன்ற சிந்து நடைக்கூத்துக்களும் மலையகத்தில் ஆடப்படும் காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த பைலா நடனம் போனறவைகளெல்லாம் இறக்குமதி செய்யப்பட்ட கலைக்கூறுகளாகும்.உலகமயமாக்கல் மாயையில் மிகப் பலர் மூழ்கியிருக்கும் இன்றைய நிலையில் ஈழத்தின் பிரபல சிரேஸ்ட நாட்டுக்கூத்து ஆய் வாளர் கலாபூஷணம் பாஷையூர் தேவதாசனால் எழுதப்பட்ட 'ஊராண்மை ஆட்டம் + இசைக் கூத்தை அறிமுகம் செய்கின்றோம்.

*********

## கதைச்சுருக்கம்

தென்னிந்தியாவில் நீலகிரி குன்றில் பிறந்து வளர்ந்து காளைப்பருவத்தை அடைந்த ஓர் ஆண்மயில் ஒன்று சகோதரனுடன் ஈழ தேசத்தில் கதிர்காமக்குன்றில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் 'குறிஞ்சிக்குமரன்' 'வள்ளி மணாளனை'தரிசிப்பதற்காக அந்தப்புனித மண்ணுக்கு வந்து முருகப்பெருமானை வணக்கம் செய்கின்றது.

அதே நேரத்தில் ஈழ தேசத்தில் கோட்டை இராச்சியத்தின் குன்றில் பிறந்த அழகிய பெண் மயில் ஒன்று தனது உடன் தோழியுடன் அந்தி மாலைப்பொழுதில் சிந்து பாடி கதிர்காமக்குன்றில் நின்று மாணிக்க கங்கையின் அருவி ஓட்டத்தில் பறந்து திரியும் குருவி இனங்களையும் காவனத்தையும், பூ வனத்தையும் பார்த்து மனமகிழ்ந்து ஆடிப்பாடித்திரிகின்றது.

இவ்வேளையில் 'மாயோன் மருகன்', 'சேவல் கொடியோன்' எனப்புகழப்படுகின்ற ஆறுமுகக்கடவுளை வணங்கி விட்டு வெளியேறிய ஆண்மயில் அழகிய பெண்மயிலைக்கண்டு விடுகின்றது. பொய்யா மொழிப்புலவன் வள்ளுவன் கூறிய

"கண்ணோடு கண்ணினை நோக்க கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"- என்ற குறள் அமுதத்துக்கு இணங்க ஆண்மயிலானது அந்தப்பெண் மயிலை தனது நெஞ்சத்தில் தஞ்சமாய்ப்பதித்து விடுகின்றது. இதே நேரத்தில் கோட்டை இராச்சியத்தில் இருந்த வேறொரு ஆண் மயிலானது பிரதேசம், இனம் மொழி, வம்சம், சாதி, மதம், கலாசாரம், பாரம் பரியம் என்பனவற்றைக்காட்டி ஊராண்மை பேசி அந்த ஆண்மயிலில் தமிழ் மண்ணில் பிறந்த தமிழன் என்ற ஒரே காரணத்தைக்காட்டி மக்கள் மன்றில் ஊராண்மை பேசி தென்னிந்தியாவில் பிறந்த ஆண் மயிலை கொத்தி பலவந்தமாக கப்பலில் ஏற்றி இந்து மகா சமுத்திரத்தின் மத்தியில் அந்த ஆண்மயிலை மரணிக்கச் செய்கின்றது.

நாடு கடத்தப்பட்ட தனது உள்ளம் கவர்ந்த காதலனின் செய்தியை அறிந்த பெண்மயில் தன்னந்தனியனாக ஆக்கப்பட்டு ஊராண்மை மீறியதன் குற்றச்சாட் டுக்காக கதிர்காமக் குன்றில் ஏறி மாணிக்க கங்கை நீரோட்டத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்கின்றது.இதுவே இந்த நாட்டுக்கூத்தின் கருப்பொருளாகும்.

கி.பி. 1415 இல் ஈழதேசத்தில் ஆறாம் பராக்கிரமபாகு அரசகட்டிலில் ஏறி கி.பி. 1467 இல் மரணமடைந்தான். இவனுக்கு உலகுடையகுமாரி என்ற அன்ன நடை, சின்ன இடை, பின்னல் சடை, கன்னல் மொழி பேசும் ஒரு மகளும் உண்டு. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் அவைக்கு தென்னிந்திய நாட்டில் இருந்து நல்லூர் துணையான் என்ற ஒரு மதிநுட்பமும் அறிவாற்றலும் கொண்ட இளைஞன் முதலமைச்சனாக இருந்து வருகின்றான்.

ஒரு நாள் நல்லூர்த்துணையான் தனது சகோதரன் ருபகாந்தனுடன் கதிர்காமக் குன்றிலே கங்கை வேணியனின் மைந்தனைக்காணச்சென்று திரும்பும்போது உலகுடைய குமாரியைக்கண்டு அவளது கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தில் மயங்கி தனது மனத்தை பசுமரத்து ஆணி போல் அவளில் பதித்து விடுகின்றான். பின்பு ஈழ தேசத்தின் பேரரசன் ஆறாம் பராக்கிரம பாகுவின் அனுமதியுடன் அம்மி மதித்து, அருந்ததி காட்டி உலகுடைய குமாரியை திருமணம் செய்து கொள்கின்றான்.

இது நிற்க, கி.பி. 1440 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 1478 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை கனகசூரிய சிங்கையாரியன் (செகராச சேகரன் -6) அரசு செய்கின்றான். இக்காலப்பகுதியில் தென்னிலங்கை கோட்டை இராச்சிய மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சிய மன்னனுக்கு திறை கொடுத்தே ஆண்டு வந்தனர்.

இந்த முறைமையும், பழக்கமும், சம்பிரதாயமும் கோட்டைப்பேரரசன் ஆறாம் பராக்கிரமபாகுவிற்கு பிடிக்கவில்லை. இதனால் ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண இராச்சியத்திற்கு திறை கொடுக்க மாட்டேன் என்று தீர்மானம் செய்து கொண்டான். இதன் பின் சபுமல் குமரையன் அல்லது செண்பகப்பெருமாள் மூலம் இச்செய்தியை அனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படை எடுப்பதாகவும் அறிவித்தல் கொடுத்தான்.

இதனால் தனது அவை சேனாதிபதியாக இருந்த தனது வளர்ப்பு மகன் சப்புமல் குமரையன் அல்லது செண்பகப்பெருமாள் என்பவனை யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்ற ஆசையுடன் அனுப்புகின்றான்.

சப்புமல் குமரையன் மலையாள தேசத்தில் இருந்து வந்த பணிக்கன் மகனாவான். (பணிக்கன் என்பது யானைகளைப்பழக்குபவன்) இவனது தகப்பன் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் ஈழதேசத்துக்கு வருகையை அடுத்து இவன் கோட்டை இராச்சியத்தில் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டான்.

சப்புமல் குமரையன் தனது சேனை வீரர்களுடன் யாழ்ப்பாண இராச்சியத்தின மீது படை எடுத்து கனக சூரிய சிங்கையாரியனையும் அவனது பரம்பரையையும் வெற்றிவாகை சூடினான்.

தோற்கடிக்கப்பட்ட கனகசூரியசிங்கையாரியன் தனது இரு புதல்வர்களுடன் தென்னிந்தியாவிற்கு ஓடிப்போய் உயிரைக்காப்பாற்றிக்கொள்கின்றான்.

சப்புமல் குமரையன் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கண்ட பின் யாழ்ப்பாண இராச்சியத்தில் இருந்த புனித ஸ்தலமாகிய நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் நல்லூர் கோட்டை கோபுரங்களுக்கும் நூலகங்களுக்கும் அறிவூட்டும் கல்விச்சாலைகளுக்கும் அறச்சாலைகள், சாதாரண மக்கள் வாழும் மனைகள், குடிசைகள் எல்லாவற்றிற்கும் தீ மூட்டி எரிக்கும் பணியில் ஈடுபட்டு யாழ்ப்பாண இராச்சியம் தீக்கிரையாக்கப்பட்ட பின் திரும்பவும் கோட்டை இராச்சியத்திற்கு போய் விடுகின்றான்.

சப்புமல் குமரையன் யாழ்ப்பாண இராச்சியத்தில் நாசவேலைகள், படு துரோகங்களை செய்து விட்டு போன பின் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் கனகசூரியசிங்கையாரியன் திருமபவும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு அரசன் ஆகின்றான். சில வரலாற்றின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியில் உள்ள நல்லூரை தலைநகரமாகவும் இவன் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. சப்புமல்குமரையன் யாழ்ப்பாண இராச்சியத்தை தீ மூட்டி நாச வேலை செய்த பின் ஒரு ஏவலன் மூலம் நல்லூர் துணையானும் உலகுடைய குமாரியும் திருமணம் செய்து கொண்டதாக அறிந்து பொறாமை கொள்கின்றான்.

நல்லூர் துணையான் உலகுடைய குமாரி இருவருக்கும் பிறக்கும் குழந்தை எப்படியும் ஈழ தேசத்தின் கோட்டை இராச்சியத்தின் மணி முடிக்கு உரித்தாகும் என்பதை சப்புமல்குமரையன் தனது அடி மனத்தில் வைத்தான். இதன் பின் நல்லூர் துணையானையும் உலகுடைய குமாரியையும் பிரித்து வைக்கும் சூழ்ச்சிப்படலத்தில் இறங்குகின்றான்.

நல்லூர்துணையான் தமிழன் என்றும் பிரதேசம், இனம்,மதம், மொழி, வம்சம்,மதம், சாதி, கலாசாரம் ,பாரம்பரியம் என்பவற்றை மக்கள் மன்றில் முன் எடுத்துக்காட்டி மக்களுக்கு வெறுப்பையும் துவேசத்தையும் உண்டு பண்ணி ஊராண்மை பேசி நல்லூர்துணையானை கப்பல்மூலம் இந்து சமுத்திரத்தின் மத்தியில் வலுக்கட்டாயமாக கப்பல்காரர்களால் நல்லூர் துணையான் தூக்கி எறியப்பட்டு வீரமரணத்தை அடைகின்றான்.

தனது கணவனாகிய நல்லூர் துணையான் நாடு கடத்தப்பட்ட செய்தியும் இறந்த செய்தியும் கேட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலகுடைய குமாரி மலைகள், ஆறுகள், குன்றுகள், வளங்கள் எல்லாம் தாண்டி உடைந்த உள்ளத்தோடும் வேகிய நெஞ்சோடும் எரிகின்ற மனத்தோடும் கதிர்காமக்குன்று நோக்கி போகின்றாள்.

அப்போது வேறு பிரதேச ஆண்மயிலும் ஈழதேசத்தின் பெண் மயிலும் ஆடிப்பாடி ஒன்றிணைந்த இன்ப வெள்ளத்தில் நீராடுகின்றது.அதை உலகுடைய குமாரி பார்க்கின்றாள். அதே நேரத்தில் வஞ்சக நெஞ்சம் கொண்ட ஓர் ஆண்மயில் ஒன்றிணைந்த ஆண்மயிலை கொத்தி வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு போய் விடுகின்றது. அதே நேரத்தில் பெண்மயில் தன்னம் தனியாக நிற்கின்றது. இதைப்பார்த்த உலகுடைய குமாரி அந்தப்பெண் மயிலிடம் கீழ்க்கண்டவாறு கேட்கின்றாள்.

"ஏ மூடப்பெண்மயிலே ஊராண்மை தெரியாமல் வேறுபிரதேசத்தைச்சேர்ந்த மயிலுடன் நீ உறவு கொண்ட படியாலேயே உனக்கு இப்படியான நிலைமை ஏற்பட்டது"

அதற்கு பெண் மயில் கூறுகின்றது. "ஏ மூடப்பெண்ணே நாட்டில் உள்ள ஊராண்மை தெரியாமல் நீ தென்னிந்திய மண்ணில் பிறந்த தமிழனுடன் பிரதேசம், இனம்,மதம் வம்சம், சாதி, கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றைப்பார்க்காமல் ஒன்றிணைந்ததாலேயே உனக்கு இந்த அவல நிலை ஏற்பட்டு தன்னந்தனியாக அநாதை போல் நிற்கின்றாய். கட்டிய கணவனை இழந்த நீயா மோடி அல்லது நானா மோடி என்பதை தெரிந்து கொள் என்று கூறி விட்டு பெண் மயில் அவளைப்பார்த்து பரிகாசம் செய்தும் ஏளனம் செய்தும் பறந்து போகின்றது.

மேற்கூறிய கற்பனை நீதி வாசகத்தை கேட்டபின் உலகுடைய குமாரி - தன்னம் தனித்தவளாய் - அநாதையாக - அலைகடல் துரும்பாய் - அம்பு தைத்த மானாக ஆக்கப்பட்டு ஆதரவு அற்ற நிலையில் யாருமே துணை செய்ய முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டு உடைந்த உள்ளத்தோடு கதிர்காமக்குன்றின் வழியாக மலை உச்சியை அடைந்து கந்தவேள், மஞ்ஞை ஊர்தியனை வணக்கம் செய்த பின் கதிர்காமக்குன்றின் வழியாக உச்சி மலையில் ஏறி அங்கு நின்று கீழ்க்கண்டவாறு கூறுகின்றாள்.

"இனவெறி ஒழிக","பிரதேச வாதம் ஒழிக","மானிடம் மதிக்கப்படவேண்டும்" என்று கூறி சாரல் உச்சியில் நின்று சற் குணனாகிய முருகப்பெருமானை வணங்கி விட்டு மாணிக்க கங்கையை நோக்கிப் பாய்ந்து தனது உயிரை மரணிக்கச் செய் கின்றாள்.

கதைச்சுருக்கம் நிறைவு பெற்றது.



## காப்பு விருத்தம்

பொன்னேறும் வளஞ்செறியும் பொழில்கள் கொண்ட
பொங்கு கடல் சூழ்ந்திலங்கும் ஈழ தேசம்
முன்னேறும் இசை வடிவை முற்றும் சேர்த்து
முத்தமிழால் நாடகமாய் முறையாயப்பாட
மன்னேறும் தேர் விட்டு மாலை சூடும்
மலர் தவழும் கலைமகள் தாள் மன்றில் போற்றி
உன்னேறும் ஊராண்மை ஊறும் காதை
உலகத்தில் உரைத்திடற்கு காப்புத்தானே

## வெண்பா

சாரல் சூழ் தீவென்பார் சாலையெல்லாம் பூநாறும்
தாரணியோர் வாஞ்சிக்கும் தாயாராம்- வாரணம் கொள்
இன்பமதாய் எங்களைத்தான் ஈன்றெடுத்த அன்னையரே
உன்னருளைத்தந்தால் உவப்பு

## தோடயம்

(FIRST SONG OF THE DRAMA)

ஊராண்மை வெண்ட பேராண்மை கொண்ட
உலகியல் காதை கூறுவோம்
தேராண்மை கண்ட நீராண்மை உண்ட
தேசத்தின் விதி பாடுவோம்

பூவிலே உறை நாவிலே நிறை
பூத்ததோர் மலர் தூவுவோம்
நாவிலே மறை! பாவிலே பிறை
நாமகள் தன்னை இறைஞ்சுவோம்

## பாயிரம்

கட்டிய கணவன் தன்னை
கடல்தன்னில் இறக்கச்செய்தார்
பொட்டது இழந்தாள் பாவை
பொருப்பதில் ஏறி நின்றாள்
துட்டனின் சூழ்ச்சி தன்னால்
துணைவனும் மாண்டு போனான்
பட்டதோர் மரமாயானாள்
படிதனில் முடிவு காண்பீர்



குன்றினில் ஏறி நின்று
குமரனை வணக்கம் செய்து
அன்றது இட்ட நீதி
அதற்காக உயிரும் விட்டாள்.
இந்நிலை மாறவில்லை
இலங்கையில் இன்றும் தானே
சின்னவள் மாண்ட துன்பம்
செகமதில் சேதி சொல்வோம்

## அங்கம் –01

## இடம் – தெரு

பங்கு கொள்வோர்கள் - கட்டியக்காரன் (ஏடுரைப்போன்)
பொது மக்கள்
நிலைமை ஏடுரைப்போன்- நாட்டுக்கூத்தின் கதையின் கருப்பொருளாகக்கூறல்

## சபை வரவு – விருத்தம்

(INTRODUCTION OF THE CHARACTER)

கரமதனில் தடியைத்தான் களிப்பாய் ஏந்தி
காதணிகள் மாலையுடன் களரி ஏறி
சிரமதனில் முடியுடனே சிந்து பாட
சிரிப்புடனே ஏடுரைப்போன் சிறப்பாய் வாறான்
அரங்கதனில் இருப்போர்க்கு அறிவு கூற
அரசியதும் அறவீனம் அனைத்தும் சொல்ல
உரமுடனே அடியெடுத்து உள்ளம் பொங்க
ஊர்ச்செய்தி பகர்கின்றான் உயர்ந்தோர் பாரீர்

## ஆடல் தரு - DANCE

சோலை அளியுமே பாடும் - மயில்
சோடியாய் குன்றிலே ஆடும்
காலை குளிரதே கூடும்- இங்குகதை
சொல்ல கட்டியக்காரன் வந்தானே

## தரு - POEM

பெண்ணிவன் தன்னின்
பெருங்கதை சொல்வேன்
மண்ணிலே உள்ளோர்
மகிழ்வதாய் கேளீர்
பண்ணிலே நானும் பாட்டுடன்
உரைப்பேன்
கண்ணது விழித்து களிப்பாய் பாரீர்
தகதோம் தகிதோம்- தத்தத்
தரிகிடதோம்

## வசனம்

மகா ஜனங்களே! தென்னிந்தியா தமிழகத்தில் நீலகிரி குன்றில் பிறந்த ஒரு எழில் உருவம் கொண்ட பெண்மயி லைக் கண்டு ஆசை கொண்டு அந்தப பெண் மயிலின் தந்தையிடம் அனுமதி பெற்று மணம் முடித்து இன்பமாக வாழ கின்றது. இந்தச்செயலானது கோட்டை இராச் சியத்தில் பிறந்த ஒரு வளர்ப்பு ஆண் மயிலுக்குப்பிடிக்கவில்லை. இந்த இரு மயில்களும் அன்புப்பாசத்தால் ஒன் றிணைந்து இளம் சிட்டுக்களாக வாழ் வதைக்கண்ட வளர்ப்பு ஆண்மயில் அவர்களைப்பிரிக்க எண்ணியது. நாட்டின ஊராண்மை பிரதேசம், இனம், மதம், சாதி, வம்சம், மொழி என்பவற்றை எடுத்துக்காட்டி நீலகிரியில் பிறந்த மயிலை நாடு கடத்தும் பணியில் ஈடுபடு கின்றது.மக்களின் ஏகோபித்த ஆணையை மையமாக வைத்து நீல கிரியில் பிறந்த ஆண் மயிலை நாடு கடத்தும் உத்தரவை குறிப்பிட்டவர் களிடம் எடுத்துக்கொண்டது.

கல்யாணி நதிக்கரையிலிருந்து கப்பல் மூலம் நாடு கடத்தப்பட்ட நீலகிரியில் பிறந்த ஆண்மயில் வளர்ப்பு மயிலின் சதியில் இந்து மகா சமுத்திரத்தில் தூக்கி எறியப்பட்டு வீரமரணமடைந்தது.

இறந்த செய்தியை அறிந்த பெண் மயில் ஆறு, குன்று,வனங்கள் ஊடாக நடந்து ஈற்றில் கதிர்காமக்குன்றின் படிக்கட்டு வழியே ஏறி முருகப் பெரு மானை வணக்கம் செய்து மாணிக்க கங்கை நீரோட்டத்தை நோக்கிப்பாய்ந்து மரணத்தைத் தழுவிக்கொள்கின்றது. எனது மனைவி கறுப்பாச்சியும் வெள் ளாச்சியும் மதுக்குடத்தை கையில் வைத்துக்கொண்டு என்னைக் காத்துக்கொண்டிருப்பார்கள் நான் வருகிறேன்.

(கட்டியக்காரன் ஆட்டத்தோடு போதல்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இம்மாத நேர்முகம் நீ.மரியசேவியர் அடிகள்

திருமறைக்கலாமன்றம் இலங்கையில் மட்டுமன்றி புலம் பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளிலெல்லாம் கலைப்பணி ஆற்றி வருகின்றது. கலை என்ற ஊடகத்தின் மூலம் மத எல்லைகளைத் தாண்டிய தமிழ்த் துறவி நீ.மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமாவார். அவர் தமிழ் உலகத்துக்கு வழங்கிய பேட்டி.

**கேள்வி:** கடந்த 35 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் கலைப்பணி ஆற்றி வரும் திருமறைக்கலா மன்றத்தின் தோற்றம் அதன் நோக்கம் பற்றிக்கூறுவீர்களா?

**பதில்:** ஏறத்தாழ 40 ஆண்டுகளாக நான் கலைப்பணியில் ஈடுபட்டு வருகின்றேன். 1963/64 களில் இளைஞர்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நாடகம் பலமான ஊடகமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த அமைப்பை ஆரம்பித்தேன். சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த 'சாதியத்தை'இல்லா தொழிக்க வேண்டும், அனைவரும் மனிதர்கள் என்ற எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம் இந்த அமைப்பின் தோற்றத்துக்கு ஒரு முக்கிய காரணம். இதனடிப்படையில் எல்லா சமூக மட்டத்து இளைஞர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். இன,மத எல்லைகளைத்தாண்டக்கூடிய ஆற்றல் கலைக்கு இருக்கின்றது. அதனடிப்படையில் சமூக ஏற்றத்தாழ்வுகளை உடைத்து துடிப்புள்ள நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கமே இன்றைய திருமறைக்கலாமன்றத்தின் தோற்றுவாய்.

திருமறைக்கலாமன்றம் ஆரம்பத்தில் கத்தோலிக்க அமைப்பாகத்தான் உருவாகியது. 'திருமறை' என்ற சொல் தனியே ஒரு சமயத்தைக்குறிப்பது அல்ல. அது எல்லா சமயங்களுக்கும் பொருந்தக்கூடியது. அந்த வகையில் மன்றத்துக்கலை வாழ்வில் கத்தோலிக்கர் அல்லாத பலரும் இணைந்திருந்தார்கள். குறிப்பாக எமது அமைப்பில் இசைக்கருவிகளை வாசித்தவர்கள் பிராமணர்களாகவே இருந்தார்கள். தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் இசைப்பிரிவில் இசையமைத்து வரும் கண்ணன் ஆரம்பத்தில் எம்முடன் கலைப்பணியில் ஈடுபட்டவர்.1989 இல் திருமறைக் கலாமன்றம் 'Centre For Perfoming Arts' என்ற பெயரில் நிறுவனமயமாகியது. ஆரம்பத்தில் நாடகத்துறையில் அதிக கவனம் செலுத்திய நாம் பின்னர் கவின் கலைகள், எழுத்துத் துறை வானொலி போன்ற பல துறை களாக விரிந்து செயற்பட்டோம்.




'கலை முகம்' என்ற சஞ்சிகையையும் வெளியிட ஆரம்பித்தோம்.1993 இல் கொழும்பில் பணிமனை ஒன்றினை ஆரம்பித்து சிங்கள கலைஞர்களையும் இணைத்து 'ரங்க கலா கேந்திரய' என்ற பெயர் சூட்டி செயற்பட்டோம். இதனடிப் படையில் பல சிங்கள நிலப்பரப்புக்களைச் சேர்ந்த பௌத்த கலைஞர்கள் எம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.இனங்களிடையே புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கமே எம்மத்தியில் இன்று மேலோங்கி உந்து சக்தியாக அமைந்துள்ளது.

**கேள்வி** : இன,மத, கலாசார வேறுபாடின்றி அனைவரையும் ஒன்றிணைத்து நீங்கள் கலைப்பணி ஆற்றி வருவதன் நோக்கம் என்ன? அதன் மூலம் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகின்றீர்கள்?

**பதில்** : மனிதர்கள் அனைவரும் இனம்,மத,மொழி,பண்பாடு ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும் மனிதத்தால் இணைந்திருக்கின்றார்கள். ஆகவே மனிதத்தைத் தேடித்தான் நாம் நகரவேண்டும் ஆனாலும், நாம் தமிழர் என்ற எமது அடையாளத்தையும் மறந்து விடக்கூடாது. அதே வேளை மனிதத்தைப்போற்றி வளர்த்தால் கூட்டு வாழ்க்கை எமக்கு சுலபமாக இருக்கும். வேறுபாடுகளாகிய நமது சுயங்களைப் போற்றுவோம். ஒற்றுமையையும் வளர்ப்போம். அடுத்து இருளைப்பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதுதான் எமது குறிக்கோள்.

**கேள்வி:** உங்கள் கலைச்சேவைகள் விஸ்தரித்துள்ள நாடுகளில் உங்கள் செயற்பாடுகள் எப்படியானவை?

**பதில்:** சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ்,நோர்வே,அவுஸ்திரேலியா,கனடா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளில் எமது கலைப்பணிகளை நாம் ஆரம்பித்துள்ளோம். அங்கு புலம் பெயர்ந்து வாழும் எம்மவருக்கு என மட்டும் நாம் நிகழ்ச்சிகளைப் படைக்காமல் அங்குள்ள மக்களும் ஈழத்துக்கலைகளை பார்த்து சுவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்.

**கேள்வி:** புலம்பெயர் நாடுகளில் உங்கள் கலைத்துறைப்பங்களிப்பு பற்றிச் சொல்லுங்கள்?

**பதில்:** நாம் எமது மன்றத்தினூடாக கலைஞர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச்சென்று கலை நிகழ்ச்சிகளை வழங்குகின்றோம். அந்த வகையில் எதிர்வரும் July-August இல் போலந்தில் ஒரு தேசியவிழாவை ஏற்பாடு செய்துள்ளோம்.புலம்பெயர்ந்து வாழும் கலைஞர்கள் தமது கலை ஆற்றல்களை எம்முடன் பகிர்ந்து கொள்வதை நாம் வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு: Centre for Performing Arts,
Apartments 5/6,19,Milagiriya Avenue, Colombo-4
Srilanka.
Tel: 011-2597245

**கேள்வி** : திருமறைக்கலாமன்றத்தின் செயற்பாடுகள்.....

**பதில்** : இலங்கையின் பல பகுதிகளிலும் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் அகியவற்றை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்,சிங்கள,முஸ்லிம் கலைஞர்களை ஒன்றிணைத்த 'அமைதி விழா' ஒன்றினை மிகச்சிறப்பான முறையில் நடத்தினோம். சமாதான சூழ்நிலைக்கு முன்னரும், பின்னரும் சிங்கள கலைஞர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்சென்ற பெருமை திருமறைக்கலாமன்றத்துக்கு உண்டு.

இது தவிர எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கான ஒன்று கூடல்களை பல இடங்களிலும் நடத்தி வருகின்றோம்.

**கேள்வி:** நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்த போதிலும் கூட, நீங்கள் உங்களின் ஒரு கலாநிதிப்பட்டத்துக்குரிய ஆய்வினை சைவ சித்தாந்தத்திலேயே மேற்கொண்டீர்கள், இந்த தூண்டுதலுக்குக் காரணம் என்ன?

**பதில்:** நான் தமிழன். தமிழ் மக்களின் மெய்யியல் சைவசித்தாந்தத்தில் உண்டு. எல்லாத்தமிழரும் இம் மெய்யியலைக்கற்க வேண்டும். போற்றி வளர்க்க வேண்டும். வெளிஉலகிற்கு அதை எடுத்துக்கூறவும் வேண்டும். இதனடிப்படையில் 'Journal of Siddahanta Studies' என்ற இதழை வெளியிட்டு வருகின்றோம். மேலும், மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கில் நான்கை ஒலி நாடாக்களாகவும் இறுவெட்டுக்களாகவும் முதன்முறையாக வெளியிட்டுள்ளோம். தமிழர்கள் சிந்தாந்த மெய்யியலை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கம்.

-பிரதீபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழரின் பாராளுமன்ற படையணி

பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைக்கும் குறைவான உறுப்பினர்களுடன் சிறுபான்மை அரசொன்றை அமைத்திருக்கும் முன்னணிக்கு 45 வீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 22 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்கள் இதன் இரண்டு மடங்கிற்கும் அதிகமான சதவீத வாக்குகளை அளித்திருக்கின்றனர். அமைக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை அரசாங்கம் பாராளுமன்றத்தை சட்டசபையாக மாற்றியமைத்து அரசியற் சட்டத்தை புதிதாக இயற்றும் முயற்சிகளில் ஈடுபடும் என்று அதன் தலைவர்கள் சூளுரைத்து வருகின்றார்கள். ஆனால் வடக்கு கிழக்கின் ஆசனங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருக்கும் நாமே ஒரு தனியான சட்ட நிர்ணய சபையை அமைப்பதற்கு உண்மையான மக்களாணை பெற்றவர்கள் என்று தமிழர் தேசியக்கூட்டமைப்பினர் இறுமாப்புடன் கூறி வருகின்றனர். அது மட்டுமன்றி இந்த தமிழ் மக்களாணை ஆட்சியமைக்கும் அரசினால் மதிக்கப்பட வேண்டுமென்றும் சமாதான நடவடிக்கைகள் முன்னுரிமையடிப்படையில் தொடரப்பட வேண்டுமென்றும் எச்சரிக்கை கலந்த தொனியில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.தமிழ்த்தேசியப்பட்டியலினூடாக வடக்கிற்கு ஒருவரும் கிழக்கிற்கு ஒருவருமாக நியமிக்கப்பட்டிருக்கும் இருவரும் தமிழ்த்தேசியத்தின் மூத்த தூண்கள் ஆவர். தந்தை செல்வநாயகம் காலத்திலிருந்து அரசியலிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு முத்திரை குத்தப்பட்ட தலைவர்கள். அன்று 1994 இல் திருமதி குமாரதுங்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற சூழலில் ஈழப்போர் நடைபெற்று வந்தது. அப்போது தமிழ் நாட்டில் தங்கியிருந்த ஈழவேந்தன் திருமதி குமாரதுங்கவுக்கு கடிதம் எழுதி, அதில் "தங்கள் தந்தை பல்லின மக்கள் வாழும் நாட்டிற்கு சமஷ்டியாட்சியே சிறந்ததென்று 1920 களில் தெரிவித்ததை நீங்கள் செயல் வடிவில் காட்டுங்கள்" என்று கேட்டிருந்தவர். இன்று உலகறிய சமஷ்டியை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கையரசாங்கமொன்றின் பாராளுமன்றத்திற்கு நேரில் சென்று சமஷ்டியை வலியுறுத்தவுள்ளார். 1986 இல் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து இணைப்பாட்சி வேண்டும் என்று வலியுறுத்தும் போது அவர் ஒரு தனிமனிதனாகவே இருந்தார். கடந்த ஆண்டில் வட மாநில தேசிய எழுச்சிப் பேரவையில் கொள்கை முன்னெடுப்பு செயலாளராக பணியேற்றிருந்தார். காலங்கடந்த நிலையில் இப்பொழுதுதான், அவரின் அரசியல் திறமைகளை தமிழினம் பொறுப்புடன் பயன்படுத்த முன்வந்திருக்கின்றது.







1990 இலிருந்து கிழக்கு மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினராகஇருந்து வந்த ஜோசப் பரராஜசிங்கம் இம்முறை ஒரு தேசியமட்டத் தலைவராக அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றம் செல்வது சிறப்பாக குறிப்பிடக்கூடியது. துரதிஷ்டவசமான சூழ்நிலைக்குள் அகப்பட்டு, வீட்டுக் காவல் போன்றதொரு நிலையில் வைக்கப்பட்டிருந்த வேளையிலும், தமிழர் ஒரு தேசிய இனம், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள், தமிழர்களின் சுய நிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைப்புடன் கூடிய தாயகக்கோட்பாடு அங்கீகரிக்கப்படவேண்டும்என்று ஆணித்தரமாகக் கூறி தமிழ் மக்களின் நிலைப்பாடு சலசலப்புக்கு எடுபடாது என்று எடுத்துக் காட்டியவர்.

தர்மத்திற்காக நடைபெறும் தேர்தல் இது என்று கூறியவரின் தோல்வியை தர்மமே தடுத்து விட்டது. தமிழ் தேசிய தலைவர்களுள் ஒருவராக பாராளுமன்றம் செல்கின்றார்.

-நிரன்

## தமிழர் பாராளுமன்றப் படையணி

ஆர்.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம், என்.சிவசக்தி ஆனந்தன், கே.துரைரெட்ணசிங்கம், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், கே.சிவநேசன், எஸ்.கனகரெத்தினம், எஸ்.கிஷோர், எஸ்.நோதரலிங்கம், ரி.கனகசபை, கே.தங்கேஸ்வரி, (கே.இராசநாயகம் - இராஜினாமா சமர்ப்பித்துள்ளார்), எஸ்.ஜெயானந்தமூர்த்தி, கே.பத்மநாதன், ஈழவேந்தன், ஜோசப் பரராஜசிங்கம்



**தமிழர் படையணியுடன் தம்மையும் இணைத்துக் கொள்ள உறுதிபூண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான பெ.சந்திரசேகரன், பெ.ராதாகிருஷ்ணன், மனோ கணேசன்,**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# உழைக்கும் பெண்கள் ஒன்று கூடி உரிமை முழக்கம்

‘அரசியலில் பெண்களுக்கு சமபங்கு’ என்ற கோரிக்கையுடன் சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 ஆம் திகதி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் அனுசரணையுடன் ‘உழைக்கும் பெண்கள் முன்னணி’ என்ற அமைப்பின் ஏற்பாட்டில் மலையகத்தின் பல பகுதிகளிலும் இருந்து ஐநூறுக்கும் மேற்பட்ட பெருந் தோட்டத்துறையை சார்ந்த பெண்கள் ஒன்று கூடி, உரிமை முழக்கம் செய்தனர்.‘அரசியலில் சமபங்கு’ என்ற தொனிப்பொருளில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பெருந்தோட்டத்துறையைச்சார்ந்த பெண்மணிகள் உரத்த குரலில் அரசியலிலும், ஏனைய விடயங்


போராதனை வீதியில் ஆண்களும் பெண்களும் நடத்திய ஆர்ப்பாட்டம்



மேடையை அலங்கரித்த காட்சி

களிலும் சமபங்கு தேவையென பேச்சு, நடனம். நாடகம் என்று தங்களின் எரியும் பிரச்சினைகளை கலாசார நிகழ்வு களாக வெளிப்படுத்தினார்கள்.பெண்கள் தினவிழாவின் இறுதி அம்சமாக பெண்களுக்கு எதிரான வன்முறை களுக்கு எதிராக பெண்களோடு ஆண்களும் இணைந்து


பெருந்தோட்டத்துறை பெண்மணிகள் நடித்த நாடகத்திலிருந்து

பேராதனை வீதியில் ஒரு மணி நேரம் பதாதைகளை தாங் கியவாறு கோஷமிட்டனர்.பெருந்தோட்டத்துறையை சார்ந்த பெண்மணிகள் முன்னின்று நடத்திய நிகழ்வுகளை பார்த்த போது அவர்கள் விழிப்படைந்து எழுச்சி பெற்று வருகின் றார்கள் என்பதை அறிய முடிந்தது.இவ்வருட சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தையொட்டி, உழைக்கும் பெண் கள் முன்னணி கீழ்க்காணும் தீர்மானங்களை அமுல்படுத்தும் படி அரசையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் வலியுறுத்தியது.

* சர்வதேச பெண்கள் தினத்தை சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துக.

* பெண்கள் அதிகமாக தொழில் புரியும் வேலைத்தளத்தில் மேற்பார்வையாளர்களாக பெண்களை நியமிக்கும். வகையில் சட்டங்களை கொண்டு வரும்படி நடவடிக்கை மேற்கொள்க.

* தோட்டத்துறையில் 8 மணித்தியால வேலை நேரத்தை கட்டாயமாக அமுல்படுத்துக.

* ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு மேலதிகமாக நடந்து சென்று வேலை செய்ய நேரிடின், அத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாகன வசதியை வழங்குக.

* அனைத்து தொழிற்சங்க, அரசியல் கட்சிகள் மற்றும் சகல நிறுவனங்களின் உயர் பீடங்களிலும் பெண் பிரதிநிதித்துவத்திற்கு வாய்ப்பளிக்குக.

* தோட்டத் தொழிலாளப் பெண்களுக்கு பாதணியும் ஏனைய தொழில் பாதுகாப்பு உபகரணங்களையும் தொழில் தருநர்கள் வழங்குவதை உத்தரவாதப்படுத்துக.

* உலக தொழிலாளர் ஸ்தாபன சாசனம் 2001 சீ 183 இல் பிரகடனப்படுத்தியதன்படி பிரசவ விடுமுறை நாட்களை 14 வாரங்களாக பிரகடனப்படுத்துக.

* பெண்களுக்கெதிரான குடும்ப, வேலைத்தள மற்றும் பொது இட வன்முறையை இல்லாதொழிக்க சிறப்புச் சட்டம் கொண்டு வருக.

* தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஞாயிற்றுக்கிழமையை சம்பளத்துடன் கூடிய கட்டாய விடுமுறை நாளாக்குக.

* தற்போது சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை மற்றும் ஏனைய தொழிற்சாலைகளைச்சேர்ந்த அனைத்து பெண் தொழிலாளர்களையும் வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி இவ்வமைப்பு கோரியது.



புசல்லாவை செல்வகந்தை பெண்மணிகளின் செம்பு நடனம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்மருந்துகளின்றி நோய்களை குணமாக்கலாம்



உள்மருந்துகளின்றி நோய்களைக் குணமாக்கலாம் என்கிறார் பேராசிரியர் மருது கந்தப்பு. மாற்று மருத்துவ பேராசிரியர் டாக்டர் மருது கந்தப்புவின் கண்டு பிடிப்பான CNT எனப்படும் மூளை நரம்பு நுண் செயற்பாட்டுச் சிகிச்சை உலகின் பலபாகங்களிலும் பிரபல்யம் அடைந்து வருகிறது.

CNT (Cerebro-Neural Therapy) அதாவது மூளை நரம்பு நுண்செயற்பாட்டுச் சிகிச்சை என அழைக்கப்படும் இப்புதிய முறையைக் கண்டறிந்த பேராசிரியர் மருது கந்தப்பு அவர்கள் 1985ம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற உலக மாற்று மருத்துவ மாமன்றத்தின் மகாநாட்டில் அறிமுகப்படுத்தி அதன் ஆராய்ச்சிப் பத்திரிகையைச் சமர்ப்பித்தார். அதற்காக அவருக்கு PhD பட்டம் வழங்கப்பட்டது. இந்தப் புதிய சிகிச்சை முறையின் மகிமையை அங்கீகரித்து இந்தியாவில் Anglo-Indian Institute for Complementary Medicine நிறுவனத்தினால் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தற்பொழுது பேராசிரியர் மருது கந்தப்பு உலகின் பல நாடுகளுக்குச் சென்று இந்த வைத்திய முறையினால் ஏராளமான பல வகைப்பட்ட நோயாளர்களைக் குணப்படுத்தி வருகிறார். இந்த வைத்திய முறையால் சகலநோய்களுக்கும் நிவாரணம் தேடலாம். 10 வயதுக்கு மேற்பட்ட (மனநோயளர்களைத் (Psychiatric) தவிர்ந்த) சகலருக்கும் இந்த வைத்திய முறையைப் பயன்படுத்திப் பலன் பெறலாம்.

மருந்துகளை உட்கொள்ளாமல் எப்படி நோய்களைக் குணப்படுத்தலாம் எனப் பலரும் வினா எழுப்பலாம். ஒரு மனிதன் மூன்று வேளை உணவு உட்கொள்கிறான். ஏன் எனக் கேட்டால் உயிர் வாழ்வதற்கெனப் பதில் தருவான். உண்மை என்னவென்றால் நோயற்ற வாழ்வை வாழ்வதற்கே நாம் உணவை உட்கொள்கிறோம். நாம் உட்கொள்ளும் உணவிலிருந்துதான் சகல ஊட்டச்சத்துக்களும் (vitamins), தாதுப் பொருட்களும் (minerals), ஹோர்மோன்களும் (hormones) உறிஞ்சி எடுக்கப்பட்டு உரிய உரிய இடங்களில் சேமித்து வைக்கப்படுகிறது. சேமிக்கப்பட்டுள்ள சகல ஊட்டச்சத்துக்களும் நோய்வாய்ப்படும் பொழுது பாவிக்கப்படுகின்றன. இந்த நடைமுறை எவ்வாறு செயல்வடிவம் பெறுகிறது என்பதை விளக்குவதே CNT. தாயின் கர்ப்பத்தில் ஒரு கரு உண்டாகும் பொழுது ஒரு நுண்அணு அளவில்தான் உருவாகிறது. அதுதான் எமது மூளையின் ஆணிவேராகும். இந்த அணு பல அணுக்களாகப் பிரிந்து பிரிந்து முழு அளவிலான மூளையாகி அதிலிருந்து கண், காது, மூக்கு,வாய் ஆகியவற்றை உருவமைத்து அவற்றை மண்டை நரம்புகளுடன் (Cranial Nerves) இணைக்கின்றது. அதன் பின் படிப்படியாக முள்ளந்தண்டை (spinal Cord) வளர்த்து அதனுடன் ஏனைய உள்ளுறுப்புகளையும் இணைத்துக் கொள்கிறது. இப்படி மூளையானது தான் கருவில் இருக்கும் பொழுதே நரம்புத் தொகுதியூடாக தோல், உரோமங்கள், நகங்கள் உட்பட சகல உறுப்புகளையும் தன்னோடு இணைத்து வைத்துக்கொள்வதோடு இரத்த ஓட்டத்தையும், கழிவகற்றிகளையும் சமாந்திரமாக தொடர்புபடுத்தி வைத்துக்கொள்ளும். அத்துடன், முள்ளந்தண்டின் இருபக்கங்களிலும் தனக்குத் தேவையான அளவு பிரதிநிதிகளையும் (Nerves Ganglions) நியமித்து அவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயஅதிகாரங்களையும், தேவையான மூலதனங்களையும் தனது தாயிலிருந்து பெற்றுவழங்கும். அதேவேளை தன் தாயிலிருந்து பெற்ற மூலதனங்களின் பெரும் பகுதியைத் தான் விரும்பிய பல்வேறு உறுப்புகளில் வைப்புச் செய்து வைக்கும்.தாயின் வயிற்றிலிருந்து கருவானது சிசுவாக வெளியேறும் போது மூளை தனது பொறுப்புக்களை தனது பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து விட்டு தான் வெளி வேலைகளைப் பாரமெடுத்துக்கொள்ளும்.இப்பொழுது ஒருவருக்கு நோய் எற்பட்டுவிட்டால் அந்த நோய்ப் பகுதிக்குப் பொறுப்பான மூளையின் பிரதிநிதி தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு தன்னிடத்திலே உள்ள மூலப்பொருட்ளைப் பாவித்து அந்த நோயைக் குணப்படுத்த முயற்சிக்கும் பிரதிநிதிக்கு இயலாத கட்டத்தில் நோய் நிலையை நரம்புகள் ஊடாக மூளைக்குத் தெரியப்படுத்தும். அச்சமயத்தில் மூளை நாம் நெறிப்படுத்திய வெளி வேலைகளில் மும்முரமாக ஈடுப்பட்டிருந்தால் பிரதிநிதியின் தகவலை அசட்டை செய்து அந்தச் செய்தியை திருப்பி அனுப்பிவிடும். இப்படிப் பல தடவைகள் பிரதிநிதியின் தகவலை மூளை நிராகரித்தால் நாம் நோய் உபாதையைத் தாங்கமுடியாமல் வைத்தியரை நாடுகிறோம். வைத்தியரால் முடியாத பட்சத்தில் அந்த நோய் நாட்பட்ட நோயாகி விடுகிறது.

இந்த நிலையில்தான் புதிய சிகிச்சை முறையான CNT (Cerebro-Neural Therapy) நல்ல பலனை அளிக்கிறது. அதாவது நாம் நமது மூளைக்கு நமது உடம்பின் நிலையை உணர வைப்பதன் மூலம் மூளை தனது நரம்பு இணைப்புகளினூடாக உணர்வலைகளை அனுப்பி உரிய உரிய மருந்துப் பொருட்களை இரத்த ஓட்டத்தினூடாக நோய்வாய்ப்பட்ட பகுதிக்கு அனுப்பி பூரண குணத்தை அளிக்கும். இது எப்படிச்சாத்தியமாகும் என விஞ்ஞானிகளும் நவீன மருத்துவர்களும் கேட்கிறார்கள். அதற்கான விடையைக் கீழே பார்க்கலாம். நமது மூளையின் செயற்பாடுகளை இரு வகைப்படுத்தலாம்.1.உட்செயற்பாடு (Internal Function) 2. வெளிச்செயற்பாடு (External Function). உட்செயற்பாடு எனும்போது நமது உறுப்புகளின் செயற்பாட்டைக் குறிக்கும்.இந்தச் செயற்பாட்டை மூளை தனது பிரதிநிதிகளிடம் ஒப்படைத்து விட்டது. இதை நாம் Autonomic Function எனலாம். ஆயினும் இந் தச்செயற்பாட் டையும் மூளை தனது கட்டுப் பாட்டிற்குள் (control) வைத்திருக்கிறது. இதை நாம் Centaral Control எனலாம். Human Physiology யில் கூறப் பட்டுள்ள Central Nervous Control and Autonomous Ner vous Control இதையே எடுத்தியம்புகிறது. மனித உடலின் மூளையும், நரம்புத் தொகுதியும் அற்புதமானவை, சிக்கலானவை, ஆகையால் விஞ்ஞான உலகம் அவற்றை இன்னமும் ஆராய்ந்த வண்ணமே இருக்கிறது. வெளிச் செயற்பாடு எனும் போது மூளை எமது ஆசாபாசங்களுக்காக எமது நெறிப்படுத்தலின் பேரில் செயற்படுவதாகும். அதாவது நரம்புத் தொடர்பு களற்ற (wireless) சிந்தனைக் கேற்ப செயற்படுவதாகும். உதாரணமாக நாம் போடும் சிந்தனைத் திட்டங்களான வீடு, வாகனம், கல்யாணம், பிள்ளை, கல்வி ஆகிய தேட்டங்களும் அதனைச் செயல்வடிவமாக்கலும். மேற்கூறிய இருவகைச் செயற்பாட்டிற்கும் சக்தி (Energy) தேவை. நாம் நோய் வாய்ப்பட்டிருக்கும்போது மூளை ஆழ்ந்த சிந்தனையையொட்டி வெளிச்செயற்பாட்டில் இருந்தால் நமது சக்தி அத்தொழிற்பாட்டிற்கும் அதிகம் செலவளிக்கப்படுகிறது என்பதைப் பலரும் அறிந்திருப்பதில்லை. எம்மில் பலர் 80 வீதமான சக்தியை வெளிவேலைகளுக்காகச் செலவளிக்கிறார்கள். மீதம் 20 வீதமான சக்தி நமது உட்செயற்பாட்டிற்குப் போதுமானதல்ல. இதனால் எமக்கு நோய் ஏற்படும்பொழுது மூளையின் பிரதிநிதிகளால் இலகுவாகக் குணமாக்க முடிவதில்லை. சுகமாக வாழ வேண்டுமானால் எமது சக்தி 50 வீதம் உட்தொழிலுக்கும், 50 வீதம் வெளித்தொழிலுக்கும் நெறிப்படுத்தப்பட வேண்டும்.ஆகவே வெளிவேலைகளுக்குச் செலவிடும் சக்தியைத் திசை திருப்பி உடம்பின் உள்உறுப்புகளின் நோய்க்காகச் செலவிடுவதே CNT வைத்தியமாகும். இந்த முறை மிக இலகுவானதும், செலவற்றதும், பூரணத்துவமானதுமாகும்.





(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முயன்றால் முடியும்

ஒரு பெண் தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்போது அவன் எந்த விதமான தீய பழக்கங்களும் அற்றவனாக இருப்பதையே விரும்புவாள். இந்த உண்மையைக் கடந்த காலங்களில் வெளிவந்த பத்திரிகைகளின் திருமணசேவைப் பகுதியில் ஆராய்ந்த போது தெரிந்து கொள்ள முடிந்தது. விளம்பரங்களில் இளமையானவர்களுக்கும், தீய பழக்கங்கள் அற்றவர்களுக்கும், அமைதியானவர்களுக்கும் மட்டுமேஅழைப்பு விடுக்கப்பட்டிருந்தன.

அங்கு தீய பழக்கங்கள் என புகைத்தல், மதுபானம் அருந்துதல் என்பனவே முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆண்களில் மதுபானத்திற்கு அடிமையானவர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அதாவது திருமணத்தின் முன் அடிமையானவர்கள், திருமணத்தின் பின் அடிமையானவர்கள். எது எப்படியிருந்தாலும் ஒரு ஆணின் வாழ்க்கையில் மனைவியின் வரவு பெரிய மாற்றத்தையே ஏற்படுத்தும். அப்படி வந்த மனைவி கடமையைச் சரிவரச் செய்யும் பட்சத்தில்,அவளை மனைவியாக அடைந்த ஆண்மகன் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

உலகில் மனிதனாகப் பிறக்கும் எந்த ஒரு ஆண் மகனும் குடிகாரனாகப் பிறப்பதில்லை. சந்தர்ப்பம், சூழ் நிலைகள்தான் அவனை மாற்றி விடுகின்றன. அவனைத் தொடர்ந்து குடிக்கச் செய்வதும், குடியைத் திருத்துவதும் அவன் மனைவியின் கையிலேயே தங்கியுள்ளது.

குடும்பத்தில் எழும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை இருவருமே சேர்ந்து எடுக்க வேண்டும். கணவன் மனம் உடைந்து இருக்கும் சமயங்களில் மனைவி உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படியிருக்க மனைவி தவறும் பட்சத்தில் கணவன் மன நிம்மதி தேடி மதுபானத்திற்கு அடிமையாகின்றான். இதனை மனைவி உணராமல் கணவனைத் திட்டித் தீர்ப்பதால் கணவன் மேலும் துர்நடத்தைகளுக்கு அடிமையாக முற்படுவான். மனைவிக்கு மட்டுமல்ல கணவனுக்கும் சுய கௌரவம், மென்மையான உள்ளம் உண்டு. இவை பாதிப்படையும் சமயத்திலேயே அவன் மதுவை நாடுகின்றான். மனதிலிருக்கும் பிரச்சினைகளையும், விருப்பமில்லாத உணர்வுகளையும் இல்லாமல் செய்வதற்கும் அகற்றுவதற்கும் மது ஒன்று தான் தீர்வு என அவன் தனிமையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் முடிவெடுக்கின்றான். இச்சமயங்களில் மனைவி அவனோடு ஆறுதலாகக் கதைப்பதாலும் உறுதுணையாக இருப்பதாலும் அவனுக்கு மனஉறுதியை ஏற்படுத்துவதாலும் அவனது பிரச்சினைகளை மனைவி இலகுவாகத் தீர்ப்பதை உணர்வாள். உதாரணமாக திருமணம் முடித்து மூன்று மாதமே வாழ்க்கை நடத்திய பெண்மணி விவாகரத்துக் கேட்டு காவல் நிலையத்தில் புகார் கூற வந்திருந்தாள். தான் திருமணம் செய்யமுன் கணவன் எந்த விதமான தீய பழக்கங்களும் அற்றவர் என்றே கூறித் திருமணம் செய்தார்கள் என்றும், இந்த விடயம் முற்றிலும் பொய் என்பதை தனது தேன்நிலவுப் பயணத்தின் போது அறிந்து கொண்டதாகவும் கூறிக் கவலைப்பட்டார்.



விவாகரத்தை மேற்கொள்ள முன் மனைவியானவள் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். இதனால் கணவனும் திருந்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மனமுடைந்த கணவனுக்கு நம்பிக்கையூட்டி, தெம்பூட்டி எல்லாப் பிரச்சினைகளையும் மனைவி பகிர்ந்து கொள்ளவும், அதனை ஒவ்வொரு வழியிலும் கணவனுக்கு உணரச்செய் யவும் வேண்டும். மனைவியானவள் தனது குடிப்பழக்கமுடைய கணவனைத் திருத்தும் முயற்சியில் உறுதியாக இருக்கவேண்டும். கணவன் குடிபோதையில் தப்பாகப் பேசியிருந்தால், தப்பாக நடந்திருந்தால் அவனைப்பழிவாங்கும் எண்ணம் மனைவியின் மனதில் தோன்றவே கூடாது. சில மனைவி மார்கள் தங்கள் கணவர் விருந்து பசாரங்களில் மதுபானம் பாவிப்பதைப் பெருமையாகக் கருதுவார்கள். அப்படியான எண்ணங்களில் மிதக்கும் மனைவிமார்கள் கணவனின் குடிப் பழக்கத்தை ஊக்குவிக்கின்றார்கள். கணவன் குடிபோதையில் இருக்கும் போது நியாயம் பேசுவதையும், தர்க்கிப்பதையும் மனைவி நிறுத்த வேண்டும். மனதில் இரக்க குணத்தோடு நிலைமையைச் சரிவரப் புரிந்து கணவனின் சுக,துக்கங்களை பகிர்ந்து கொள்வதால் அன்பான குடிகாரக் கணவனை நிச்சயமாக ஓர் நாள் மாற்றலாம். இவற்றிற்கெல்லாம் சிகரமாக மனைவிக்குப் பொறுமை வேண்டும்.

-புதியவன் - கனடா

## புதினா சட்னி

### தேவையான பொருட்கள்

* புதினா இலைகள் - 200g
* எண்ணெய் -3தேக்கரண்டி
* பொட்டுக்கடலைப்பருப்பு - 50g
* பச்சை மிளகாய் - 6
* கறிவேப்பிலை - சிறிதளவு
* உப்பு - சிறிதளவு
* தண்ணீர் - தேவையானளவு
* தேங்காய்த்துருவல் - 1/2 மூடி

### செய்முறை

* புதினா இலைகளை நன்கு கழுவி சிறிது நேரம் தண்ணீர் வடிய வைக்க வேண்டும்.

* ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்த எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் கொதித்ததும் பொட்டுக்கடலையைப் போடவும்.கடலை சிவந்தவுடன் பச்சை மிளகாய், கறிவேப்பிலை, உப்பு, தேங்காய்த்துருவல், புதினா இலைகள் என்பவற்றைப்போட்டு ஒரு நிமிடம் வதக்கவும். சற்று ஆறியவுடன் மிக்ஸியில் போட்டு சிறிதளவு தண்ணீர் தெளித்து அரைத்து கொள்ளவும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களைத் தாக்கும் இரத்தச்சோகை

இரத்தச்சோகை வயது வேறுபாடின்றி அனைவரையும் தாக்கும். இரும்புச்சத்துப் பற்றாக்குறை இரத்தச்சோகைக்கு பிரதான காரணமாக அமைந்தாலும் விற்றமின் B12, போமிக்கமிலம், பைரி டொக்ஸின் ஆகியவற்றின் குறைபாடும் இரத்தச்சோகைக்கு காரணமாகும்.

செங்குருதிக் கலத்திலுள்ள ஈமோகுளோபின் இரத்தத்துக்கு செந்நிறத்தைக் கொடுக்கின்றது. நுரையீரலில் இருந்து உடலின் பல்வேறு கலங்களுக்கும் ஒட்சிசன் ஒழுங்காகப் பரவுவதற்கு போதுமான அளவில் ஈமோகுளோபின் இருப்பது அவசியமாகும். இரும்புச்சத்து குறையும்போது இந்த செந்நிறப் பொருள் குறைவடைகின்றது. இது இரும்புச்சத்துக் குறைபாட்டினால் உண்டாகும் சோகை எனப்படுகின்றது.

இரும்புச்சத்து குறைவடைந்தால் சோம்பல், வளர்ச்சி குன்றுதல், மூச்சுத் திணறல், ஞாபக மறதி, எடை குறைந்த சிசுக்களைப் பிரசவித்தல், இலகுவாக நோய்கள் தொற்றும் இயல்பு, வெளிறிய நிறம், நாக்கில் அழற்சி என்பன ஏற்படும்.

பிள்ளைகள் வளரும் பருவத்தில் தேவைப்படும் இரும்புச்சத்தின் அளவு மிக அதிகமாகும். வாழ்க்கையின் முதல் 18 வருட காலத்தில் 4 - 4.5 கிராம் அளவான இரும்பச்சத்து சேகரிக்கப்பட்டு அது வாழ்நாள் முழுவதும் பேணப்படுகின்றது. வளரிளம் பருவத்தை அடுத்து பூப்படையும் பெண்ணின் இரும்புச்சத்து தேவை சாதாரண ஒருவரின் தேவையை விட அதிகமாகும்.

மாதவிடாயின்போது இரும்புச்சத்து இழக்கப்படுகின்றது. இந்த இழப்பு நிரப்பப்படாவிட்டால் இரும்புச்சத்து பற்றாக்குறை தோன்றலாம். பிள்ளைகள், பெண்கள் ஆகியோர் இரும்புச்சத்துக் குறைபாட்டினால் பெரிதும் பாதிக்கப்படுவதற்கு இதுவே காரணமாகும். மேலும் கர்ப்பகாலத் திலும் பாலூட்டும் காலத்திலும் அதிக இரும்புச்சத்து தேவைப்படுவதனால் அந்தப்பருவங்களில் பெண்கள் இரும்புச்சத்துக் குறைவினால் ஏற்படும் இரத் தச்சோகை பாதிப்பிற்குள்ளாகும் அபா யம் அதிகமாகும்.

நாளாந்தம் உட்கொள்ளும் உணவின் அளவு போதாமை, குருதி வெளியேறல், விபத்துக்களின்போது அல்லது மூலநோய் மாதவிடாய் போன்றவனவற்றால் தொடர்ந்து இரத்தப்பெருக்கு உண்டாதல் ஆகியவற்றால் இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்படும்.

உணவில் செறிந்திருக்கும் இரும்புச்சத்து அதன் தன்மையைப் பொறுத்து இரண்டு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளது.

1. இரத்தச்சிவப்பு இரும்புச்சத்து (Heam Iron)

இது பெரும்பாலும் இறைச்சி, மீன் ஆகியவற்றில் காணப்படும். இந்த உணவு வகைகளிற் காணப்படும் 15 - 20% இரும்புச்சத்து உடம்பிற் செறிகின்றது.

2. இரத்தச் சிவப்பற்ற இரும்புச்சத்து (Non Heam Iron)

பயறு வகைகள், பருப்பு வகைகள், கரும் பச்சைக்கீரை வகைகள், முட்டை, பால் ஆகியவற்றில் கணிசமான அளவு இரும்புச்சத்து உண்டு. இந்த இரும்புச்சத்து இரத்தச்சிவப்பு பிசிதம் அற்றதென்பதால் உணவில் சேர்ந்திருக்கும் ஏனைய அம்சங்களைப் பொறுத்தே இரும்புச்சத்தின் செறிவு அமையும்.

ஆகவே நாம் உண்ணும் உணவிலிருந்து கூடுதலான அளவு இரும்புச்சத்து உடலிற் செறிய வேண்டுமானால் - இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும்,இரத்தச் சிவப்பற்ற இரும்புச்சத்து அதிகமாகச் செறிவதற்கு வாய்ப்பளிக்கும் உணவுப் பொருட்களை எமது ஆகாரத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இரும்புச்சத்து அதிகமாகச்செறிய வேண்டுமானால்

* விற்றமின் 'C' அடங்கிய புத்தம் புதிய காய், கறிகளையும் பழங்களையும் உண்ணல் வேண்டும்.

* உணவு தயாரிக்கும் போது எலுமிச்சம்பழம், புளி, தக்காளிப்பழம் போன்ற அமிலப் பொருட்களைச் சேர்த்துக்கொள்ளவும். இவ்வகையான பொருட்களிலுள்ள சிற்றிக், மலிக் மற்றும் தாட்ரிக் அமிலமானது. விற்றமின் 'C'யுடன் இரும்புச்சத்துச் செறிவையும் அதிகரிக்கச் செய்கின்றது.

* கடலை, பாசிப்பயறு போன்றவற்றைத் தயரிப்பதற்கென மாவைப் புளிக்க வைக்கும்போது இரும்புச்சத்து செறிய வாய்ப்புண்டாகின்றது.



* ஆகாரத்தோடு சிறிதளவேனும் மீன் அல்லது இறைச்சி சேர்ந்தால் இரும்புச்சத்து செறிவது அதிகமாகும்.இரும்புச்சத்து செறிவதற்கு தடையாக உள்ள உணவுகள்.

* தனின் அடங்கிய உணவுகள். - உ-ம் :- தேநீர், கோப்பி மற்றும் தானியங்களின் தவிடு.

* பைற்றேற் அல்லது பொசுபேற் அடங்கிய உணவுகள் -

உ-ம் :-அரிசி, சோயா, அவரை

* உணவு உண்ணும் முன்னும் பின்னும் தேநீர் அல்லது கோப்பி பருகுவதைத் தவிர்த்தல் நன்று.

தினமும் செறிய வேண்டிய இரும்புச் சத்தின் அளவு

| வயது (ஆண்டுகள்) | தேவைப்படும் அளவு/மி.கிராம் | |
|---|---|---|
| வளரும் பிள்ளைகள் | | |
| 1 -3 | 8 | |
| 4 -6 | 10 | |
| 7- 9 | 14 | |
| | பெண் | ஆண் |
| 10-12 | 21 | 20 |
| 13-15 | 20 | 26 |
| 16-18 | 21 | 34 |
| பெரியவர்கள் | 19 | 17 |

குறை இல்லாதவர்கள் உலகில் இல்லை. குறைகளுக்கிடையில் குணத்தைக்கண்டு வாழ வேண்டும். முட்களுக்கு இடையே முரட்டு இலைகளுக்கு நடுவே மெல்லிய மலரைக்கண்டு தேடுகின்றது தேனீ. அது தான் வாழத்தெரிந்தவர்கள் வழி!

www.tamilarangam.net


# மாத பலன்கள்

பிரம்மஸ்ரீ சோ.சிவகடாட்ச சர்மா

01.05.2004 - 31.05.2004




**அஸ்வினி, பரணி, கார்த்திகை-1**

கல்வி முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பிரயாணங்களால் நன்மை யுண்டு. திருமண முயற்சிகள் தாமதமாகும். குழந்தைப்பாக்கியம் கிடைக்கும். முதியோருக்கு நன்மையுண்டு. வாழ்க்கைத் துணைக்கு முயற்சிகள் தடைப்படும். சகோதர உதவி யுண்டு. வயிறு, குடல் சம்பந்தமான நோய் கள் ஏற்படலாம்.

கூடாத நாட்கள் : 1,2,3,5,6,7




**கார்த்திகை - 2,3,4 ரோகிணி, மிருக சீரிடம் - 1,2**

கல்வியில் முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். வீடு, நிலம் அல்லது வாகனம் விற்க இடமுண்டு. தூரப்பயணம் அல்லது இடமாற்றம் ஏற்படலாம். திருமண முயற்சிகள் வெற்றி யளிக்கும். 7 ஆம் திகதிக்குப்பின் பிள்ளைகள் இடம்மாறலாம் அல்லது தூரப்பயணம் செய்யலாம். வாழ்க்கைத்துணைக்கு தனலாபம் கிடைக்கும். ஏழரைச்சனி கடைக்கூறு நடக்கின்றது. சனீஸ்வரனை வழிபடவும்.

கூடாத நாட்கள் : 3,4,5,8,9




**மிருகசீரிடம் - 3,4, திருவாதிரை, புனர்பூசம் - 1,2,3**

கல்வியில் மந்த நிலை காட்டும். தொழிலில் பிரச்சினைகள் ஏற்படலாம். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். 7 ஆம் திகதிக்குப்பின் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். தூரப்பயணங்கள் செல்லவேண்டியிருக்கும். 26 ஆம் திகதிக் குப்பின் சிலருக்கு இடமாற்றம் உண்டு.தூர இடங்களில் உள்ள பிள்ளைகளைச் சந்திக் கும் வாய்ப்பு உண்டாகும். வாழ்க்கைத் துணைக்கு சில கஷ்டங்கள் ஏற்படலாம். ஏழரைச்சனி நடுக்கூறு நடக்கின்றது. திருவாதிரையில் பிறந்தவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவும். கூடாத நாட்கள் : 5,6,7,10,11




**புனர்பூசம் - 4,பூசம்,ஆயிலியம்**

கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் இருந்தாலும் செலவுகள் அதிகமாக இருக்கும். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். வாழ்க்கைத்துணைக்கு தூரப்பயணம் அல்லது பொருட்செலவு உண்டு. குடும்பநிலை சுமுகமாகவிருக்கும். கண் ரோகங்கள் வரலாம். ஏழரைச்சனி முற்கூறு நடக்கின்றது. சனீஸ்வரனை வழிபடவும். இடபம், மிதுனம், துலாம், மகரம், கும்பம் ஆகிய இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு நன்மையுண்டு.

கூடாத நாட்கள் - 8,9,12,13




**மகம்,பூரம், உத்தரம்-1**

7 ஆம் திகதிக்குப்பின் கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். தொழில் முன்னேற்றம் உண்டு. பொருள் லாபம் உண்டு. 14 ஆம் திகதிக்குப்பின் புதிய தொழில் ஆரம்பிக்கலாம். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். திருமணத்தடைகள் நீங் கும். வாழ்க்கைத்துணைக்கு அதிஷ்டம், லாபம் உண்டு. குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற் படலாம். வெளிநாட்டில் இருப்போர் தாய்நாடு சென்று வருவர். வீடு, நிலம், வாகனம், வாங்கலாம் அல்லது விற்கலாம். சகோதர உதவியுண்டு. 15 ஆம் திகதி வரை செலவு கள் அதிகமாக இருக்கும்.

கூடாத நாட்கள் : 10,11,14,15,16




**உத்தரம் - 2,3,4, அத்தம், சித்திரை-1,2**

கல்வியில் சிறிது மந்த நிலையிருக்கும் தொழில் முன்னேற்றம், தொழில் மாற்றம் உண்டு. அரச தொழில் பார்ப்போருக்கு வருவாய் அதிகரிக்கும். 15 ஆம்திகதி வரை வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். அதன் பின் செலவுகள், முதலீடுகள் அதிகமாக இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புடைய வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். தூரபயணங்கள் செய்ய வேண்டியிருக்கும். வாழ்க்கைத்துணைக்கு இடமாற்றம், பிரயாணம், பொருட் செலவு உண்டு. 7 ஆம் திகதிக்குப்பின் உடல் நலக்குறைவு மனக்கவலை ஏற்படலாம்.

கூடாத நாட்கள்: 12,13,17,18




**சித்திரை-3,4, சுவாதி, விசாகம் -1,2,3**

கல்வியில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். 7 ஆம் திகதிக்குப்பின் வெளிநாட்டுப் பயணங் கள் நன்மை தரும். திருமண முயற்சிகள் வெற்றியாகும். புத்திர பாக்கியம் கிடைக்கும். குழந்தைகளுக்கு நன்மையுண்டு. பொன், பொருள் லாபமுண்டு. 26 ஆம் திகதிக்குப்பின் பொருள் நட்டமேற்படலாம். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். உடல் நலம் நன்றாக இருக் கும்.

கூடாத நாட்கள் : 14,15,16,19,20,21




**விசாகம் - 4, அனுஷம், கேட்டை**

கல்வி சற்றுப்பின்னடைவு ஏற் படலாம். தொழிலில் பிரச்சினைகள் உருவாகி நட்டத்தைக்கொடுக்கும். வியாபாரத்தில் ஓரளவு முன்னேற்றம் உண்டு. இடமாற்றம் அல்லது தூரப்பயணம் செல்லவேண்டியிருக்கும். திருமண முயற்சிகள் தடைப்படும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். குழந்தைகளுக்கு நன்மையுண்டாகும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். வாழ்க்கைத்துணைக்கு உடல்நலக் குறைவு உண்டாகும். தாயாருக்கும் சகோதரங்களுக்கும் கஷ்ட பலன். 14 ஆம் திகதிக்குப் பின் தொழிற்பிரச்சினைகள் தீரும். சனி அட்டமத்தில் நிற்பதால் சனீஸ்வரனை வழிபடவும் கூடாத நாட்கள் 17,18,21,22,23




**மூலம், பூராடம், உத்திராடம் -1**

கல்வி முன்னேற்றம் உண்டு. தொழிலில் முன்னேற்றம் இருந் தாலும் 26 ஆம் திகதிக்குப்பின் தொழிற் பிரச்சினைகள், பொருள் நட்டம் ஏற்படலாம். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். வெளிநாட்டுப்பயணம் சாத்தியமாகும். வாழ்கைத்துணைக்கு வெளிநாட்டு வருவாய் கிடைக்க இடமுண்டு. திருமண முயற்சிகள் வெற்றிதரும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். 26 ஆம் திகதிக்குப்பின் உடல் நலம் பாதிக்கப்படலாம்., வாழ்க்கைத் துணைக்கு கஷ்டங்கள் ஏற்படலாம். மகாவிஷ்ணுவை வழிபடவும்.

கூடாத நாட்கள் : 19,20,21,24,25,26




**உத்தராடம்- 2,3,4 திருவோணம்,அவிட்டம்-1,2**

கல்விமத்திமமாகவிருக்கும். தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும். வியாபாரத்தில் நட்டமேற்படலாம். ஒரு சிலர் வெளிநாட்டுப்பயணம் செல்ல வேண் டியிருக்கும். பொருட்செலவு, பொருள் நட்டம் ஏற்படலாம். குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிப்படையும். 26 ஆம் திகதிக்குப்பின் சுபச்செலவுகள் ஏற்படும். குடும்ப உறவு சீராக இருக்கும். வாழ்க்கைத்துணைக்கு நன்மைகள் உண்டாகும். வியாழன் அட்டமத்தில் இருப்ப தால் குரு பகவானையும் தட்சணா மூர்த்தி யையும் வழிபடவும்.

கூடாத நாட்கள்: 21,22,23,26,27,28




**அவிட்டம்-3,4, சதயம், பூரட்டாதி -1,2,3**

கல்வியில் நல்ல முன்னேற் றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். வீடு,நிலம், வாகனம் சேரும். வெளிநாட்டுப் பயணங்கள் உண்டு. திருமண முயற்சிகள் கைகூடி வரும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். வாழ்க்கைத் துணைக்கு இடமாற்றம், பிரயாணம் உண்டு. உடல் நலம் நன்றாகவே இருக்கும்.

கூடாத நாட்கள் - 24, 25, 26,29,30




**பூரட்டாதி - 4, உத்திரட்டாதி, ரேவதி**

கல்வியில் முன்னேற்றம் இருந் தாலும் சில தடைகள் ஏற்படலாம். தொழிலில் பிரச்சினைகள், கஷ்டங்கள், பொருள் நஷ் டங்கள் ஏற்படலாம். வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்குமாயினும் எதிர்பாராத பொருட்செலவுகள் ஏற்பட இடமுண்டு. கொடுத்த கடனைத்திரும்பப் பெறுவது கஷ் டம். பெருமளவில் முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். வெளிநாட்டுப்பயணங்களால் கஷ்டப்பட வேண்டியிருக்கும். திருமணமுயற் சிகள் தாமதமாகும். உடல்நலம் பாதிக்கப் படலாம். குரு பகவானையும் தட்சணாமூர்த்தி யையும் வழிபடவும் கூடாத நாட்கள் - 2,3,6,7,29,30


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வையகம் போற்றிடும் வைகாசி விசாகம்

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற மானிடர்கள் வைகாசி விசாக நன்நாளை வாஞ்சையுடன் கொண்டாடி மகிழ்வதால் தைமாதப்பிறப்பிலே தைப்பொங்கல் பொங்கி ஆதவனுக்கு நன்றிக்கடன் செலுத்திய இந்து மக்கள் மாசி மகத்திலே மகா சிவராத்திரி விரதம் அனுட்டித்து, பங்குனி மாதத்திலே பங்குனி உத்தரவிரதம் அனுட்டித்து, பங்குனித்திங்களிலே சக்தியாகிய அம்பாளுக்கு பொங்கல் பொங்கி பூரிப்படைந்த மானிடர்கள் வைகாசி மாதத்திலே 'வைகாசி விசாகம்' ஆகிய புண்ணிய நந்நாளிலே எம்பெருமான் முருகப்பெருமானை நினைத்து விரதம் அனுட்டித்து இகர பர இன்பம் பெற்றுக்கொள்வர்.

இச்சாசக்தி, கிரியாசக்தியாகிய வள்ளி, தெய்வயானை சமேதராக வீற்றிருக்கும் ஞான சக்தியாகிய வேற்பெருமானை உள்ளவற்றில் இருந்து வழிபடுவர்.வைகாசி தினத்திலே முருகப்பெருமானை நினைத்து விரதம இருந்து அமுதவல்லி, சுந்தரவல்லியாகிய தெய்வயானை, வள்ளி சமேதர சண்முகப்பெருமானை நெக்குருகி உள மார வழிபடுவர். வைகாசி விசாகம் முருகனுக்குரிய அதி சிறப்பு வாய்ந்த ஓர் விரதநாளாகும்.

முருகப்பெருமானின்மேல் பேரன்புடைய அடியார்கள் தமக்குப்பிறக்கும் குழந்தைகளுக்கு சண்முகன், விசாகன், சரவணக்குமரன், பழனியாண்டி, அழகன் போன்ற இன்னோரன்ன முருகனின் திருநாமங்களை சூட்டி அகம் மகிழ்வார்கள்.

வைகாசி மாதம் பௌத்தர்களுக்கும் சிறப்பு வாய்ந்த மாதமாகும். வெசாக், பொசன் பண்டிகை பௌத்தர்களால் மிகவும் பக்தி சிரத்தையுடன் புத்த பகவானை நினைத்து தானம் கொடுத்து இறைவழிபாட்டில் ஈடுபடுவார்கள். வைகாசி மாதத்திலே அம்பாளை நினைத்து பொங்கி வழிபடும் வழக்கமும் பண்டு தொட்டு இன்று வரை இந்து மதத்தவர்களிடையே வாழையடி வாழை யாக நிகழ்ந்து வரும் செயற்பாடாகும். வைகாசி மாதத்திலே புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்திலே பொங்கல் விழா வெகு நேர்த்தியாக நடைபெற்று வருகின்றமை பெருஞ்சிறப்பாகும்.

வைகாசி விசாகத்திலே முருகப்பெருமானுக்கு விரதமனுட்டிப்பதோடு மட்டுமல்லாமல் மாவிளக்கேற்றி மனநிறைவடைவதும் உண்டு. கலியுக வரதனாகிய கந்தப்பெருமானை உளமார நினைத்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களும் கைகூடும் என்பது ஆன்றோர் வாக்கு. முருகப் பெருமானை பல திருநாமங்கள் கொண்டு அழைப்பார்கள்.

அவற்றில் வள்ளி மணவாளன், சேவற்கொடியோன், கடம்பன், கந்தன், முருகன், சண்முகன், குமரன், வேலன், மயில்வாகனன், ஆறுமுகன், அழகன் என பல நாமங்கள் கொண்டவன் முருகன். 'முருகு' என்றால் அழகு என்று பொருள்படும். பன்னிரு மாதங்களிலும் விசாக நட்சத்திரம் வருவதுண்டு. ஆனால் வைகாசி மாதத்திலே வருகின்ற 'விசாக' நட்சத்திரமே சிறப்பானதாகும்.

முருகனின் அருட்பெரும் சக்தி சர்வ வியாபகமாய் பேரொளி வீசி பக்தர்களைப் பரவசப் படுத்துவதாக!முருகனுக்குரிய விரத நாட்களில் ஐப்பசி வெள்ளி, கந்த சஷ்டி ஆகியன எவ்வளவு முக்கியமானதோ அவ்வண்ணமே வைகாசி விசாகமும் முருகனுக்குரிய சிறப்பான விரதநாளாகும். இம்முறை வைகாசி விசாகம் (01.06.04) செவ்வாயன்று வருகின்றது. வைகாசி விசாகத்தின் மறுநாள் பூரணை தினமாகும். நிறைந்த முழுமதி நாளாகிய பூரணை அடுத்து வருவதால் தாரண வருடத்தின் சிறப்பான வைகாசி விசாக நாளாக இந்நந்நாள் அமைகின்றது.

- மாவையூர் சண்முகசுந்தரம்

# தமிழீழத்தின் தேசியப்பூ

தமிழர்களின் தேசியப்பூவாக, தமிழீழத்தின் தேசியப்பூவாக கார்காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழ தேசியக்கொடியின் வர்ணங்களைக் கொண்டுள்ளதும், தமிழீழ மாவீரர் நாள் வருகின்ற மாதத்தில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்கும் பரவிக்காணப்படுவதுமான கார்த்திகைப் பூ பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.பண்டைய தமிழ்மன்னர்கள் காலத்தில் சோழருக்கு அத்திப்பூவும், சேரருக்கு பனம் பூவும், பாண்டியர்க்கு வேப்பம்பூவும் தேசிய மலர்களாக இருந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட பூக்களின் மாலைகளையே அவர்கள் களமுனைகளுக்கு செல்லும் போது அணிந்து சென்றதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். காந்தள் என்பது கார்த்திகைப் பூவின் பாரம்பரியத் தமிழ்ப் பெயராகும். இவ்வரலாற்றுச் சான்றாதாரத்தினூடாக கார்த்திகை மலருக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு தெட்டத்தெளிவாகத்தெரிகின்றது.

இராணுவச் சின்னங்கள், நாடுகள், நகரங்கள், மாநிலங்கள் என்பனவும் தத்தமதுதனித்துவத்தை வெளிப்படுத்த தமது சமூக கலாசார பண்பாடு பின்னிப் பிணைந்துள்ள பூக்களைப் பயன்படுத்துகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒவ்வொரு குடியரசிற்கும் ஒவ்வொரு பூ குடியரசுப் பூவாய் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியப் பூவாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள கார்த்திகைப்பூவைப் பற்றிய மூலாதார விடயங்களை பார்ப்போம். கார்த்திகைப் பூவினை பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே காந்தள் என்றே அழைத்தனர். ஒரு வித்திலைத் தாவரங்களில் வெங்காயக் குடும்பமாகிய லில்லி ஆசியே (Lili aceae) எனப்படும் வகையினைத் சேர்ந்ததாகும்.



இக்கொடியின் தண்டு பச்சை நிறமானது. நலிந்தது பலமில்லாதது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றுக்கம்பிகள் போல பக்கத்திலுள்ள மரஞ்செடி முதலிய ஆதாரங்களைப் பிடித்துக்கொண்டு வளரும். கிளை விட்டுப் படரும் ஆண்டுதோறும் புதிய கொடிகள் நிலத்தினுள்ளே இருக்கும் கிழங்கிலிருந்து வளரும். கிழங்கு சாதாரணமாக இரண்டு பிரிவுள்ளதாக இருக்கும்.. இது உழவர்களின் கலப்பை போலத் தோன்றுவதால், இதனைக் கலப்பை எனவும் அழைப்பர்.கிழங்கின் ஒவ்வொரு பிரிவின் முனையிலும் புதிய கணு உண்டாகும். இலைகளுக்குக் காம்பில்லை எனலாம். 3 அங்குலம் தொடக்கம் 6 அங்குலம் வரையான நீளம், 0.75 அங்குலம் தொடக்கம் 1.75 அங்குலம் வரை அகலமிருக்கும். கணுவிடைகள் வளராமையால் வட்டவொழுங்கில் அமைந்திருப்பதுமுண்டு. இலை அகன்ற அடியுள்ள ஈட்டிவடிவில், நுனி கூராக நீண்டு பற்றுக்கொம்பு போலச் சுருண்டிருக்கும். பூக்கள் பெரியவை.

இலைக்கக்கத்தில் தனியாக இருக்கும். அல்லது கிளைகளின் நுனியில் இலைகள் நெருங்கியிருப்ப தால் சமதள மஞ்சரி போலத் தோன்றும். ஆறு இதழ் கொண்ட இப்பெரிய பூக்கள் (6-7 செ.மீ நீளம்) செப்ரெம்பர் தொடக்கம் ஜனவரியிலும், மார்ச்சிலும் மலர்கின்றன. பூக்காம்பு 3-6 அங்குல நீளமிருக்கும். முனையில் வளைந்திருக்கும். 2.5 அங்குல நீளம், 0.3-0.5 அங்குல அகலம் கொண் டதாகும். குறுகி நீண்டு ஓரங்கள் அலைபோல நெளிந்திருக்கும். தளை அவிழ்ந்த மலர் ஏழு நாட்கள் வாடாமல் இருக்கும். இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள். பிறகு மஞ்சள், பிறகு செம்மஞ்சள், பிறகு துலக்கமான சிவப்பு, நீலம் கலந்த சிவப்பாக மாறிக்கொண்டு போகும்.பூவின் நிறம் இருவேறாக மாறுபடுவதால் இதனை வெண் காந்தள், செங்காந்தள் என்ற இரு வேறு வகைகளாக அழைப்பர். கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்றும் கணுக்களில்லாததை பெண்காந்தள் என்றும் கூறுவர்.

கார்த்திகைச் செடியின் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பலவிதமாகப் பயன்படுகின்றது. இக்கிழங்கில் காணப்படும் நச்சுப்பொருளான கொல்சிசைனே வைத்திய முறைகளில் பயன்படுகின்றது.

காந்தள் என அழைக்கப்படும் கார்த்திகைத் திங்களில் முகிழ்விடும் இம்மலர்க் கொடி தமிழீழம் மற்றும் இந்தியா, சீனா, மலாக்கா தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படுகிறது.

இதன் பூ தீச்சுவாலை போலக் காணப்படுவதால் 'அக் கினிசலம்' எனப்படும். இதன் கிழங்கு கலப்பை வடிவமானதாக இருப்பதால் கலப்பை எனவும் அழைக்கப்படும்.

கார்த்திகைச் செடியானது வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும் இக்கொடி படர்ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் தோன்றும். இதனாலேயே இச்செடிக்கு மிக மேலான மாட்சிமை பொருந்தியது எனும் பொருளில் Gloriosa Superba என்ற பெயரில் அழைப்பர்.

கார்த்திகைப் பூவின் ஏனைய மொழிப் பெயர்கள் வருமாறு:

சிங்களம்: நியன்கல, சமஸ்கிருதம்: லன்கலி, இந்தி: கரியாரி, மராட்டி: மெத 'தொன்னி, தாவரவியற் பெயர்: லல்லி ஆசியே குளோறி லில்லி (Liliaceae Glory lily) தேசத்தின் பூவாம் கார்த்திகைப் பூவினை இனிவரும் காலங்களில் தேசிய நிகழ்வுகள் அனைத்திலும் அணிந்து தேசிய மாண்பினை வெளிப்படுத்துவோம். இல்லங்கள், பொதுக் கூடங்கள், வாணிப மையங்கள், கல்விச்சாலைகள் என எல்லா விடங்களிலும் கார்த்திகைச் செடி வளர்த்துப் பேணி கார்த்திகைப்பூவால் தமிழர் தேசமதை நிறைத்திடுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

 www.tamilarangam.net 


'கனவுகள் நிஜமானால்' திரைப்படத்தில் நடிக்கும் கைலி (Kailli)

சூப்பர் ஸ்டாரின் இடத்தைப்பிடிக்க பல முன்னணி நடிகர்கள் நான், நீ என போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில் இளையதளபதியோ ஒரு படி மேலேயே போய் ரஜினியின் உதவியாளரை தனக்கு உதவியாளராக்கும் முயற்சியில் இறங்கி விட்டார். இதெல்லாம் ஒருபக்கமிருக்க, தேர்தல் சூடு பிடித்திருக்கின்றது. தேர்தலில் ரஜினி ரசிகர்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டுப்போடுவது என்ற சிந்தனையில் இருக்கின்றனர். இதற்கிடையில் ரஜினி சமீபத்தில் இமயமலைக்கு திடீர்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். தான் அங்கு தியானம் மேற்கொள்ளப்போவதாக அவர் புறப்படுவதற்குமுன் கூறியிருந்தார்.



மணிரத்தினத்தின் படம் என்றாலே எதி... கலந்திருக்கும். இந்த வகையில் அவரது ... எழுத்து' படமும் அமையும் என எதிர்பார்... பிரபல ஜோடிகளின் அசத்தலான படங்க... கின்றன. வித்தியாசமான ஒப்பனையில் ம... ஜோடி. இருவரும் மணிரத்தினத்தின் பாச... பட்டு வருகின்றனர். சூர்யா - இஷா ஜோ... லும், சித்தார்த் - த்ரிஷா ஜோடி கலகல... ஒவ்வொரு பாத்திரங்களும் மணிரத்தின...

# இலண்டனில் உருவாகும் 'கனவுகள் நிஜமானால்'

இலண்டனில் தயாரிக்கப்படும் படம்- 'கனவுகள் நிஜமானால்'. இவ்வருடம் ஓகஸ்ட்/செப்டெம்பர் மாதத்தில் திரையிடப்படவிருக்கின்றது. இயக்குநர் புதியவனின்(சண்முகலிங்கம் ராசையா) இரண்டாவது திரைப்படம் இது. இவரது முதலாவது திரைப்படம் 'மாற்று' கடந்த வருடம் வெளியிடப்பட்டது. பிரபல நடிகர்களின் திறமையான நடிப்பில் வளர்ந்து வருகின்றது 'கனவுகள் நிஜமானால்'. இப்படத்தினைத் தயாரிப்பவர் திரு.ரவி. தென்னிந்திய திரையுலகுக்கு நம்மவர்களும் சளைத்தவர்களல்லர் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக தாயகத்திலும், நம்மவர் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளிலும் பல திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இன்னோர் திறமைப்படைப்பாக 'கனவுகள் நிஜமானால்' திரைப்படம் அமையவிருக்கின்றது.


தயாரிப்பாளர் ரவி


'கனவுகள் நிஜமானால்' பிரசாந்த், ஷாமினி (Pirasanth & Shamimi)


'கனவுகள் நிஜமானால்' படத்திலிருந்து...

* சொந்தப்படம் எடுத்து நொந்து போன நாஸர் மனைவியிடம் ஐடியா கேட்க, மனைவியோ "இரும்பு வியாபாரம் செய்யலாம். எலியும் கடிக்காது பழுதும் ஆகாது" என்று சொல்லியிருக்கின்றார் இப்போது மனைவி சொல்லே மந்திரம் என்று நாஸர் இரும்புக்கடையொன்றை திறந்துள்ளார். நடிக்கும் நேரம் தவிர்ந்த மிகுதி நேரங்களில் இவரை இரும்புக் கடையில் காணலாமாம்.
* 'ஜே ஜே' படத்தில் அறிமுகமான பூஜா இப்போது 'அட்டகாசம்' படத்தில் அஜித்துடன இணைந்து நடித்துவருகின்றார். ஷாலினியின் நண்பி என்று அடிக்கடி பேட்டிகளில் கூறி வரும் பூஜா ஷாலினியின் அண்ணன் ரிச்சர்ட்டைக் காதலிப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.
* கமல் - பாலா இணைந்து படம் ஒன்றை இயக்கவுள்ளனர். அநேகமாக 13 ஆம் நூற்றாண்டு காலக் கதையாக இருக்கலாம். பேச்சுவார்த்தை நடக்கின்றது.
* ஆதி பராசக்தி மூவிஸின் புதிய படம் 'மகாசிவராத்திரி'. சிவபக்தையொருவரின் வாழ்வில் சிவன் ஏற்படுத்தும் திருவிளையாடல்கள்தான் படத்தின் கதை. மீனா சிவபக்தையாக நடிக்கின்றார். இருடன் சாய்குமார், பொன்னம்பலம், பிரமிளா, தாரிகா, ஸ்ரீதர் ஆகியோரும் நடிக்கின்றனர். இந்நிறுவனம் ஏற்கனவே 'கண்ணாத்தாள்', 'தாயே புவனேஸ்வரி' போன்ற படங்களைத்தயாரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மாதவன்- மீரா
ஜாஸ்மின்



ஆய்த எழுத்து
சித்தார்த்-த்ரிஷா

ப்பும் ஆச்சரியமும்
ı தயாரிப்பான 'ஆய்த
டுகின்றது. மூன்று
மிக்க வைத்திருக்
ர்- மீரா ஜாஸ்மின்
ல் பட்டை தீட்டப்
மைதியான நடிப்பி
ம் இளமைக்குமாக
கலை எண்ணத்தில்
பார்த்து செதுக்கப்பட்டு வருகின்றன என்பது இதுவரை
ியுள்ள தகவல்களைப்பார்க்கும்போது தெரிகின்றது. எனவே
மான ஒரு படமாக 'ஆய்த எழுத்து'. அமையலாம்.

## இதைக்கேளுங்க.....!

'7 ஜி ரெயின்போ காலணி' என்ற படத்தில் ஒரு பாடலுக்கு
ார். இதன் டைரக்டர் அவரது அண்ணன் செல்வராகவன்
படத்தின் ஹீரோ ரவிகிருஸ்ணா தனுஷின் நண்பர்
ான் இதற்குக் காரணமாம்.

ுமணி' படத்தின் மூலம் தமிழில்
கிய நடிகை சௌந்தர்யா கடந்த 17
] ஹெலிகொப்டர் விபத்தில் அகால
ந்தார். இந்த முறை தேர்தலில் பார
ாவை ஆதரித்த அவர் தேர்தல் பிர
றிற்காக ஹெலிகொப்டரில் சென்ற
பந்திரக் கோளாறினால் ஹெலி
ப்பற்றி இந்த அசம்பாவிதம்

திகா,'இயற்கை' தனக்கு அவ்வள
ப்புக்களை பெற்றுக் கொடுக்காவிட்
போது தான் நடித்து வரும் 'மீசை
லம் முன்னுக்கு வருவேன் என்று



விந்தியா



மீசை மாதவன்
குட்டி ராதிகா



# சினிமா உலகம் 1939 முதல் 1960 வரை

(மட்டக்களப்பு கல்முனையில் பிறந்து 1960 களின் பிற்பகுதியில் மட்டக்களப்பு அரச செயலகத்தில் மூத்த அதிகாரியாக இருந்து எழுத்துலகத்துக்கு சேவையாற்றியவர் திரு.K.W.செல்வராசா. இப்பொழுது இலண்டனில் வாழ்ந்து வரும் இவர் தனது அனுபவங்களை வாசகர்களுக்குத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றார்)

கடந்தவாரத்தொடர்ச்சி........

**கண்ணகி** : பி.யு.சின்னப்பா, பி. கண்ணாம்பா, என்.எஸ்.கிருஸ்ணன், மதுரம் நடித்த படம். சின்னப்பா, கண்ணாம்பா சிறந்த நடிகர்கள். கண்ணகியைப்போல் இன்று வரை நடிப்பு, பாட்டு இவைகளுக்கு நிகரான படம் இன்னும் வரவில்லை என்பது தான் எனது கருத்து. சின்னப்பா தமிழ்நாட்டில் சிலம்படி விளையாட்டில் வீரனாக இருந்தார். இவர் பாகவதர் பட்டம் பெறா விட்டாலும் சங்கீதத்தில் கற்றுத்தேறியவராக இருந்தார். "சந்திரோதயம் மீதினிலே","அன்பில் விளைந்த அமுதமே","பத்தினியே உன்போல்","மானமெல்லாம் போனபின்னே","நண்டு சிப்பி வேய் கதலி" போன்று 40-50 ஆம் ஆண்டுகளில் பிரபல்யமான பாடல்கள் கருத்தும் காதுக்கு இனிமையாகவுமிருந்தன.

கோவலன் எறிந்த மாலை மாதவியின் கழுத்தில் விழுந்து எடுக்க முடியாது அவதிப்பட்ட போது "இந்தாட தம்பி கத்தி" என்று ஒருவர் கொடுக்கும் காட்சி கடற்கரையில் பி.யு. சின்னப்பா "நண்டு சிப்பி வேய் கதலி" என்னும் பாடலை ஒரு பாறையின் அருகில் நின்று பாடும்போது ஒரு தனி நடிப்பு, கடைசியில் கோவலனின் கழுத்தை வெட்டுமுன் அவனது பழைய நினைவுகளை சித்தரிக்கும் போதும் கோவலனின் முகத்தி லிருந்து வியர்வை வடிவதையும் பி.யு. சின்னப்பா கோவலனாகவே மாறியிருந்தார். பி. கண்ணாம்பா எந்நேரமும் அழுகையுடனும் பத்தினியாக நடிப்பதும் கடைசிக் கட்டத்தில் அரச சபையில் தன் சிலம்புடன் வந்து "என் கணவன் கள்வனா" என்று பேசும் கணீரென்ற குரலும் நடிப்பும் கண்ணகியை நேரே தலைவிரி கோலத்தில் பார்ப்பது போலிருக்கும்.



**மனோன்மணி** :- இப்படத்தில் பி.யு. சின்னப்பாவும் ரி.ஆர்.ராஜகுமாரியும் கனவில் மணமாலை மாற்றி ஒருவரை ஒருவர் காதலிக்கும் காட்சியில் இருவரின் நடிப்பும் இயற்கையாக அமைந்திருந்தது. படத்தின் உச்சக்கட்டமாக சுரங்க வழியாக வந்த சின்னப்பா சடுதியாக கனவில் கண்ட காதலியை சந்தித்து ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டதும் தியேட்டரே அதிரும்படி ரசிகரின் கைதட்டலும் மறக்க முடியாதவை. கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் தான் காதலிக்கும் மதுரத்தின் தகப்பன் ஒரு மாட்டை இழுத்துக்கொண்டு போகும்போது அவரை அறியாமல் மாட்டின் கழுத்திலிருந்த கயிற்றை கழற்றி மாட்டை துரத்தி விட்டு தன் கழுத்தில் கயிற்றை மாட்டி வந்ததும் அதை மாமனார் கண்டதும் ஆச்சரியப்பட்டதும் தான் மாடாக இருந்ததாகவும் ஒரு புண்ணியவான் தன்னை இழுத்துப்போனால் தான் மனிதனாக மாறி விடுவேன் என்னும் ஒரு முனிவரின் சாபம் நீங்கிவிட்டதாகக்கூறி மதுரத்தை மணம் செய்ய மாமனாரின் சம்மதத்தைப்பெறுகின்றார். இது அக்காலத்தில் புதிய நகைச்சுவையாக பலராலும் ரசிக்கப்பட்டது. என்.எஸ்.கே. கலைவாணர் என்ற பட்டம் பெற இது காரணமாக இருந்தது.

**ஜகதலப்பிரதாபன்** :-பி.யு.சின்னப்பா, சரோஜினி நடித்து சுந்தர் ராவ் நட்கர்னி இயக்கிய மறக்கமுடியாத படம். இதில் ஒரு பாட்டுக்கச்சேரியில் "நமக்கினி பயம் ஏது"என்னும் சுர , வரிசை நிறைந்த நீண்ட பாடலை பி.யு.சின்னப்பா பாடுவதுடன் அவரே பக்கவாத்தியங்களை இன்னும் நான்கு பேராக மேடையில் கச்சேரி வைக்கின்றார். இதுதான் முதன் முறையாக ஒருவர் ஐந்து வேடங்களில் ஒரே மேடையில் தோன்றும் ரெக்னிக் கையாளப்பட்டது. "என்னை விட்டோடாதடா கண்ணா" என்னும் சரோஜினி பாடிய பாடல் எல்லோருடைய வாயிலும் முணுமுணுக்கப்பட்டது. நான் சிறுவனாக ஆங்கிலம் படிக்கும்போது "Don;t leave me and runaway -eyset" என்று இந்தப்பாடல் வரியை ஆங்கிலத்தில் படித்து நகைச்சுவையூட்டுவோம்.ஒரு தேவகன்னியை ஜகதலப்பிரதாபன் காதலித்து அவனுக்கு தேவர்களால் பல பரீட்சைகள் கொடுத்தார்கள். அதில் ஒன்று மேற்கூறிய பாட்டுக்கச்சேரி. அத்துடன் அக்கன்னிகையை 5 பேராக நிற்பாட்டி உண்மையான தேவகன்னிகை யாரென்று கண்டு பிடிக்கும் படி தேவர்கள் கேட்டார்கள். இதற்கு அவரின் குல தெய்வமான காளியை வணங்கிக்கொண்டே அந்த ஐவரையும் பார்த்த போது காளிதேவி ஒரு வண்டாக மாறி உண்மையான தேவகன்னிகையின் பாதத்தில் ஊர்வதை ஜகதலப்பிரதாபன் கவனித்து சரியான பெண்ணைக்காட்டுகின்றார்.

சுவாரஸ்யம் நிறைந்த புராணக்கதை. பி.யு.சின்னப்பா துரதிஷ்ட வசமாக மதுபானக்குடிப்பழக்கத்தின் காரணமாக ஈரல் கருகி இளவயதிலேயே இறந்து விட்டார். 50 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தான் தமிழ் நாட்டில் கலைஞர்களுக்கு பட்டம் கொடுத்ததால் இவர் எப்பட்டமும் பெறமுடியவில்லை. இவரும் 50 களில் உயிருடன இருந்திருந்தால் நடிகவேள், நடிகர் திலகம் போன்ற பட்டங்களை நிச்சயம் பெற்றிருப்பார் என்பது என் திடமான நம்பிக்கை.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அன்பார்ந்த தமிழ்உலக வாசகர்களே!,**

உங்கள் சிந்தனை உணர்வுகளை கடிதங்கள் மூலம் கண்டறிந்து மகிழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளோம். உங்கள் உற்சாகமும் ஆவலும் எமக்கு உரமூட்டுகின்றன. மிக்க நன்றிகள்.

தமிழ் உலகம் தற்போழுது 17 நாடுகளுக்கு சென்றடைகின்றது. தமிழன் வாழும் மற்றும் பல நாடுகளுக்கும் செல்ல வாய்ப்புகள் செய்துள்ளோம்.தற்போது இலவசமாக வெளியாகும் தமிழ்உலகம் உலகில் வாழும் 65 மில்லியன் தமிழ் மக்களையும் சென்றடைய வாய்ப்பே கிடையாது. தற்பொழுது பத்தாயிரம் பிரதிகளே அச்சிடப்பட்டு வெளியாகின்றன. உலகில் பரந்து வாழும் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றால் தமிழ்உலக சஞ்சிகைக்கு சந்தா செய்து ஆக வேண்டும்.

வாசகரின் கடிதக்-கருத்துப்படி சில இதழ்கள் கிடைக்கவில்லை என தெரிவித்திருந்தார்கள், இலவச பிரதிகளாக, தமிழர் வர்த்தக மையங்கள், ஆலயங்கள், மற்றும் பொது இடங்களில் வைக்கப்படும் குறிப்பிடத்தக்க பிரதிகள் முந்துபவருக்கு மட்டுமே என்ற தொனியில் உள்ளது.

வாசகர்களே! நீங்கள் தொடர்ச்சியாக தமிழ்உலகத்தை பார்ப்பதற்கு சரியான முறை சந்தா செய்வதே. கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு சென்றிருந்த போது பலர் இலவசபிரதிக்கு, ஏன் சந்தா? எனக் கேட்டார்கள்.

**பதில்:-** இலங்கையில் சுமார் 25 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். தற்போது 4,000 பிரதிகள் மட்டுமே இலங்கைக்கு இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தொடர்ச்சியாக குறிப்பிட்ட வாசகர்களுக்கு தொடர்ந்து தமிழ் உலகம் கிடைக்கும் என்பதற்கு சாத்தியம் குறைவாகவே இருக்கும். எனவே நீங்களும் சந்தா செய்தால் தொடர்ச்சியாக தமிழ்உலகம் உங்கள் வீடுவரும்.

சஞ்சிகையின் அனைத்து பங்கங்களும் பலவர்ணங்களில் இருப்பதை பல முதியோர்கள் விரும்பவில்லை? அப்படி இருப்பதும் நல்லதல்ல? என இலண்டனில் இருந்து தொலைபேசி அழைப்புமூலம் இளைய-அன்பர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

**பதில்:-** ***தமிழ்உலகம்*** சர்வதேச தரத்தில் வெளியாகும் ஒரு சஞ்சிகை, இந்தியாவில் இருந்து வெளியாகும் **இந்தியாடுடே** அல்லது ஐக்கிய அமெரிக்கவில் இருந்து வெளியாகும் ஆங்கில சஞ்சிகை **News week** போன்ற சர்வதேச தார தரத்தை வைத்திருப்பதும் தமிழ்உலக ஆசிரியப்பிரிவின் நோக்கமாகும். கறுப்பு-வெள்ளையில் மட்டும் அச்சிடுவது எமக்கு செலவினத்தை குறைப்பதாக இருப் பினும், வர்ணங்களில் சிலவிடையங்களை ஆணித்தரமாக காட்டிவிட முடிகிறது. இருப்பினும் வாசகர்களின் சராசரியான கருத்துக்களையும் நாம் புரிந்து ஆலோசித்து சில பக்கங்களுக்கு மாற்றங்களை ஏற்படுத்துவோம்.

நோர்வே நாட்டில் இருந்து ஒரு யுவதியின் கருத்து தபால் மூலம்: தமிழ்உலகம் இந்துமதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது ஏன்? **பதில்:-** சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கமும் அதற்கென ஒதுக்கப்பட்ட தலையங்க, உப-தலையங்கங்களுக்கு உட்பட்டே ஆக்கங்கள் வெளியாகின்றன. குறிப்பாக பக்கம் 21 'காலமும் மாற்றமும் - விஷேடதினங்கள்' என்ற தலையங்கங்களுக்குள் அடங்குகின்றன. இப்பக்கங்கள் சமய சிந்தனை வாய்ந்தவை. கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் பண்டிகைகள் சமயநிகழ்வுகள் வரும் காலங்களில் அவற்றுக்கு முக்கிய இடங்கொடுக்கும் முகமாக பக்கம் 21 அமையும். தமிழ் உலகம் ஒரு தமிழ் சஞ்சிகையாகவே விளங்கும். சமயசஞ்சிகையாக அல்ல.

திருமண ஒன்றிணைவுகளுக்கு பக்கம் 36இல் பலமானஇடம் கொடுத்துள்ளோம். 'மணமக்கள் தேடல்' வாழ்வை இணைக்கும் சஞ்சிகையாக தமிழ்உலகம் விளங்குவதையிட்டும் நாம் பெருமை அடைகிறோம். தமிழ் உலகம் மூலம் பலர் இணைந்தும், இணையஇருப்பதும் கண்கூடே.

உலகத்தமிழர் மத்தியில் சர்வதேசரீதியில் வெளியாகும் ஒரே இதழ் என்ற பெருமையை பெறும் தமிழ்உலகம் தமிழர்களை இணைக்கும் தொடர்வலையாக அமைவதுடன், தமிழர் வாழ்நாளில் பலநாட்டு தொடர்புப்புதினங்களை இலகுவாக்கி வருவதை இட்டும் மகிழ்ச்சி அடைகிறோம்.

உங்கள் ஆங்கங்களையும் தமிழ்உலகத்தில் நகர்த்த ஆவன செய்வீர. தரமானவை உருவாக்கங்கள், ஆசிரியக் குழுவின் பரிசீலனையின் பின் தமிழ் உலகில் நகர்த்தப்படும்.

**உங்கள் ஆதரவுக்கும், ஆர்வத்திற்கும் மீண்டும் எமது நன்றிகள்.**

**வணக்கம்**

**சு. கிருஷ்ணதாசன்,**

**நிர்வாகப் பொறுப்பாசிரியர் - இலண்டன்.**

அன்பின் ஆசிரியருக்கு! உலகத் தமிழரை தமிழ் உலகம் சஞ்சிகை ஒன்றிணைக்கின்றது. பக்கங்கள் அதிகரிக்க வேண்டும். மெல்லச்சாகாது இனித்தமிழ். இப்பெருமை உங்களுக்கும் சேரும். ஆசிரியர்- வாசகர் கேள்வி பதில்களை ஆரம்பிக்கலாமே! முதல் 2 பிரதிகளும் பார்க்க முடியவில்லை. தமிழ் உலகம் அனைத்து வாசகர்களுக்கும் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள். தமிழ் உலகம் வாழ மனதார வாழ்த்துக்கள்.

**தி.சதானந்தன்,**
**இல: 12/1 லூர்து மாவத்தை**
**சிலாபம்,இலங்கை**

தமிழ் உலகம் அனைத்துலக தமிழ் மக்களின் வாசல் கதவுகளைத் தட்டித் திறக்குமோர் உன்னத படைப்பாகும். வண்ணத்தலைப்புக்களில் உணர்வுபூர்வமான கருத்துக்களை தாங்கி வாசல் வரை வந்து வரவேற்கும் சஞ்சிகையின் ஆசிரியர் பீடத்திற்கு எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இதனை மாணவர்கள் படித்து பயனடைய வேண்டும் என்பதால் மூன்று வருட சந்தாவை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

**சுவாமி நடராஜானந்தஜீ**
**சிறுவர் புனர்வாழ்வுக்கல்லூரி**
**சித்தாண்டி**

கனம் ஆசிரியர் அவர்கட்கு,

தமிழ் உலகம் உலகமெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் அபிமானத்தையும் பெற உளமார வாழ்த்துகின்றேன்.

எனது சிறுகதையான 'யாருக்காக அழுதான்' கதை தமிழ் உலகத்தில் இடம்பெற்றதையிட்டு அளவில்லா ஆனந்தம் கொண்டேன். .

**பாலா சங்குபிள்ளை,**
**46/5 ஜோதிவிலா**
**டன்பார் வீதி, ஹட்டன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் உலகம்

## இலண்டன்

## அனைத்துலக தமிழ் சஞ்சிகை

வருடச்சந்தாவைச்செலுத்த விரும்பும் இலங்கையிலுள்ளவர்கள் காசுக்கட்டளைகளை Global Investment Lanka (Pvt)Ltd இன் பெயருக்கு, அஞ்சல் அலுவலகம் Havlock Town எனக்குறிப்பிட்டும், காசோலைகளை Global Investment Lanka (Pvt)Ltd எனவும் குறிப்பிட்டு

'தமிழ் உலகம்'

**Meewella Building, 7th Floor,**

**329,Galle Road, Colombo -04** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கட்டணம் : ஒருவருடம் : ருபா 600/=

அன்புள்ள வாசகர்களே!

எதிர்வரும் ஜுன் மாத இதழில் இரண்டு தொடர்ஆக்கங்கள் வெளிவரவிருக்கின்றன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். மழலைகள் மன்றம் ஒரு சித்திரத்தொடர்கதையையும், ஏனைய வாசகர்களுக்காக தொடர்கதையொன்றையும் ஆரம்பிக்கவுள்ளோம். இரண்டுமே பிரபலமானவர்களின் படைப்புக்கள். எனவே பிரதி கிடைப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பல அம்சங்களிலும் சஞ்சிகை சிறப்புற்று வருவதாக வாசகர்கள் தெரிவிப்பது உற்சாகமூட்டுகின்றது. பலர் ஆக்கங்களை அனுப்பி வைக்கின்றார்கள். சந்தா பத்திரங்களை சிலரே அனுப்பி வைக்கின்றார்கள். எதிர்காலத்தில் சந்தாதாரர்களுக்கென்று சிறப்பான போட்டிகளையும், பரிசுத்திட்டங்களையும் அறமுகம் செய்வது பற்றி ஆசிரியர் பீடம் ஆலோசித்துள்ளது. பொருத்தமான நேரத்தில் அவை முன்வைக்கப்படவுள்ளன.

**நன்றி!**

**ஆசிரியர்**













# தமிழ்உலகம்

# London

**வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்**
**அனைத்துலக தமிழ் சஞ்சிகை**
**மாத இதழ்**

**Annual subscription Application form**
**International Tamil Magazine**
**Monthly Issue**

ஒரு வருடத்திற்கு £12 பவுண்கள் மட்டுமே
For ONE YEAR £12.00 Only

Name : ____________________

Address : ____________________

____________________

____________________

Tel : ____________________

Email : ____________________

Signature : ____________________

Date :____/_____/2004

**சந்தாக்கட்டணம்:** காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டண மாகவோ அனுப்புவதாயின் TAMILULAGAM என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

**Subscription payments** : Cheques and postal orders made payable to :- TAMILULAGAM

**அனுப்பவேண்டிய முகவரி**

TAMILULAGAM
International Tamil Magazine
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

**Tel: 0044 20 8455 9001**
**Fax: 0044 20 8731 7870**

E.Mail: tu@globallanka.co.uk

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளும் அவற்றுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்களும்

Annual subscription including postage FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | $ 30 |
| Canada | $ 25 |
| Denmark | Kr125 |
| France | 20 € |
| India | Rs. 500 |
| Germany | 20 € |
| Italy | 20 € |
| Malaysia | MYR 75 |
| Netherland | 20 € |
| New zealand | 30NZD |
| Norway | Kr140 |
| Singapore | SGD 30 |
| Sri Lanka | Rs. 600 |
| Sweden | Kr 150 |
| Switzerland | SF 25 |
| United Kingdom | £ 12 |
| USA | $ 20 |
| All other country | US$20 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தெனாலி ராமன் வளர்த்த குதிரை

**கி**ருஸ்ண தேவராயரின் குதிரைப்படை மிகவும் பிரமாண்டமானதாகும். ஆயிரக்கணக்கான குதிரைகள் அவருடைய குதிரைப்படையில் இருந்தன.போர் இல்லாத சமாதான காலங்களில் அவ்வளவு குதிரைகளையும் பராமரிப்பதற்கு அதிக சிரமப்பட வேண்டி இருந்தது. செலவும் அதிகமாக ஆயிற்று.

செலவையும் நிர்வாகச் சிரமத்தையும் குறைப்பதற்கு மன்னர் ஒரு முடிவு செய்தார். குடி மக்களிடம் வீட்டுக்கு ஒரு குதிரையைக் கொடுத்து வளர்க்கச் சொல்லலாம். குதிரையை அவர்கள் வளர்ப்பதற்கு மாதா மாதம் ஒரு உதவித் தொகையைக் கொடுத்து விடலாம்.

இது தான் மன்னரின் திட்டம்.மன்னரின் திட்டம் முரசறையப்பட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.மக்கள் சாரி சாரியாக வந்து ஆளுக்கு ஒரு குதிரையை வளர்ப்பதற்காக வாங்கிச்சென்றார்கள். தெனாலி ராமனும் வளர்ப்பதற்கென தனக்கு ஒரு குதிரையையும் வாங்கிக்கொண்டான்.

குதிரையைப் பெற்றுச் சென்றவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குதிரையைக் கொண்டு வந்து காண்பித்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையும் போடப்பட்டது.

தெனாலி ராமன் குதிரை வளர்ப்பு தொடர்பாக தனது வழக்கமான வேலையைச் செய்யத்தொடங்கி விட்டான்.

அவன் குதிரையை ஒரு குடிசையினுள் அடைத்து வைத்தான். குடிசை வாசலில் சுவர் ஒன்றை எழுப்பினான். அந்த சுவரின் ஒரு பக்கத்தில் மட்டும் சிறு துவாரம் ஒன்று அமைத்தான். தெனாலி ராமன் அன்றாடம் ஒரு கைப்பிடி அளவு புல்லை மட்டும் எடுத்து அந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே நீட்டினான்.

குதிரை அந்த புல் கற்றையை வெடுக்கென பிடுங்கிக்கொள்ளும்.அந்த ஒரு கைப்பிடி புல் தான் குதிரைக்கு அவன் அளிக்கும் அன்றாட தீனி.குதிரை வயிறார உண்ண வழியில்லாத காரணத்தால் எலும்பும் தோலுமாக இளைத்திருந்தது. எந்த நேரத்திலும் உயிரை விட்டு விடக்கூடும் என்ற பரிதாப நிலையில் குதிரை இருந்தது.மன்னர் விதித்த நிபந்தனையின்படி குதிரை வளர்ப்பவர்கள் குதிரையை மன்னரிடம் கொண்டு சென்று காண்பிக்கக்கூடிய நேரம் வந்தது.

குதிரை வளர்ப்பவர்கள் தாங்கள் வளர்க்கும் குதிரைகளுடன் வந்து சேர்ந்தனர்.

தெனாலி ராமன் மட்டும் குதிரையுடன் வராமல் தான் மட்டும் வந்திருந்தான். மற்ற குதிரைகள் எல்லாம் மிகவும் கவனிப்புடன் நன்றாக வளர்க்கப்பட்டிருந்தன. அவை ஆரோக்கியமாகவும் பலத்துடனும் திகழ்ந்தன. மன்னர் தெனாலி ராமனை நோக்கி "தெனாலி ராமா உன்னுடைய குதிரை எங்கே" என்று கேட்டார்.

"மன்னாதி மன்னரே குதிரை மிகவும் வலிமையும் முரட்டுத்தனமும் கொண்டதாக உள்ளது. அதை இங்கே கொண்டு வந்தால் ஒரு ரகளையே செய்து இங்கே கூடியுள்ள மக்களுக்குப் பெருந் தொல்லையே விளைவித்து விடக்கூடும் என எனக்கு அச்சமாக உள்ளது. அருள் கூர்ந்து நமது குதிரை வளர்ப்புத்துறையின் தலைவரை என்னுடன் வீட்டுக்கு



அனுப்புங்கள். அவர் அங்கே வந்து நான் வளர்க்கும் குதிரையை பார்வையிடட்டும். அவர் என்ன கருத்து சொல்லுகின்றார் பாருங்கள்" என்றான் தெனாலிராமன்.அரசாங்க குதிரை வளர்ப்புத்துறை அதிகாரிக்கு நீண்ட தாடியிருந்தது.

அவர் மன்னரின் உத்தரவுப்படி தெனாலிராமனுடன் அவனுடைய வீட்டுக்குப் புறப்பட்டார். வீட்டை அடைந்ததும் "தெனாலி ராமா நீ வளர்க்கும் குதிரை எப்படி இருக்கின்றது" என்று அதிகாரி கேட்டார். குதிரையை அடைத்து வைத்திருக்கும் குடிசையைச் சுட்டிக்காண்பித்த தெனாலிராமன் "அதோ அவற்றிலிருக்கும் சிறு துவாரத்தின் வழியாக உள்ளே எட்டிப்பாருங்கள்" என்றான்

"இது என்ன விநோதமான ஏற்பாடாக இருக்கின்றதே! குதிரையை யாராவது இப்படி அடைத்து வைத்து வளர்ப்பார்களா?" என்று கேட்டார் அதிகாரி."இது முரட்டுக் குதிரையாக வளர்ந்து விட்டிருக்கின்றது. விட்டால் நம் இருவருடைய உயிரும் அதோ கதிதான். அதனால் இந்த துவாரத்தின் வழியாக மிகவும் ஜாக்கிரதையாக எட்டிப்பாருங்கள்" என்றான் தெனாலி ராமன்.

அதிகாரி பயந்து கொண்டே துவாரத்தின் வழியாக கழுத்தை உள்ளே நீட்டிப் பார்த்தார்.

அதிகாரியின் நீண்ட தாடியைக் கண்ட உடனே தெனாலி ராமன் வழக்கமாகக் கொடுக்கும் புல் என்று என்று எண்ணிக் கொண்டு 'லபக்'என்று அதனை வாயினால் கௌவிப் பிடித்துக்கொண்டது.

"ஐயோ ஐயோ என்று அலறியவாறு தாடியை குதிரையிடமிருந்து விடுவித்துக்கொள்ள படாத பாடு பட்டார்"

ஆனால் முடியவில்லை. குதிரையோ தாடியுடன் சேர்த்து அதிகாரியை உள்ளுக்குள் இழுத்தது."தெனாலி ராமா என் உயிரைக் காப்பாற்று" என்று அதிகாரி அலறினார்.

"நான் என்ன செய்ய முடியும். குதிரை அளவுக்கு அதிகமாக தீனியைத்தின்று கொழுத்துக்கிடக்கிறது" நீங்கள் தான் உங்கள் சாமர்த்தியத்தால் விடுபடவேண்டும்' என்று கூறி தெனாலிராமன் தூங்கி விட்டான்.

அதிகாரியின் ஜீவ மரணப் போராட்டத்தைக் கேள்விப்பட்ட மன்னர் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் தெனாலி ராமனின் வீட்டிற்கு விரைந்து வந்தார்.

குதிரை,அதிகாரியின் தாடியைப்பிடித்து உள்ளுக்குள் இழுக்க, அதிகாரியோ தாடியை காப்பாற்ற வெளியே இழுக்க, நடைபெற்றுக்கொண்டிருந்த போராட்டத்தைக்கண்டு மன்னர் திகைத்தார்.பிறகு காவலர்களை விட்டு அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்க நடவடிக்கை எடுக்குமாறு கூறினார்.

காவலர்கள் என்ன முயன்றும் அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்க முடியவில்லை.கடைசியில் அதிகாரியின் தாடியைக் கத்தரிக்கோலால் கத்தரித்து அதிகாரியைக் குதிரையிடமிருந்து மீட்டார்கள்.மன்னர் உத்தரவுப்படி குதிரை லயத்தின் முன்புறச்சுவர் இடித்துத் தள்ளப்பட்டது. உள்ளே பார்த்தால் நிற்கக கூட சக்தியில்லாமல் குதிரை எலும்பும் தோலுமாகக் காட்சி அளித்தது."தெனாலி ராமா குதிரை வளர்ப்பதற்காக நான் கொடுத்த நிதியை நீ தின்று கொழுத்து விட்டு, குதிரையை பட்டினி போட்டுப் பாழாக்கி விட்டாயே" என்று மன்னன் கோபித்துக் கொண்டார். தெனாலி ராமன் மன்னரை பவ்வியமாக வணங்கி "மன்னர் பெருமானே இந்த அளவுக்குக் குதிரைக்கு தீனி கொடுத்திருக்கும்போதே அதிகாரியின் தாடியை மீட்பது பெரும்பாடாகி விட்டது. இதற்கு வயிறு நிறைய தீனி கொடுத்திருந்தால் அதிகாரியை ஒரேயடியாக விழுங்கி ஏப்பமிட்டிருக்கும்" என்றான்.மன்னன் தன்னை மறந்து சிரித்து விட்டார்.

"தெனாலி ராமா உன்னுடைய நகைச்சுவை ஆற்றலால் ஒவ்வொரு தடவையும் தப்பித்துக் கொள்கின்றாய். நீ செய்த தவறை வேறு யாராவது செய்திருந்தால் மரண தண்டனை கொடுத்திருப்பேன். உன்னுடைய நகைச்சுவைப் பேச்சு உன் உயிரையே காப்பாற்றி விட்டது. என்றாலும் இந்த மாதிரி வாயில்லாப்பிராணிகளின் உயிரோடு விளையாடும் வழக்கத்தை இன்றுடன் விட்டு விடு " என மன்னர் எச்சரித்தார்.

## தமிழ் உலகம் மழலைகள் மன்றம்

**த**மிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும். அது மட்டுமல்லாது அடிக்கடி அங்கத்தவ சிறுவர்களுக்கிடையில் பலவிதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். உலகத்தில் தமிழர் வசிக்கும் பல நாடுகளுக்கு இந்தச்சஞ்சிகை செல்ல விருப்பதனால் வெவ்வேறு நாடுகளி லிருக்கும் சிறார்கள் இந்த சஞ்சிகையின் மூலம் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். அது மட்டுமன்றி சிறார்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொள்ளலாம். எனவே விரையுங்கள் செல்வங்களே! தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாகச்சேர நீங்கள் செய்யவேண்டியது இதுதான் . உங்கள் பெயர்,முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றையும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப் படத்துடன் அனுப்பி வையுங்கள் உல கிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம் தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.

முழுப்பெயர்........................................

வயது :........................................

முகவரி:........................................

........................................

தொலைபேசி:........................................

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கொன்றை வேந்தன்

16) கிட்டாதாயின் வெட்டென மற
(விரும்பிய ஒரு பொருள் கிடையாமல் போனால் விரைவில் அப்பொருளை மறந்து விடு)
17) கீழோராயினும் தாழ உரை
(கேட்பவர் உன்னிலும் தாழ்ந்தவராயினும் அவருடன் பணிவான சொற்களையே பேசு
18) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
(குற்றத்தையே ஆராய்ந்து பார்த்தால் நல்ல சுற்றத்தார் ஒருவரும் இலராவர்)
19) கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
(உன் கையில் இருப்பது கூர்மையான அம்பாய் இருந்தாலும் உன் வீரத்தன்மையை வியந்து பேசாதே)
20) கெடுவது செய்யின் விடுவது கருமம்
(உன் நண்பன் கெடுதலைச் செய்வான் ஆயின் அவன் நட்பை விட்டு விலகுவதே நல்ல செயலாகும்)

தொடரும்



## ஆங்கில எழுத்து 'F' இல் ஆரம்பிக்கும் பொருட்களுக்கு நிறம் தீட்டுங்கள்

### சந்தோஷமான தகவல்

தமிழ் உலகம் சஞ்சிகை உலக நாடுகள் பலவற்றுக்குக் கிடைக்கக்கூடியதாக வழி செய்துள்ளோம் தமிழ்உலகம் சிறுவர் மன்றத்தில் அங்கத்துவம் வகிக் கும் தமிழ்மொழி யில் எழுத முடியாத சிறார்கள் ஆங்கிலம், டொட்ச்,நொஷ்க்,பிரெஞ் இன்னும் பல மொழிகளில் கூட உங்களுடைய ஆக்கங்களை எழுதி; அந்த ஆக்கத்தின் தமிழ் மொழிஆக்கத்தையும் இணைத்து அனுப்பி வைத் தால் அவை எங்களுடைய மாதமலரில் தொடர்ந்து வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் உலகம் ஜுன் மாத இதழிலிருந்து பிரபல ஓவியரின் கைவண்ணத்தில் உருவாகி வரும் விறுவிறுப் பான சித்திரக்கதை ஆரம்பமாகவுள்ளது. சிறுவர்களுக்கு களிப்பூட்டும் 'த்ரில்'களுடன் படிப்பினைகளையும் நிறை யவே அள்ளித்தரும் இது சிறுவர்களுக்கு நல்விருந்தாக அமையும்

### ஒரே மாதிரியான முடிகளை சூடியுள்ள இரு அரசிகளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்



## பார்போற்ற வாழ்ந்திடு!

சின்னப் பாதங்கள் வைத்து - நீ
சிட்டுப் போலவே வந்து
சிறந்த கல்வியைப் பெற்று -
பார் போற்றிட வாழ்ந்திடு மகளே!

அன்னை மடிவிட்டு இறங்கி - நீ
அன்பு பயின்றிடு இங்கு
ஆசான் அறிவுரை கேட்டு -
என்றும் பண்பினைப் பேணிடு
மகளே!

வண்ணத் தமிழுடன் சமயம் - நீ
விரும்பிடும் சுற்றாடற்கல்வி
வாய்மொழி ஆங்கிலம்
அழகியல் - உயர்
கணிதமும் கற்றிடு மகளே!

- வாஹினி

## கவிமணித்தாத்தா

சின்னஞ்சிறிய பிள்ளைகள்
சேர்ந்து பாடி மகிழவே
இன்பமான கவிதைகள்
இயற்றித் தந்த கவிமணி!

பள்ளி தோறும் பிள்ளைகள்
பாடிப் பாடித் தினமுமே
துள்ளிக் குதிக்கச் செய்திடும்
தூய மனிதர் கவிமணி!

குழந்தை உள்ளம் குளிரவே
கொஞ்சுகின்ற முறையிலே
பழகு தமிழில் பாடல்கள்
பலவும் தந்த கவிமணி!

குருவி காகம் கிளியெல்லாம்
கூட்டி வந்து காட்டுவார்
அருமையாகப் பாட்டிலே
அன்புமிக்க கவிமணி!

வண்ண வண்ண மலரையும்
வட்டமான நிலவையும்
கண்ணின் முன்னே நிறுத்துவார்
கவிதையாலே கவிமணி!

புல்லைத் தின்னும் பசுவினை,
புலம்புகின்ற குதிரையை
நல்ல தோழன் நாயினை
நயந்து பாடும் கவிமணி!

மலரும் தொடுத்த மாலையும்
வாடிப்போகும் ஆயினும்
'மலரும் மாலையும்' என
வாடிடாத நூலையே

எங்களுக்குத் தந்தவர்
இன்பம் பொங்கச் செய்தவர்
தங்கமான கவிமணித்
தாத்தாவை நாம் போற்றுவோம்!

குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா

### தமிழ்உலகம் மழலைகள் மன்றம்

பெயர் : செல்வி.லோ. சரணிகா
முகவரி: துர்க்கை அம்மன் கோவிலடி, 2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



வயது - 08
வகுப்பு -04
பொழுது போக்கு - முத்திரை சேகரித்தல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கவிவலம்

## காலமறியாக்கூத்து

ஞாலம் முழுவதும்
நாங்கள் சுடர்விட
யாகம் செய்தவர்
பூமியில் விசச்செடி

தேவனின் ஒளிதரு
தேசியத்தலைவனின்
தேடலின் விளக்கொன்று
விரகத்தீயில்
விட்டிலாய் விழுந்திற்று

விடுதலை வேள்வியின்
பெரு நெருப்பு உறங்குவதாய்
உனக்கு நீயே
சமாதானம் செய்ததே
உன் காலத்தின் தவறு

தமிழனின் தேசியம்
பேசியதனால் தான்
நீ மிளிர்ந்தாய்
என்பதை மறந்து போனது
மாபெரும் தவறு

அகிலமும் உனை
அகமகிழ்ந்து வரவேற்றதும்
ஆரவாரித்து அரவணைத்ததும்
நீ தேசியத்தலைவனின்
தளபதி என்பதால் தான்!

பேச்சுவார்த்தையின் போது
உனை வட்டமிட்ட
கமெராக்களின் ஒளியும்
உன் வாய் வரை நீண்ட
ஒலி வாங்கியும் போலி கருணா!

புரியாமல் போயிற்றா..?
இல்லை உனக்கொர கவிதை
தேவை போல் இருந்ததா?

நீண்டு நெட்டுயர்
விடுதலை யாகத்தில்
நீ மேனகையாயிற்றாய்!

சமாதானப்போக்கில்
இவை சகஜமேயெனினும்,
புறம்போக்குத்தமிழர் போல்
நீயுமா ஒலி வாங்கிக்
காய்ச்சலில் சுருண்டாய்
கருணா?

உன் தவறுகள் கண்டதும்
நிறையவே குறைகளைச்
சொல்கின்றாய்!
அப்படிச்சொல்வதைக்கூட –
நீ
யாரிடம் சொல்கின்றாய்?
போனதுன் வீரம்
மாண்டதுன் விவேகம்!!

கிழக்கின் தேவைகள்
இருந்ததாய் அறிந்தால்
அதை நிவர்த்தி செய்திட
உனக்கு முடியும்..!
அதற்கான பாதையும்
தெரியும்...!

அதனை விடுத்து,
குற்றப்பட்டியல் உனைச்
சுட்டியதும்
பிரதேச வாதம் எதற்குத்
தேவை?
அசோசியேட் பிரசும், சன்
ரீவியும்
எப்படி உன் அடுக்களைக்கு
வந்தன?

உயிர்ப்பிச்சை கேட்டு தூது
வந்ததாய்
சந்திரிகா சொல்கின்றார்..!
சரணாகதியா?
சண்டைக்களத்தில்
சாதித்தவைகள்
உந்தன் திறமையென்று நீ
கூறுவதை
இனி நாங்கள் எப்படி
நம்புவது?

தொடை நடுங்கியாக மாறிய –
உனக்கு
பிரித்து ஓதி, மந்திரித்து நூல்
கட்ட
பிட்சுக்கள் கூட்டத்தை
பலேகல்ல
தொப்பிகலைக்கு
அனுப்புவவதாய்
செய்தி வரலாம்... யார்
கண்டது?

எனவே போனது போவென
புதிதாய் புறப்படும் புலியின்
சரிதம்
உனது சதியை உலகுக்கு
அறிவிக்கும்
விசச்செடி களைந்து
கிழக்கில் வீரம்
விளைவிக்கும்

ஆம் மேதினி போற்றும்
கிழக்கின்
விடியல் தானாய் நடக்கும்...
ஏனெனில் இது
காலமறியாக்கயவர்கள்
கூத்தேயன்றி
இதுவொரு புரட்சியல்ல......!

–சுதர்மா, கனடா

## விடிவு?

துயருறும்
எமதுள்ளங்களில்
புன்னகையில்லை
வேதனைக்கோடுகள்
விலாசம் எழுதி
முகாமிட்டு விட்டன
எங்கள் இதயமதில்
வெந்தழலில் வீழ்ந்து
துடிதுடித்து அவதியுறும்
விட்டிலின்
அகோர நிலை எமக்கும்
வேதைனையின் கோடுகள்
எமது முகங்களிலும்
எங்கள் நெஞ்சம்
குற்றுயிராய் கரிய சிறையினுள்
விடுதலைக்கான ஏக்க விழிப்
பார்வையுடன்
காத்திருக்கின்றோம்.
எங்களுக்கு எப்போது விடிவு?

கே.றொபட், இலங்கை

## உச்ச இன்பம்

தமிழ் படித்து தமிழ் படித்து தமிழ்
படித்து வருகின்றேன்!
தமிழ் படிக்க தமிழ் படிக்க தமிழ்
வளர்ந்து போகுதே!
தமிழ் முடிக்க நினைப்பவர்க்குத்
தமது ஆயுள்
நீளுமோ?
தாம் பிறந்து
நூறினுக்குள் தமிழ்
முடிக்க முடியுமோ?

தமிழ் எதென்று தெரிந்திடாமல் தமிழ்
படிக்க வந்ததால்
தமது வாழ்வில் பாதி வீணில் தம்மை
விட்டுப்போனதே!
தமிழ் தெரிந்து படித்திருப்பின் தமிழ்
முடித்திருக்கலாம்!
தமிழினோடும் ஒன்றி வாழ்ந்து தரணி
வென்றிருக்கலாம்!

எமது வாழ்வு போனதால் - இவை
திரும்பிடாமையால்
இனிப்பிறப்பில்லையால்
இருப்பவர்க்குச் சொல்லுவேன்,
உமது வாழ்வைத் தமிழினோடும்
ஒட்டி வாழ்ந்து பாருமின்!
உலகில் ஆரும் கண்டிராத உச்ச
இன்பம் காணுவீர்!

கவியிருக்க தேனிருக்க
பாலிருக்கக் கண்டுமே
கண்டவற்றைக்கலவை செய்து
உண்டு கொண்டிருக்கின்றோம்!
தனியவற்றை உண்டிருக்க தலையும்
பழுது பட்டிரா!
தமிழும் மூலை தன்னைத்தேடி
தலை கவிழ்ந்து நின்றிரா!

தாமரைத்தீவான்
இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப்போட்டி இல. 7




பெயர்:.........................................................................................

முகவரி:.......................................................................................

..................................................................................................

### இடமிருந்து வலம்

1) ஒன்றைச் செய்வதற்கு அல்லது ஏற்பதற்கு ஒருவர் தெரிவிக்கும் மறுப்பு(5)
7) வழக்கத்துக்கு மாறாக அதிக அளவில் உண்டாகும் திசுக்களின் பெருக்கத்தால் ஏற்படுவது (3)
8) மனிதத்தன்மை (4)
12) திருமாலைப் பரம் பொருளாகக்கொண்டு வழிபடும் இந்து மதப்பிரிவு(4)
15) இராணுவப்படையை இப்படியும் இப்படியும் சொல்லலாம் (4)
17) தீராத பகை உணர்வு (4)
20) குழந்தை (3)
23) நாட்டு வைத்தியத்தில் பயன்படுத்தப்படும் கறுப்பாகவும் சொரசொரப்பாகவும் இருக்கும் ஒரு வகை நீண்ட கொடி (4)
27) உடலிலிருந்தும், மனதிலிருந்தும் வேறானதாகக் கருதப்படும் பொருள் (3)(குழம்பியுள்ளது)
28) ரத்தக் கசிவுள்ள காயம் (3)
30) ஒரு இலக்கிய நாயகன் (3)
32) இரு கோடுகள் அல்லது இரு பரப்புகள் ஒன்றையொன்று சந்திக்கும் இடத்தில் உள்ள இடைவெளியின் அளவு (3) (குழம்பியுள்ளது)
34) ஒருவரை வரவேற்கும்போது / சந்திக்கும்போது நலம் விசாரிக்கும் அல்லது உபசரிக்கும் வகையில் சொல்லப்படுவது (4)
36) ஏக்கம் (3)

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.






38) ஒரு சிலர் உள்ளடங்கிய கூட்டம் (3)

### வலமிருந்து இடம்

4) சாய்வாகவும் துளிதுளியாகவும் விழும் மழை (3)
5) கருணை என்றும் சொல்லலாம் (2)
11) இது பாதாளம் வரை பாயும் (3) (குழம்பியுள்ளது)
16) கத்தி, அரிவாள் ஆகியவற்றை தீட்டுவதை இது பிடித்தல் என்பார்கள்(2)
19) உருண்டை அடிப்பக்கமும் நீண்ட கழுத்தும் சற்றுக்குறுகிய வாயும் கொண்ட பாத்திரம் (ஆய்வு கூடத்தில் பயன்படுத்துவது) (3)
21) உரிய நிலையிலிருந்து தரம் தாழ்த்திக் கேவலப்படுத்துவதாக அமைவது (4)(குழம்பியுள்ளது)
22) அட்சரக்காலங்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் கொண்ட சேர்க்கை (3)
25) பழங்கால ஆயுதங்களில் ஒன்று (2)
29) அணை, ஏரி முதலானவற்றில் தேவையான நீரை சீராக வெளியேற்றுவதற்கு ஏற்ற வகையில் திறந்து மூடக்கூடிய அமைப்பைக்கொண்ட சாதனம்(3) (குழம்பியுள்ளது)
31) புரிந்து கொள்ளக்கூடிய திறனும் முன் யோசனையும் இல்லாத தன்மை (3)(குழம்பியுள்ளது)
33) ஒரு பறவை (2)
35) உலர்ந்த இஞ்சி (3) (குழம்பியுள்ளது)
37) அரசுக்கருவூலம் (4)

### மேலிருந்து கீழ்

1) ஏழு ஸ்வரங்களையும் படிப்படியாக கீழிருந்த மேலாக ஒலி அளவில் உயர்த்தும் முறை (5)
2) அரசர்களின் ஆட்சிக் காலங்களில் போர்ப்படைகளுக்கு தலைமை தாங்கியவன் (5)
3) பனை மரப்பாளையின் இனிப்பான சாறு (4)
4) பொற்கொல்லர் பயன்படுத்தும் இடுக்கி போன்ற கருவி (4)
5) காயம் ஆறிய பின்பும் தோலில் அது இருந்ததற்கு அடையாளமாக தெரியும் பகுதி (4) (குழம்பியுள்ளது)
7) பால் தரும் மாடு (3)
9) மதுபானக்கடை (4)
13) திருமணத்தை இபபடியும் சொல்லலாம் (3)
14) நீர்த்துளி (3)
16 கடவுளின் எதிரியாகவும், தீய சக்தியாகவும் கருதப்படும் தீய ஆவி (4)
18) இறுமாப்பு (3)
19) மீனவர்கள் வாழும் கடலோரப்பகுதி அல்லது சிற்றூர் (4)
20) ஒரு நூலின் தரம் பற்றிய கருத்து (4)
24) உலகத்துக்கு முடிவு வந்து விட்டது போன்ற பெரும் அழிவு (5)
25) பனை ஓலையால் பின்னப்பட்ட பெரிய பெட்டி(4) (குழம்பியுள்ளது)
27) விளக்கெண்ணை எடுக்கப் பயன்படும் ஒரு வகை விதை (5)

### கீழிருந்து மேல்

7) அம்பு என்றும் சொல்லலாம் (2)
10) பாறை என்றும் சொல்லலாம் (2)
26) தீமை நிறைந்ததாகக் கருதப்படும் கடைசி யுகம் (2)

### குறுக்கெழுத்துப்போட்டி - இல : 5 இற்கான விடைகள்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ரி | 2 வி | ளை | வா | த 3 | ம் | | | மோ 4 | ன | ம் |
| ற | | ரு | | | க | | ம் | ர | க | ம | 5 ழு |
| பு 6 | தி | த் | மா | ன் | ப 7 | ச | லை | | ன | | |
| ப் | | த 8 | ச | ம | ம் | | ச | ன | ம் | ஞ் | அ 9 |
| மை | | ம் | | ம் | ம் | க | தி | 10 ஐ | | 11 உ | லை |
| ரி | பா 12 | ப் | ஒ 13 | 14 க | | ந 15 | தி | மூ | ல | ம் | |
| | த | | டி | | 16 க | ணை | யா | ழி | | தை | 17 கா |
| 18 பி | ர | த் | ய | ன | த | ம் | | | ணி | ர 19 | ப 20 |
| | 21 ச | வா | ல் | | க | | 22 ப | ச் | சோ | தி | ந் |
| 23 தீ | ம் | வ | ன | | ளி | | ம் | ச | ம் | வ | து 24 |
| 25 ப | ல | வ | ந் | த | ம் | | 26 கு | ங் | ப | ழ | டி |
| ம் | | | | மை | சு 27 | | 28 ம் | | ளி | மா | 29 கோ |

போட்டி இலக்கம் - 5 இற்கான சரியான விடையை அனுப்பி ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளையும்,10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப் பெறும் அதிஷ்டசாலி: P.பிரகாசினி,NO : 6, Pokuna Lane, Kowdana Road, Dehiwela.

### குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு பரிசுத்திட்டத்தை விரிவாக்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும்.

சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ் உலகம் இலவசபிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவசபிரதிகளும் பரிசாக வழங்கப்படும். குறுக்கெழுத்துப்போட்டி இல : 5 இற்கு ஏராளமானோர் விடைகளை அனுப்பி இருந்தாலும் ஒருவர் மட்டுமே சரியான விடையை அனுப்பி பரிசு பெறுகின்றார். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப்போட்டிக்கான அட்டவணை யுடன் உங்கள் விபரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு 31/05/2004 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்..

அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:

**Tamilulagam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**E mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:

**Tamilulagam**
**Meewella Building,7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1000**
**Fax : 0094 112 59 1003**
**E mail : globallanka@sltnet.lk**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# காதலைத்தேடவா?

அன்று ஞாயிற்றுக் கிழமை விடுமுறைநாள். ஆதலால், தன் குழந்தையையும் கூட்டிக்கொண்டு கடைத்தெருவுக்குப் புறப்பட்டாள் நிர்மலா. விடுமுறை நாளாகையால் போக்குவரத்துக்கான பஸ் வண்டிகளும் குறைவாகவே இருக்கும். அரைமணி நேரமாகக் காத்திருந்த அவள் பஸ் வண்டி வரவும் அதில் குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஏறினாள். கடை வீதியை அடைந்த நிர்மலா குழந்தையின் பிறந்தநாளுக்காக அழகான சட்டையொன்றைத் தேடிக்கொண்டிருந்தாள். அப்போதுதான் எதிர்பாராத விதமாகத் தனது பள்ளித்தோழி ரமாவைச் சந்தித்தாள். ஹாய் நிர்மலா... என்ற குரல்கேட்டுத் திரும்பிய நிர்மலா தன் தோழி ரமாவைக் கண்டு ஹாய் ரமா... என அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.ஆ... எத்தனை வரு'ங்கள் நாங்க பிரிஞ்சு... என்ற ரமா, வடிவான குழந்தை. என்ன பெயர்? ஏன்றவாறு குழந்தையைத் தூக்கிக்கொண்டாள். அடடே பாத்தியா என்னோட ஒட்டிக் கொண்டு... அழவேயில்லை. என்றவள் ஆசையுடன் கண்களை விழித்தபடி நின்ற நிர்மலாவிடம், ஏய்... என்னபெயர் எண்டு சொல்லவேயில்லையே...? என்றாள். ஆரணி என்று வைத்திருக்கிறன்... என்றாள் நிர்மலா.

ஓ... நல்ல பெயர். ஆரணி... ஒருக்கா சிரியுங்கோ... என்றவள், அது சரி நீ எங்கே இந்தப் பக்கம்... என்றாள்.

சும்மா... குழந்தைக்கு ஒரு ச'டை எடுக்கலாமெண்டு... என இழுத்தாள் நிர்மலா.

ஓ... அப்படியா...? சரி பாப்பம் என்றவள் ஒரு கடைக்குள் நுழைந்து, அழகான விலையுயர்ந்த சட்டையொன்றைத் தேடியெடுத்து விலை என்னவென்று கேட்காமலே கடைக்காரரிடம், இதைப் பைக் பண்ணுங்கோ... என்று கூறிச் சட்டைக்கான காசையும் தானே கொடுத்தாள். நிர்மலா எவ்வளவு தடுத்தும் கேளாமல் தனது கழுத்தில் கிடந்த சங்கிலியையும் கழற்றி, இதை என் பரிசாக வைத்துக் கொள்... என்று குழந்தையின் கழுத்தில் போட்டாள். நிர்மலாவுக்குத் தான் காண்பது கனவா என்பது கூடத் தெரி யாமல் நின்றவளிடம் உன்ரை வீட்டு அட்ரஸையும், ரெலிபோன் நம்பரையும் தா... என்று கேட்டாள் ரமா. தன் விலாசத்தைக் கொடுத்த நிர்மலா, உன்ரை அட்ரஸைச் செல்லவேயில்லையே... என்று கூறவும். ரமாவின் கணவர் வரவும் சரியாக இருந்தது.

ரமா... போவமா? ஏன்றார்.

நிர்மலா நான் உன்ரை வீட்டுக்கு வருவேன். அப்ப என்ரை விலாசத்தைத் தாறன். இப்ப அவசரமாப் போறன்... என்று கூறிக் குழந்தைக்கும், நிர்மலாவுக்கும் டாட்டா காட்டிவிட்டுக்கணவருடன் காரில் ஓடிச் சென்று ஏறிக்கொண்டாள். நிர்மலாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. குழந்தையின் கையைப் பிடித்தபடி கார்போன திசையைப் பார்த்தபடி நின்றாள். ரமாவுடன் எதுவும் கதைக்கவில்லையே. அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள். அவளுக்குக் எத்தனை குழந்தைகள்? ஆணா? பெண்ணா? ஏன எதுவும் கேட்காமல் வாயடைத்துப்போய் நின்ற தன்னைத் தானே திட்டிக்கொண்டாள் நிர்மலா.

ரமாவின் பாசத்தையும், பெருந்தன்மையையும் எண்ணி வியந்தாள் நிர்மலா. தானும் ஒரு சட்டையை வாங்கிக் கொண்டு குழந்தையையும் கூட்டிக்கொண்டு கடையைவிட்டு வெளியில் வந்தாள். குழந்தை ஆரணிக்கு இரண்டு வயதுதான் என்றாலும் கதைப்பதெல்லாம் விளங்கும். ஒவ்வொரு கடை கடையாகக் காட்டி ஆ... ஆ... என்று கூறியபடியே வந்தாள். குழந்தைக்காக மெதுவாகவே நடந்த நிர்மலா பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமே என்ற அவசரத்தில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வேகமாக நடந்தாள். பஸ் பிடித்து ஒருவாறு வீடு வந்த நிர்மலாவுக்கு ரமாவின் நினைவு வந்து வந்து தொல்லை கொடுத்தது. ரமாவும், அவளும் ஒன்றாகவே படித்து, ஒன்றாகவே சாப்பிட்டு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார்கள். திருமணம் செய்து ஒருவரை ஒருவர் பிரிந்து சென்ற பின் ஒருமுறை கூடக் காணமுடியவில்லை. ரமா திருமணம் செய்தது எல்லாம் ஒரு கனவு போல கண் முன் நிழலாடியது. நிர்மலா வசந்தனையும், ரமா சந்திரனையும் காதலித்ததும், இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதும் அவள் கண் முன் நிழலாடியது. ரமா தான் விரும்பியவனைக் கட்டமுடியாமல் பெற்றோரின் விருப்பத்திற்குத் திருமணம் செய்தபோது சந்திரனுக்கு ரமா செய்தது மிகப் பெரிய துரோகம் என நினைத்தாள். இதற்கு மாறாகத் தன்னுடைய காதலை நிறைவேற்ற அவளின் பெற்றோரின் சம்மதத்தைப் பெறப் போராடி இறுதியில் வெற்றியும் அடைந்தாள். தன் காதல் நிறைவேறியதை எண்ணி மகிழ்ச்சியுமடைந் தாள் நிர்மலா.

இன்று ரமாவைப் பார்த்தபோது காதலுக்காகப் போராடிய தன் வாழ்வையும், தாய், தந்தைக்காகத் தன் காதலை விட்டுக் கொடுத்த ரமாவின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள் நிர்மலா. எத்தனை செல்வச் செழிப்புடன் வாழ்கிறாள் ரமா. நான் செல்வத்தை மட்டுமா இழந்தேன்...? என் இனிய வாழ்வையுமல்லவா இழந்துவிட்டேன். என் பெற்றோர் எவ்வளவு பாடுபட்டனர்?

இது வேண்டாம் நிர்மலா... அவனைப் பற்றி விசாரித்தபோது ஏற்கனவே யாரையோ காதலித்ததாகவும், அவன் குடிப்பதாகவும், பலவாறாகப் பேசுகிறார்கள். உன் நன்மைக்காகவே சொல்கிறேன். நீ கேள் பிள்ளை நான் சொல்வதை... அவள் அம்மா எவ்வளவு கெஞ்சினாள். ஆனால் நிர்மலா எதனையும் கேட்கும் நிலையில் அப்போது இல்லை. இதனால் அவள் தந்தை வசந்தனைக் கூப்பிட்டு விசாரித்தபோது, தான் உயிருக்குயிராக நிர்மலாவைக் காதலிப்பதாகவும், தான் வெளிநாடு செல்ல விசா வந்துவிட்டதாகவும் வசந்தன் கூறினான். தன் பெற்றோரிடம் கேட்டுவிட்டே றிஜிஸ்ரேசன் செய்ய வந்திருக்கிறேன் என்றான். எதுவும் செய்ய முடியாத நிலையில் நிர்மலாவின் பெற்றோர் சம்மதத்தோடு றிஜிஸ்ரேசனும் இனிதே நிறைவேறியது.

காலப்போக்கில் வசந்தன் படிப்படியாகப் பொய் சொல்லி நிர்மலாவைத் தன்னுடன் கொழும்புக்குக் கூட்டிச் சென்றான். அவன் அங்கு கொம்பனியொன்றில் வேலை பார்த்தான். நன்றாகக் குடிப்பான். நண்பர்களுடன் சுற்றித்திரிவான். தான் திருமணம் செய்தவன் என்ற உணர்வேயின்றிக் கண்ட கண்ட பெண்களுடன் சுற்றுவதையே தொழிலாகக் கொண்டான். இதைத் தடுக்க நிர்மலா எவ்வளவோ போராடினாள். போராடியதுதான் மிச்சம். குடிக்காமல் இருந்தால் அன்பாக இருக்கும் அவன், குடித்துவிட்டால் என்ன செய்கிறேன் என்று அறியாத நிலையில் வசந்தன் இருந்தான். அவனது குடியை நிற்பாட்ட நிர்மலா பட்டபாடு அடி, உதைதான் மிச்சம். ஒரு நாள் அவளையே விலை பேசுமளவிற்குத் துணிந்து விட்டான். அந்தக் கொடூரமான சம்பவம் அவள் கண்முன்னே வந்தது.

ஒரு நாள் வசந்தன் தன் நண்பன் என ஒருவனைக் கூட்டி வந்தான். இப்படி அவன் அடிக்கடி யாரையாவது வீட்டிற்குக் கூட்டி வந்து விருந்து கொடுப்பது வழக'கம். அன்றும் அப்படித்தான் என நிர்மலா நினைத்துக்கொண்டாள். இருவரும் குடிபோதையில் இருந்தனர். நிர்மலாவோ அவர்கள் இருந்த பக்கம் வரவேயில்லை. வசந்தன் அவளைத் தேடிக்கொண்டு சமையலறைப் பக்கம் வந்தவன் என்ன செய்யிறாய்... என அன்பாகக் கேட்டான். சமையலுக்குச் சாமான் எதுவும் இல்லை. ஏன் ஆக்க ளைக் கூட்டிக்கொண்டு வந்த நீங்கள்? என்றாள். அப்ப நான் போய் சாமான் வாங்கிக் கொண்டு வாறன்... என்றவன், வா... அவனை அறிமுகம் செய்து வைக்கிறேன் என்று கூறி அவளது கையைப் பிடித்து முன்னறைப் பக்கம் கூட்டிச் சென்றான். யாராயிருக்கும்...? இப்படி ஒருநாளும் செய்ய மாட்டாரே...! யோசித்தபடியே அவனுடன் சென்றாள்.

முன்னறைக்கு வந்தபோது அவனை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான் வசந்தன். அவனை அன்றுதான் முதன்முதலாகப் பார்க்கிறாள் நிர்மலா. ஒப்புக்குச் சிரித்துவிட்டு வீட்டினுள் செல்லத் திரும்பியபோது, நிர்மலா நான் சாமான்கள் வாங்கிக்கொண்டு வாறன். அதுவரை இவர் இங்கே இருக்கட்டும்... என்றவாறு அவனைத் திரும்பிப் பார்த்து அவனருகில் போய் எல்லாம் சொல்லியிருக்கிறேன். ஓகே... என்று கூறி நிர்மலாவிடமும் விடைபெற்றான். இப்பவே இரவு எட்டு மணியாகிவிட்டது. இருப்பதைக் கொண்டு ஏதாவது சமைக்கிறேன். நீங்கள் வாருங்கோ... என்றாள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் கெதியில் வந்து விடுவன்... என்று புறப்பட்டுச் சென்றான் வசந்தன்.

நீங்கள் வசந்தனுடன் வேலை செய்யிறீங்களா? என வசந்தனின் நண்பனைக் கேட்டாள் நிர்மலா. இவருடன் உங்களுக்கு எப்படிப் பழக்கம்? என்றாள். நாங்கள் மதுபான சாலையில் தான் சந்திப்போம். ஓ... அந்த நண்பர்கள்தான் இவருக்கு அதிகம். நீங்கள் கலியாணம் செய்தனீங்களோ? ஆ... ஆ... என்ன கேட்டீங்கள்? என்றான் அவன். கலியாணம் செய்திட்டீங்களோ என்று கேட்டனான்? ஓ... அதுவா...? ஓமோம்... ஆனால் இப்ப பிரிஞ்சிட்டோம்... ஓ... ஏன்...? என்றாள் நிர்மலா. அவள் சரியான வாய்க்காரி... என்றான். நீங்கள் இப்படிக் குடிச்சால் எந்தப் பெண்ணும் வாய்காட்டாமல் இருக்கேலுமா? அது ஏன்? என் கணவருடனும் இதுதான் எனக்கும் பிரச்சனை. என்னாலையும் பொறுக்க முடியேல்லையென்றால் உங்கட மனைவி செய்ததைத் தான் நானும் செய்ய வேண்டிவரும். வீட்டில் வைத்துக் கொஞ்சம் குடிக்கலாம். மற்றப்படி பார் எல்லாம் போய் குடிச்சீங்கள் என்றால் உங்கட பணம் எல்லாம் போய் உங்கட மதிப்பு, மரியாதை எல்லாம் இழந்து விடுவீங்கள். இதையே என் கணவரிடமும் சொல்லி வாறன். அவரும் கேட்காவிட்டால் நான் பிரிஞ்சு போவதைத் தவிர வேற வழியில்லை. சாப்பாடும் இல்லாமல் என்னால அடி, உதையும் வாங்கிக்கொண்டு வயித்திலிருக்கும் பிள்ளையையும் பெற முடியாது. நீங்களே கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ...? இரவு பன்ரெண்டு மணியாகிறது இப்ப வாறன் எண்டு போனவர் இன்னும் காணேல்லை. உங்களையும் பசியோட கூட்டிக்கொண்டு வந்து இருத்திப்போட்டுப் போய்விட்டார். நான் என்ன செய்யிறது என்றே தெரியவில்லை...?

சாப்பாடு ஏதும் செய்து தாறன் இருங்கோ... அவன் வந்த நோக்கம் ஏதும் அறியாத நிர்மலா பேசிக்கொண்டே போனாள். அவனுக்கோ நிர்மலாவின் பரிதாப நிலை குடிபோதையிலும் உளளத்தை என்னவோ செய்தது. உள்ளே சென்ற நிர்மலா சாப்பட்டுத் தட்டுடன் திரும்பி வந்தாள். நீங்கள் சாப்பிடுங்கோ அவரைக் காணேல்லை... என்றவள் அவனிடம் தட்டை நீட்டினாள். அவனுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. தட்டை வாங்கிச் சாப்பிட்டான். பாய் ஒன்றை வாங்கி விரித்துக்கொண்டு படுத்துத் தூங்கியும்விட்டான். வசந்தனைக் காணாத நிர்மலா தானும் அறைக்குள் சென்று படுத்துக்கொண்டாள். திடுக்குற்று எழுந்து நேரத்தைப் பார்த்தாள் நிர்மலா. கடிகாரம் ஐந்து மணியைக் காட்டியது. மெதுவாக எழுந்து சென்று அவன் படுத்திருந்த முன்னறையைப் பார்த்தாள். வெறுமையாக இருந்தது. எங்கே ஆளைக் காணவில்லை என அறைக்குள் வந்து பார்த்தபோது அவன் படுக்கையில் ஒரு பேப்பர் மடித்தபடி இருந்தது. அதை அவன் தவறுதலாக வைத்திருப்பானோ... எதற்கும் எடுத்துப் பார்ப்போம்... என்று எடுத்து விரித்துப் பார்த்தாள். அதில்...

அன்புள்ள சகோதரி, உங்களின் நல்ல உள்ளத்தைக் கண்டேன். உங்கள் கணவர் உங்களை எனக்கு ஒப்படைத்துப் பணமும் பெற்றுக் கொண்டு போய்விட்டார். நான் உங்களின் நல்ல மனதைப் புரிந்துகொண்டு உங்களுக்கு எதுவித கெடுதலும் செய்யாது வெளியேறுகின்றேன். இனியும் உங்கள் கணவரை நம்பியிருக்க வேண்டாம். இன்னும், யாருக்கும் உங்களை விலை பேசவும் கூடும். எனவே உங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். இதுவே நான் கூறும் புத்திமதி என்று எழுதியிருந்தான்.



